# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு. குலாம் முஹம்மது**

Volume-14
Issue-4

மே-2021 (ஷவ்வால்-1442)

விலை ரூ. **20 /-**



## இஸ்ரேலை ஹமாஸ் வென்றது எப்படி?





கொரோனா 2வது அலை

## பிணங்களாக குவியும் குடிமக்கள் யார் காரணம்?



## நேதாஜி மதமும் மனிதநேய பணிகளும்

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

"

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;

(அல்குர்ஆன் 4 : 1)

"


இஸ்ரேலை ஹமாஸ் வென்றது எப்படி? - 4

யூதர்களுக்கு ஆதரவளிக்கும் கிறிஸ்துவர்கள் உண்மை என்ன? - 11

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 15

கொரோனா 2வது அலை – பிணங்களாக குவியும் குடிமக்கள்... யார் காரணம்? – 19

உத்திரப்பிரதேசத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்டஆசிரியர்கள் மரணம்.... – 24

கொரேனா மரணங்கள் ஆகஸ்டில் 10 லட்சம் ஆகுமா? – 25

கோவிட் மரணங்களை மறைக்கும் குஜராத் அரசு – 28

இஸ்லாமிய மார்க்க அறிஞர் அலீ மியான் அவர்களும் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் சந்தித்தபோது - 30

விடியல் வேதாந்தாவுக்கா? - 31

ரபேல் ஒப்பந்தம் இடைத்தரகருக்கு ரூ. 8.6 கோடி - 39

நெல்லி படுகொலை - 42

பி.ஜே.பி. ஆட்சியில் விடுதலை செய்யப்பட்ட தீவிரவாதிகள் - 46

நேதாஜி மதமும் மனிதநேய பணிகளும் - 50

சிலுவைப்போர்கள் 2.0 - 52

தலையங்கம் - 54

சீனாவில் இஸ்லாம் - 56

மகளிர் மன்றம் - 60

மருத்துவம் - 63



மே-2021 ரமழான்-1442

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A., Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.

**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



# இஸ்ரேலை ஹமாஸ் வென்றது எப்படி?

பாதுகாவலுக்கு வழிதேடி வந்து புலி வாலை புடித்தால் என்ன நடக்கும்!. அதுதான் இஸ்ரேலின் கதி. இஸ்ரேல் சர்வ வல்லமை பொருந்திய அரசு என்றாலும் அதன் நிம்மதி தினம் தினம் பறிபோகிறது. அதன் உச்சக்கட்டம் தான் இந்த போரில் நடந்தது.

இஸ்ரேல் – பாலஸ்தீன போர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. தற்காலிக போர் நிறுத்தத்தின் அடிப்படையில் 11 நாட்களாக நடந்த போர் முடிவுக்கு வந்திருக்கிறது.

ஒரு நாடு போர் நிறுத்தத்திற்கு வருகிறது, அதுவும் சர்வ வல்லமை பொருந்திய நாடு என்று சொல்லக்கூடிய இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டிருக்கிறது என்றால் அதன் பாதிப்பு எதிர்தரப்பை விட இஸ்ரேலுக்கு அதிகமானதாக இருந்திருக்கிறது என்பதே உண்மை.

உதாரணத்திற்கு சமீபத்தில் ஆப்கான் பகுதியில் இருந்து அமெரிக்க படை வெளியேற்றத்திற்கான ஒப்பந்தம் நடந்தது. இதனை ஆப்கானில் அமெரிக்க படைக்கு எதிராக செயல்படும் தாலிபான்களின் வெற்றியாகவே அனைத்து சர்வதேச பத்திரிக்கைகளும் எழுதினார்கள். காரணம் அமெரிக்கா விட்டுக் கொடுத்து போகவில்லை. கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டனர். அதனை மறைப்பதற்கு அமெரிக்கா ''அமைதி ஒப்பந்தம்'' என்று மீசையில் மண் ஒட்டவில்லை என்றார்கள்.

இது தான் இஸ்ரேல் பாலஸ்தீன் போரிலும் நடந்திருக்கிறது. இந்த போரில் இழப்புகள் யாருக்கு அதிகம் என்று கணக்கெடுத்தால் கண்டிப்பாக பாலஸ்தீனிய மக்களுக்கு தான் உயிரிழப்பும், பொதுமக்களின் வாழ்வியல் இழப்பும் அதிகம். ஆனால் இது பாலஸ்தீனிய மக்களுக்கு புதிது அல்ல. போர் சமயத்தில் கூடுதல் மரணங்கள் மற்ற நேரங்களில் மரணங்களின் எண்ணிக்கை குறைவு என்ற அளவில் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டு கொண்டே தான்இருக்கிறார்கள். ஆனால், இஸ்ரேலில்பொது மக்கள் பலி என்பது சுத்தமாக கிடையாது, அதே நேரத்தில் பொருளாதார இழப்பிலோ அல்லது இராணுவ கட்டமைப்பின் தோல்வி என்று இந்த போரை அணுகினால் அது இஸ்ரேலுக்கு பெரும் தோல்வியை கொடுத்திருக்கிறது. அது தான் இஸ்ரேலை போர் நிறுத்தத்தின் பக்கமும் நகர்த்தியிருக்கிறது.

இஸ்ரேல் – பாலஸ்தீன் போரை நில ரீதியாக தெளிவாக புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்த போரில் களத்தில் உள்ளவர்கள் இஸ்ரேலும், காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸ் பகுதியினர் மட்டும் தான். உலக நாடுகளில் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளும், UAE சவூதி போன்ற அரபு நாடுகள் இஸ்ரேலின் பக்கமும், ஈரான், துருக்கி போன்ற நாடுகள் பாலஸ்தீன் பக்கமும் நின்றன.

இந்த போரில் சண்டையிடுபவர்கள் இஸ்ரேலும் காஸாவும் மட்டும்தான். உலக நாடுகள்

பேச்சுவார்த்தையில் தான் பங்கெடுத்தது தவிர போரில் இல்லை.

இஸ்ரேல் தமிழ்நாட்டை விட ஆறு மடங்கு சிறிய நிலப்பரப்பு கொண்டது. இதுவே காஸா பகுதி 360 மடங்கு தமிழ்நாட்டை விட சிறியது.

அதாவது காஸா தன்னை விட 60 மடங்கு பெரிய நிலப்பரப்பு கொண்ட ஒரு நாட்டுடன் சண்டையிடுகிறது.

இதில் காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸிடம் இஸ்ரேலிடம் இருப்பது போலான பெரிய நவீன ஆயுதங்கள் கிடையாது. 100 கி.மீ மட்டுமே செல்லக்கூடிய ராஃக்கெட்டுகளை வைத்து தான் தாக்குகிறார்கள். ஆனால் இஸ்ரேல் உலக அளவில் இருக்கும் அதிநவீன ஆயுதங்களை கையில் வைத்திருக்கிறது.

உதாரணத்திற்கு சொன்னால், காஸா சென்னையை விட மிக சிறியது.

இதற்குள் 25லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள். இதில் 12லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கிறார்கள். இஸ்ரேலிய பகுதியில் இருக்கும் முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும் கூட காஸாவிற்குள் அடைக்கலம் புகுவார்கள். இஸ்ரேலில் மொத்தம் 90 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள். இதில் இஸ்ரேலிய குடியுரிமை பெற்றவர்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி வழங்கப்படுகிறது. அதனால் இஸ்ரேலிய மக்கள் சாதாரணமானவர்கள் இல்லை. இராணுவ பயிற்சி பெற்றவர்கள்.

இப்படியொரு நிலையில் காஸா தனது சிறு பகுதிக்குள் ராக்கெட் தளங்கள் அமைத்து எதிரிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டும். பொதுமக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

இந்த சூழல் புரிந்து இஸ்ரேல் – காஸா பிரச்சனையை பாருங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்த கண்ணோட்டத்தில் இனி இந்த போரின் விளைவுகளை அணுகுங்கள். அதாவது,

உதாரணத்திற்கு, மதுரை மாவட்டம் முழு தமிழ்நாட்டையும் எதிர்த்து சண்டை போடுகிறது என்பது தான் காஸா– இஸ்ரேல் சண்டை.

இதில் மதுரை மாவட்டத்திற்குள் தனிப்பட்ட எந்த வசதியும் கிடையாது, மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைக்கு கூட தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களை சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. இதே நிலை தான் காஸா VS இஸ்ரேலில் நிலவுகிறது. இனி விரிவாக பார்ப்போம்

## இஸ்ரேல் – பாலஸ்தீன் போர் 2021

தொடக்கத்தில் அல் அக்ஸா மசூதியில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பு, இஸ்ரேலின் வீதிகளில் முஸ்லிம்களுத்திரான கோஷங்களை எழுப்பி யூதர்கள் கலவரத்தில் ஈடுபடுதல், முஸ்லிம்களை செய்க் ஜர்ராஹ் பகுதியிலிருந்து வெளியேற்றல் என தொடர்ந்த இஸ்ரேலிய வன்முறைக்கு எதிராக காஸா பகுதியில் இருந்து ஹமாஸ் எதிர்ப்பை காட்ட தாக்குதலை தொடங்கியது. இது போராக உருவெடுத்து 11 நாட்கள் முடிவில் போர்நிறுத்தம் நடந்திருக்கிறது. இதனை இஸ்ரேலின் தோல்வியாகவும், பாலஸ்தீனியர்களின் வெற்றியாகவுமே சர்வதேச பத்திரிக்கையாளர்கள் பார்க்கிறார்கள்.



இதில் இஸ்ரேல் – காஸா பகுதியின் போரின் வெற்றி, தோல்வி பற்றி ஆராய்வோம்.

## காஸாவின் தாக்குதல்கள்

இஸ்ரேலிய அரசு காஸா பகுதியை தான் தனக்கு பெரும் தலைவலியாக எப்போதுமே பார்க்கிறது. யூதர்களின் முழுமையான பாலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு தடையாக இருப்பது காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸ் அமைப்பினர் மட்டும் தான்.

காஸாவிற்கு எளிமையாக போய் வர முடியாது. ஒன்று, இஸ்ரேல் தூதரக அனுமதியுடன் செல்ல வேண்டும் அல்லது எகிப்து தூதரக அனுமதியுடன் மட்டுமே செல்ல வேண்டும்.

காஸாவின் மின்சாரத்தேவையும் பெரும் பாலும் இஸ்ரேலிய அரசை சார்ந்தே இருக்கிறது. இந்த போரில் இஸ்ரேலின் தரப்பில் இருந்து காஸாவுக்கு கிடைக்கும் மின்சாரம் முழுக்க தடை செய்யப்பட்டது.

இத்தனை தடைகளுக்கு மீறி தான் இஸ்ரேலை எதிர்கொண்டது ஹமாஸ்.

## தொடக்க தாக்குதல்

போரின் தொடக்கத்தில் இருந்தே ஹமாஸ் தங்கள் எதிர்ப்பை காட்ட தயங்கவில்லை. இஸ்ரேல் தங்களை பயமறுத்த முடியாது என்று வெளிப்படையாக அறிவித்தார்கள்.

11ம் தேதி இஸ்ரேலின் முக்கிய நகரில் ஹமாஸின்தாக்குதல் தொடங்கியது. அப்போதே இஸ்ரேலின் விமான போக்குவரத்து மூடப்பட்டு மக்கள் பதுங்கு குழிகளில் அடைக்கலம் ஆகினார் கள். இந்த தாக்குதலுக்கு பிறகு ஹமாஸை ஒழித்து கட்டுவோம் என்று இஸ்ரேல் கூறியதற்கு பதிலடியாக நாங்கள் எதற்கும் தயார் என்று பதிலறிக்கை விட்டனர் ஹமாஸ் அமைப்பினர்.

இஸ்ரேலின் மத்திய பகுதியை தாக்கும் அள வுக்கு ஹமாஸின் பதிலடி இருக்கும் என்பதையும் தனது தடுப்பு ஏவுகணையான IRON DOME ஹமாஸின் ஏவுகணைகளை தடுக்க தவறியது என்பதும் இஸ்ரேலிய படைக்கு பெரும் அதிரிச்சியாக இருந்தது.

இதற்கு விளக்கம் அளித்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பால் 24 மணி நேரத்திற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாது என்றும் அறிவித்தது.

ஹாமாஸின்தொடர்தாக்குதலில்இஸ்ரேலிய இராணுவ வீரர் பலியானார். அதைவிட மோச மான தாக்குதலாக இஸ்ரேலின் எய்லாட்–அஸ்கெலான் (Eilat-Ashkelon oil pipeline) ஆயில் பைப்பாதையை ஹமாஸின் ராக்கெட் தாக்கியது. இந்த பைப்லைன் 254கி.மீ தொலைவு கொண்ட இஸ்ரேலின் மிக முக்கியமான வர்த்தகமாக இருக்கிறது. இந்த பைப்லன் வர்த்தகத்தில் UAE அரசுக்கும் தொடர்பிருக்கிறது. அதனால் தான் UAE இஸ்ரேலுக்கு ஆதரவாக ஹமாஸ் அமைப் பினர் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று தொடக்கத்திலேயே அறிக்கை வெளியிட்டது.



இந்த பைப்லைன் தாக்குதலுக்கு பிறகு பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பிருப்பதால் இஸ்ரேல் அதிக கவனத்துடன் ஹமாஸின் தாக்குதலை எதிர்கொண்டார்கள்.

தங்களது IRON DOME ஏன் இந்த தாக்குதலை தடுக்கவில்லை என்ற கேள்விக்கு சின்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது. பேட்டரி மாற்றி அதனை விரைவில் சரி செய்து விடுவோம் என்று பதில் கொடுத்தார்கள். (அண்ணாச்சி இதுல பேட்டரி இல்ல– சந்தானம் காமெடி)

இதனோடு ஹமாஸின் ராக்கெட் தாக்குதல் இஸ்ரேலின் டைமானோ நகரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நகரம் தான் இஸ்ரேலின் அணு ஆயுத உற்பத்தி நடைபெறும் இடமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. அணு ஆயுத சோதனை இடத்தில் ராக்கெட் தாக்குதல் நடந்ததை பெரிய ஆபத்தாக கருதினார்கள் இஸ்ரேலியர்கள்.

இந்த தொடக்க தாக்குதலே இஸ்ரேல் இராணுவத்துக்கு ஹமாஸின் பலத்தை புரிய வைத்தது. இஸ்ரேலின் இந்த பாதிக்கப்பட்ட செய்திகள் முழுக்க இஸ்ரேலிய அதிகாரப்பூர்வ செய்தி தளமான TIMES OF ISRAEL–P வந்தது.

இந்த தாக்குதல் தொடர்பாக எழுதிய ஆங்கில இந்து பத்திரிக்கை 2014 இஸ்ரேல்–காஸா போரையும் தற்போதைய சூழலையும் குறிப்பிட்டு எழுதியது. அதில், "ஹமாஸ் 4000 ராக்கெட்டுகளை மொத்தம் 50 நாட்களில் வீசியது, தற்போது இரண்டு நாளில் 850 ராக்கெட்டுகளை வீசியிருக்கிறது. அதுவும் சில நிமிடங்களுக்குள் ஒரே நேரத்தில் 100 ராக்கெட்டுகளை ஹமாஸினால் அனுப்ப முடிகிறது என்றால் ஹமாஸ் இந்த போர் சூழலுக்கு தயாராகவே இருந்திருக்கிறது." என்று குறிப்பிட்டது.

## இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் சிறைப்பிடிப்பு

இஸ்ரேலின் இராணுவ வீரர்களை சிறை பிடித்தது ஹமாஸ் இராணுவ அமைப்பு. ஆனால் இதனை செய்திகளில் பரவாமல் பார்த்து கொண்டது இஸ்ரேலிய ராணுவம்.

ஹமாஸின் இந்த யுக்தியை முறியடிக்க இராணுவ வீரர்கள் மிலிட்டரி உடையில் நடமாடாமல் பொது மக்கள் போல் இருக்க வேண்டும் என்று இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

## இராணுவ வீரர்கள் மீது தாக்குதல்

இஸ்ரேலில் பொது மக்கள் பலி குறைவாகவும், காஸா பகுதியில் பொதுமக்கள் பலி அதிகமாக இருப்பதற்கு காரணம், இஸ்ரேலிய ஏவுகணைகள் பொது மக்களை குறி வைக்கின்றன. ஹமாஸ் அமைப்பினர் ஏவும் ஏவுகணைகள் இஸ்ரேலின் இராணுவ தளங்களையும், வீரர்களையும் குறி வைக்கின்றன.

ஹமாஸின் முதல் தாக்குதலில் இஸ்ரேலின் இராணுவ வீரர் ஒருவர் பலியானார். அதனை தொடர்ந்து இஸ்ரேலின் ஜிக்கிம் இராணுவ தளத்தில் ஒரு ஏவுகனை தாக்குதல் நிகழ்த்தியது ஹமாஸ். இதில் பத்து இராணுவ வீரர்கள் வந்த புல்லட் புரூப் கொண்ட இராணுவ வாகனம் தாக்குதலுக்கு உள்ளானது. ஆனால், ஒரு இராணுவ வீரருக்கு காயம் மற்ற வீரர்களுக்கு காயம் இல்லை என இஸ்ரேல் கூறுகிறது.

## இணைய வழித்தாக்குதல்

ஹமாஸ் அமைப்பின் மற்றொரு மிகப்பெரிய பலம் இணையவழித்தாக்குதலை இஸ்ரேல் மீது நிகழ்த்துவது. கடந்த காலங்களில் பல முறை இஸ்ரேலின் அதிமுக்கிய ரகசிய தளங்களில் ஹேக்கிங் செய்து பல தகவல்களை எடுத்திருக்கிறார்கள்.

சென்ற வருடம் 2020ல் பல்வேறு இஸ்ரேலிய இராணுவ வீரர்களின் போன்களை ஹேக் செய்து இஸ்ரேலின் ரகசிய தகவல்களை எடுத்தனர்.

ஹமாசின் இந்த டிஜிட்டல் பலத்தை உணர்ந்தே இஸ்ரேல் இராணுவம் வீடுகளில் உள்ள வெப்கேமராக்களையும், பாதுகாப்பு கேமராக்களையும் நிறுத்தி வைக்க (off) உத்தரவிட்டது. காரணம், இஸ்ரேலின் ஒவ்வொரு நடவடிக்கையும் கேமராக்களை ஹேக்கிங் செய்து ஹமாஸ் அமைப்பினர் தெரிந்து கொள்ளக்கூடாது என்று கூறினார்கள்.

அதுமட்டுமல்ல, போருக்கு நடுவில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலின் முக்கிய ரகசிய இணையதளத்தை ஹேக் செய்து இஸ்ரேலுக்கு உளவு பார்க்கும் 40 பேரை காஸாவில் கைது செய்தார்கள்.

இஸ்ரேலின் IRON DOME என்ற தடுப்பு ஏவுகணை 2011ல் உருவாக்கப்பட்டது. அப்போதிலிருந்து இன்று வரை அதன் எரிபொருளிலோ, செயல்பாட்டையோ இஸ்ரேல் மாற்றவில்லை. ஆனால், அதன் சாப்ட்வேரை மட்டும் தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டே இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் ஹமாஸின் ஹேக்கிங் திறன்.

## ஹமாஸின் ஆயுத பலம்

போரின் பொது ஹமாஸ் ஆயுத பலத்தையும் இஸ்ரேலின் எதிர் நடவடிக்கையையும் TIMES OF ISRAEL என்ற இஸ்ரேலிய பத்திரிக்கை வெளியிட்டது.

அதில், இஸ்ரேலின் ராணுவ தளபதி சொல்லும் போது

இதுவரை(மே 18 வரை) மொத்தம் 4000 ராக்கெட் ஏவுகணைகள் இஸ்ரேலின் மீது வீசப்பட்டிருக்கிறது. இதில் பாதியளவு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் மோட்டார் குண்டுகள்.

இஸ்ரேலிய இராணுவத்தினர் பயம் கொள்ளும் முக்கிய விடயங்களில் ஒன்று, ஹமாஸ் அமைப்பு தன்னிடம் இருக்கும் பலம் பொருந்திய ஏவுகணைகளை இந்த போரில் பயன்படுத்தவே இல்லை. அந்த ஏவுகணை பல நூறு கிலோ கொண்ட வெடிபொருட்களை கொண்டது. அது ஏவப்பட்டால் அதனை தடுப்பதும் கடினம். ஆபத்தும் பெருமளவு இருக்கும். 2019ல் இதுபோல் ஹமாஸ் அமைப்பினரால் ஏவப்பட்ட அந்த ஏவுகணையால் பாதிப்பு பெருமளவு இருந்தது என இஸ்ரேலிய இராணுவ அதிகாரி குறிப்பிட்டார்.

என்ன காரணத்தினால் தங்களிடம் இருக்கும் ஆபத்தான ஏவுகணைகளை பெருமளவில் உபயோகிக்கவில்லை என்று தெரியவில்லை என்றும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி குறிப்பிடுவது போல சக்தி குறைந்த ராக்கெட்டுகளை வைத்து இஸ்ரேலுக்கு இத்தகைய பாதிப்புகளை உருவாக்கியிருக்கிறது என்றால் ஹமாஸின் தொடர் தாக்குதல்கள் இஸ்ரேலின் இமேஜை உலகளவில் சிதைத்து விடும் என்று இஸ்ரேல் கண்டிப்பாக உணர்ந்திருக்கிறது.

ஹமாஸ் பகுதிக்கு எந்த உலக நாடுகளுடனும் ஆயுத உற்பத்தி விற்பனை கிடையாது. ஆனால் இஸ்ரேலின் ஆயுத விற்பனை உலகின் பல நாடுகளுடன் இருக்கிறது. இந்தியாவிற்கு கூட ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக அதிக ஆயுதங்களை விற்பனை செய்வது இஸ்ரேல் தான்.

இந்த நிலையில் இஸ்ரேலை ஒரு மிகச்சிறிய குழு பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது என்ற நிலை உருவானால் இஸ்ரேலின் ஆயுத விற்பனை பெருமளவு பாதிக்கும். இஸ்ரேலின் ஆயுதங்களை மிகச்சிறிய குழு வென்றிருக்கிறது என்பது இஸ்ரேலின் ஆயுதங்கள் மீது உலக நாடுகள் சந்தேகத்தை உருவாக்கும்.

உதாரணத்திற்கு அஜர்பைஜானின் போரில் அர்மீனியா வைத்திருந்த ரஷ்யாவின் அதிதீவிர தடுப்பு ஏவுகணை S-300ஐ துருக்கியின் ட்ரோன்கள் மூலம் அஜர்பைஜான் அழித்து காட்டியது. இதுவே போர் நிறுத்தத்திற்கு காரணமாக மாறி அஜர்பைஜான் வெற்றிக்கு காரணமாக பின்னாட்களில் அமைந்தது.

இதுபோலவே இஸ்ரேலின் IRON DOME போன்ற அதீநவீன ஆயுதங்களில் ஏற்பட்ட கோளாறுகளை உலகளவில் மறைக்கவே போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒருவேளை போர் தொடர்ந்திருந்து ஹமாஸ் தங்களது நவீன ஆயுதங்களை பயன்படுத்தியிருந்தால் இஸ்ரேலுக்கு பெரும் அவமானம் காத்திருக்கும் என்பதை உணர்ந்தே போர் நிறுத்தத்திற்கு வந்தது.

## போர் நிறுத்தம்

இஸ்ரேல் தரப்பு போர் நிறுத்தம் பற்றி பேசிய போது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், போர் நிறுத்தத்திற்கு பற்றி யோசிப்பதற்கு முன்னால் முழு நிரந்தர அமைதியை ஏற்படுத்தி ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழித்து விடுவோம்'' என்றார்.

பிரதமர் நெதன்யாகு, '' இது தொடக்கம் தான், நீங்கள் கனவிலும் நினைக்காத தாக்குதலை நாங்கள் தொடுப்போம் என்றார்.

ஆனால் 11 நாட்கள் தாக்குதலுக்கு பிறகு இஸ்ரேலே போர் நிறுத்தத்திற்கு முன்வந்தது. (அந்தளவுக்கு அடி)

போர் நிறுத்தத்தை பற்றி குறிப்பிட்ட ஹமாஸ் அமைப்பினர், " நாங்கள் பாலஸ்தீன் முழுக்க இருக்கும் இஸ்ரேலிய படைகளை தாக்குதவற்கு தயாராகவே இருந்தோம். இருப்பினும் நாங்கள் போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்கிறோம்." என்றனர்.

போர் நிறுத்த சூழல் உருவானால் ஹமாஸிடம் பிடிபட்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவ வீரர்களையும், சட்டவிரோதமாக காஸாவுக்குள் நுழைந்த யூதர்களையும் இஸ்ரேலிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் போர் காலத்திலேயே இஸ்ரேலிய தரப்பால் வைக்கப்பட்டது. ஆனால் இஸ்ரேல் இப்படி கண்டிசன் போட்டு போர் நிறுத்தம் செய்யும் இடத்தில் இல்லாததால் எதையும் பேசாமல் போர் நிறுத்தத்திற்கு வந்திருக்கிறது.

போர் நிறுத்தத்திற்கு பிறகு காஸாவின் முக்கிய சாலையை திறந்திருக்கிறது இஸ்ரேல். இந்த பாதை மூலம் காஸாவுக்கு ஐக்கிய நாடுகள் வழியாக கொடுக்கப்பட்ட உதவிகள் காஸாவில் இருக்கும் மக்களுக்கு சென்றடைந்தது. இதனை இஸ்ரேல் உதவியாக செய்யவில்லை. ஹமாஸின் தாக்குதலுக்கு அடிபணிந்து இதையெல்லாம் செய்திருக்கிறது.

## காஸாவின் வெற்றிக்கு பின்னால் இருக்கும் நாடுகள்

ஹமாஸின் தொடர் வளர்ச்சிக்கு பின்னால் ஈரான், துருக்கி பெரும்பாலும் உதவுகின்றன. எகிப்து தரை வழியில் ஒன்றிருப்பதால் சில உதவிகளை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறது.

## ஈரான்

ஈரானின் ஆயுத தொழிற்நுட்பம் தான் ஹமாஸை இயக்குகின்றன. ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சிக்கு பிறகு இஸ்ரேலை நேரடி எதிரியாக பாவிக்கிறது ஈரான். ஹமாஸுக்கு வெளிப்படையான நேரடி ஆதரவை தருகிறது. ஹமாஸின் 50%க்கும் அதிகமான ஆயுதங்கள் ஈரானின் தொழிற்நுட்பம். இந்த ஈரானின் உதவிக்கு நேரடியாக போர் முடிந்ததும் ஹமாஸின் இராணுவ தளபதிகள் நன்றியை தெரிவித்து கொண்டார்கள்.

## துருக்கி

துருக்கி இஸ்லாமிய ஓட்டமன் சாம்ராஜ்ஜியத்தில் இருந்து விலகிய பிறகு முழுமையாக குடியரசு அமைப்பின் கீழ் சென்று இஸ்லாமிய கொள்கைகளுக்கு எதிராக நின்றது. செயல்பட்டது. அதன் பிறகு துருக்கியில் எர்துகானின் வெற்றிக்கு பிறகு நிலைமை சீர்செய்யப்பட்டு இஸ்லாமிய நடைமுறைகளை அரசாங்கத்தில் கொண்டு வருகிறார்கள். இதில் எர்துகான் அரசு முழுமையாக பாலஸ்தீனுக்கு ஆதரவாக நிற்கிறது. OIC (Organisation of Islamic Cooperation) எனப்படும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பை கூட்டி பாலஸ்தீனத்திற்கு ஆதரவான கருத்துகளை வெளிப்படுத்தியது. ஹமாஸ் அமைப்பிற்கு மறைமுக ஆதரவை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

அடுத்ததாக, **எகிப்து**

தரை வழியில் காஸாவின் எல்லை எகிப்துடன் மட்டும் தான் பகிர்ந்து கொள்கிறது.



பாலஸ்தீனின் சுதந்திரத்தை வெளிப்படையாக ஆதரித்து அதனை தனி நாடாக முதன் முதலாக 1988ல் அங்கிகரித்தது எகிப்து. இதற்கு பிறகு தான் மற்ற முஸ்லிம் நாடுகளே பாலஸ்தீனை அங்கிகரிக்க தொடங்கின. தொடக்கத்தில் இருந்தே பாலஸ்தீன் பிரச்சனைக்கு ஆதரவாக குரல் கொடுத்தே வருகிறது எகிப்து. இந்த குரல் முஸ்லிம்களுக்கு ஆதரவான குரலாக இல்லாமல் தேசியவாதத்துடன் இணைத்து பார்க்கிறது எகிப்து. அதனுடன் எகிப்திய மக்கள் பாலஸ்தீனின் ஒவ்வொரு பிரச்சனையும் தங்களுக்கு ஏற்படுவதை போல் கருதுகிறார்கள். அதனால் தான் இஸ்லாமிய அரசுக்கு எதிரான அரசு எகிப்தின் அதிகாரத்தில் இருந்தாலும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்கிறது. அதனால் தான் தற்போது ஆட்சியில் இருக்கும் சிசியின் சர்வாதிகார எகிப்து அரசும் காஸாவிற்காக குரல் எழுப்பியிருக்கிறது. போர் சூழல் கடுமையாக இருக்கும் போதே காஸாவுக்கு தேவையான மருத்துவ தேவைகளை தனது எல்லை வழியாக அனுப்பி வைத்தது எகிப்து.


இதனுடன் இன்னும் சில நாடுகளும் காஸா விற்காக குரல் கொடுத்திருக்கின்றன. இந்த அனைத்து உதவிகளுக்கும் பின்னாலும், உதாவ தவர்களுக்கு பின்னாலும் ஒரு அரசியல் இருக் கிறது. அதை பின்னாட்களில் விரிவாக பார்க்கலாம்.

அனைத்து ஆய்வு பின்னணிகளையும் கடந்து, அனைத்து ஆயுத பலத்தையும் கடந்து ஹமாஸ் அமைப்பினர் ஒவ்வொரு முறையும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டனர். அவர்களது ஈமான் பலம் மட்டுமே வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது.

உலகின் மூலை முடுக்கெல்லாம் முதலாளித் துவ நாடுகள், சர்வ வல்லமை பொருந்திய நாடு களுக்கு அடிமையாக இருக்கும் போது முஸ்லிம் கள் மட்டும் தான் தொடர் எதிர்ப்பை அடக்கு முறைக்கு எதிராக தொடுத்து வருகிறார்கள். அந்த கூட்டம் சிறியதோ, பெரியதோ அடக்கு முறைக்கு எதிராக தொடர்ச்சியாக போராடுபவர் களுக்கு இறைவன் வெற்றியை கொடுக்கிறான்.

''எத்தனையோ சின்னஞ்சிறு கூட்டம், அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பெரும் பெரும் கூட்டங்களை வெற்றி கொண்டிருக்கிறது; மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுட னேயே இருக்கின்றான்.'' (2:249)

**– அபூ சித்திக்**





# யூதர்களுக்கு ஆதரவளிக்கும் கிறிஸ்துவர்கள்

## உண்மை என்ன?

இஸ்ரேல் – பாலஸ்தீன் பிரச்சனை பெரிதாக உருவாகி போர்ச்சூழல் ஏற்பட்டிருக்கும் நேரத்தில் இந்தியாவின் சங்கிகள் இஸ்ரேலின் பக்கம் நிற்கிறார்கள். நிற்பதை பெருமையாக பதிவிடுகிறார்கள். சங்கிகள் பற்றி தெரியும் அவர்கள் எப்போதும் அநியாயத்தின் பக்கமும், அசிங்கத்தின் பக்கமும் நிற்பவர்கள். அதனால் கவலையில்லை. ஆனால் கிறிஸ்துவர்கள் ஏன் இஸ்ரேலுக்கு ஆதரவு தருகிறார்கள் என்று தெரியவில்லை!.

இதிலும் அமெரிக்கா என்ற வெள்ளை கிறிஸ்துவ தலைமை இஸ்ரேலுக்கு அடிமை வேலை செய்வதையே தொழிலாக வைத்திருக்கிறது.

இதனால் சாமனிய கிறிஸ்துவர்கள் ஏதோ யூதர்களும் தாங்களும் பங்காளிகள் என்பது போலவும் முஸ்லிம்களும் யூதர்களும் ஜென்ம பகைவர்கள் போலவும் ஒரு நினைப்பை கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன என்பதை விளக்குவது தான் இந்த பதிவு,

*16*ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்ஸ்பியர் எனும் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் யூதர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் இருக்கும் உறவை ஒரு நாடக வடிவில் தந்திருப்பார். அந்த வெனிஸ் வணிகன் (Mechant of venice) என்ற சேக்ஸ்பியரின் நாடகம் மிகவும் பிரபலமானது.

அதில் சைலாக் என்ற யூதன் அந்தோணி என்ற கிறிஸ்துவருக்கு வட்டிக்கு பணம் தருவான். அந்தோணி பணத்தை தராவிட்டால் அவன் மார்பு பகுதியில் இருக்கும் சதைத்துண்டை தந்திட வேண்டும் என்ற ஒப்பந்தத்தோடு பணத்தை கொடுத்திருப்பான் யூதன். அந்தோனியின் கப்பல் சிதைந்து நஷ்டமாகி விட பணத்தை தர முடியாது. இந்த நிலையில் சொன்னது போல அந்தோனியின் சதைத்துண்டை எடுக்க வேண்டும் என்று சைலாக் நீதிமன்றத்தை முறையிடுவான். அந்தோனியின் நண்பன் பசோனியா இருமடங்கு, மும்மடங்கு ஏன் பத்து மடங்கு கூட அதிகமாக பணம் தருகிறேன் என்று சொன்ன போதும் எனக்கு சதைத்துண்டு தான் வேண்டும் என்று அடம்பிடிப்பான் யூதன். இறுதி நேரத்தில் வழக்கறிஞர் சரி எடுத்துக்கொள் ஆனால் மார்பு பகுதியின் சதையை எடுக்கும் போது ஒரு துண்டு ரத்தம் சிந்தினாலும் உன் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று சொன்னவுடன், நான் மூன்று மடங்கு பணம் வாங்கி கொள்கிறேன் எனக்கு சதைத்துண்டு வேண்டாம் என்று பல்டி அடிக்க இறுதியில் அந்தோனி விடுதலை செய்யப்பட்டு. சைலாக் உடனடியாக கிறிஸ்துவராக மாற வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்போடு நாடகம் முடிவு பெறும்.

இந்த நாடகத்தின் மூலம் யூதர்களின் தனிப் பண்பு இப்படியானது தான். வட்டி தொழிலில் ஈடுபட்ட இவர்கள் மிக மோசமானவர்கள் என்று பிரச்சாரத்தை முன்னெடுத்தவர்கள் கிறிஸ்துவர்கள். இன்றும் இந்த நாடகம் மிக பிரபலமானது தான். 16ம் நூற்றாண்டின் கிறிஸ்துவர்கள்– யூதர்களின் சூழலை மையப்படுத்தி எழுதப்பட்ட நாடகமே இந்த நாடகம்.

உலகில் "Antisemitism" என்ற வார்த்தையை உருவாக்கியதே கிறிஸ்துவர்கள் தான். இந்த வார்த்தைக்கு யூத எதிர்ப்பு என்று பொருள்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி 27ம் தேதி சர்வதேச இன அழிப்பு நாள் உலகம் முழுக்க கொண்டாடப்படுகிறது. இதற்கு காரணம் கிறிஸ்துவரான ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை கொன்றதன் நினைவாக இத்தினம் நினைவுக்கூறப்படுகிறது, ஒவ்வொரு வருடமும் இந்த தினத்தில் இஸ்ரேலின் கொடிகள் பாதிக்கம்பத்தில் பறக்கிறது. இது தான் யூதர்களை கிறிஸ்துவர்கள் கடந்த காலங்களில் நடத்திய வரலாறு.



உலகின் மூலையிலிருந்து கிறிஸ்துவர்கள் இஸ்ரேலுக்கு ஆதரவு தர இஸ்ரேலில் கிறிஸ்துவர்களை ஒழித்து கட்ட வேண்டும் என்ற குரல் தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருக்கிறது. இஸ்ரேலின் ஒரு யூத அமைப்பின் தலைவராக இருக்கும் ஒருவர் இஸ்ரேலில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை தடை செய்ய வேண்டும். கிறிஸ்துவர்கள் என்ற ரத்தக்காட்டேரிகளை இஸ்ரேலை விட்டு துரத்த வேண்டும் என்று



இஸ்ரேலிய அரசுக்கு கோரிக்கை எழுப்பியிருந்தார். இஸ்ரேலில் இருக்கும் தேவாலயங்களை தீயிட்டு கொளுத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார். இதுபோல் தொடர்ச்சியாக கிறிஸ்துவர்களுக்கு எதிராக இஸ்ரேலிய தீவிரவாதிகள் குரல் எழுப்பிக் கொண்டே தான் இருக்கிறார்கள்.

## வரலாற்று ரீதியாக

11ம் நூற்றாண்டிற்கு பிறகு ஐரோப்பாவில் இந்த யூத எதிர்ப்பு கிளம்பியது. இதற்கு காரணமாக சொல்வது யூதர்களின் நயவஞ்சகத்தனம், கிறிஸ்துவத்தில் தடை செய்யப்பட்டிருந்த வட்டி தொழில் செய்வது போன்றவையும், தங்கள் கடவுளான இயேசுவை கொன்றவர்களும் யூதர்கள்தான் என்பவையும் யூதர்களை கிறிஸ்துவர்கள் வெறுக்க காரணமாக அமைந்ததாக கூறுகிறார்கள்.

“யூதர்களை கிறிஸ்துவத்தின் எதிரியாகவும், தங்களுக்கு ஏற்படும் உடல் பிரச்சனைகள், வறுமை, ஏன் மோசமான வானிலைக்கு கூட யூதர்கள் தான் காரணம்” என்ற மனநிலை கிறிஸ்துவர்களிடம் இருந்ததை டையானே ஜாஹ்லர் என்ற எழுத்தாளர் தனது “ கருப்பு மரணம்” புத்தகத்தில் கூறுகிறார்.

கி.பி 1290ல் இங்கிலாந்தின் கிறிஸ்துவ மன்னர் யூதர்களை தன் நாட்டை விட்டு வெளியேற்றுகிறார். கி.பி 1322ல் பிரான்ஸ் கிறிஸ்துவ அரசும் தங்கள் நாட்டிலிருந்து யூதர்களை வெளியேற்றுகிறது.

கிறிஸ்துவர்கள் இருக்கும் இடங்களில் யூதர்களுக்கு தனியாக நிலம் வாங்க அனுமதி இல்லை. அரசாங்க வேலையில் இருப்பதற்கான அனுமதி இல்லை.



யூதர்கள் கிறிஸ்துவர்களால் எந்தளவுக்கு கொல்லப்பட்டார்கள் என்பதற்கு மற்றுமொரு உதாரணம் பிளேக் நோய் சாவு.

கி.பி 1348ல் பிளேக் நோய் ஐரோப்பாவில் பரவியவுடன் நோய்க்கு பலியானதுடன் பிளேக் நோய்க்கு காரணம் யூதர்கள் தான் என்று கிறிஸ் துவர்களால் கொத்து கொத்தாக கொல்லப் பட்டனர் யூதர்கள்.

ஸ்டாஸ்போர்க் எனும் பிரான்ஸ் நாட்டின் எல்லையில் உள்ள நகரில் ஆயிரக்கணக்கான யூதர்களை ஒன்று திரட்டி பிளேக் நோய் இறப்புக்கு யூதர்கள் கிறிஸ்துவர்கள் தண்ணீர் குடிக்கும் கிணறுகளில் விசத்தை கலந்தது தான் காரணம் என்று கூறி ஒன்று கிறிஸ்துவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது செத்து மடியுங்கள் என்று கூறி உயிரோடு எரிக்கப்பட்டனர்.

யூதர்கள் தான் கிறிஸ்துவர்களின் திடீர் சாவுக்கு காரணம் என்று கூறி யூதர்கள் பலர் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டார்கள்.

1349ல் ஒரே வீட்டில் வைத்து 40 யூதர்கள் உயிரோடு எரித்து கொல்லப்பட்டனர்.

யூதர்களுக்கெதிராக தொடர்ச்சியாக நிகழும் கொலையை நிறுத்துவதற்காக அப்போதைய போப் கிளெமெண்ட் 6, " யூதர்கள் கிறிஸ்துவர் களை கொல்லும் முட்டாள்தனமான வேலையை செய்திருக்க மாட்டார்கள். அது அவர்களுக்கு தற்கொலை செய்வது போன்றது என்று தெரியும். யூதர்களே இல்லாத ஐரோப்பாவில் பல பகுதிகள் கூட கிறிஸ்துவர்கள் இறந்திருக்கிறார்கள், அதனால் இந்த அழிவுக்கு யூதர்கள் காரண மில்லை" என்று அறிவிப்பு விடுத்தார்.

பிளேக் நோய் பரவ ஆரம்பித்த 1348லிருந்து 1351 காலத்திற்குள் யூதர்களுக்கு 60 இடங்களில் பெரிய அழிவும், 150 இடங்களில் சிறிய அளவி லும் கிறிஸ்தவர்களால் அழிவு ஏற்பட்டிருந்தது. மொத்தம் 350 இன அழிப்பு சம்பவங்கள் யூதர் களுக்கு எதிராக கிறிஸ்துவர்களால் நிகழ்த்தப்பட் டது என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடு கிறார்கள்.

தொடர்ச்சியாக யூதர்கள் கொல்லப்படுவதை அன்றைய எழுத்தாளர்கள் நியாயப்படுத்தி எழுதியிருக்கிறார்கள். புகழ்பெற்ற ஜெர்மன் வரலாற்றாசிரியர் ஜெர்மன் டி வியோனே யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலையை இப்படி பதிவு செய்கிறார், "யூதர்கள் தீக்குழம்பு களில் எரிக்கப்படுவதற்கு தகுதியானவர்களாக இருந்தார்கள்"

இப்படி பிளேக் நோய் காரணமாக கிறிஸ் துவர்களால் யூதர்கள் கொல்லப்பட்டதை முழுமையாக "Black Death" என்ற புத்தகம் பதிவு செய்திருக்கிறது.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பு வரை கிறிஸ்துவர்கள் புனித வெள்ளி தினம் கொண் டாடும் போதெல்லாம் யூதர்கள் தாக்கப்படு வர்கள்.

புனித வெள்ளி தினம் என்பது இயேசுநாதர் சிலுவையில் அறையப்படுவதை கிறிஸ்துவர்கள் நினைவுக்கூறக்கூடிய தினம். பைபிளின் படி இயேசுவை சிலுவையில் அறைந்து சித்ரவதை செய்தவர்கள் யூதர்கள். அதனால் தங்கள் கட வுளை சித்ரவதை செய்த யூத இனத்தை அழிக்க வேண்டும் என்று அன்றைய நாளில் யூதர்கள் கொலை செய்யப்படுவார்கள். இதற்காகவே சர்ச்கள் புனித வெள்ளியன்று யூதர்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று வலி யுறுத்தினார்கள்.

இப்போதும் கூட யூதர்களை பற்றி பைபிளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துகளை மாற்ற வேண்டும் என்று யூதர்கள் திட்டம் போடு கிறார்கள். அது பத்திரிக்கைகளிலும் வந்திருக் கிறது.

இயேசு கொல்லப்பட்டதிலிருந்து இரண்

டாம் உலக யுத்தத்திற்கு முன்பாக ஹிட்லரின் வீழ்ச்சி வரை யூதர்களை கொன்று குவித்தவர்கள் கிறிஸ்துவர்கள். ஆனால் இன்று அமெரிக்க வெள்ளை கிறிஸ்துவ தலைமை இஸ்ரேலுக்கு அடிமையாகி விட்டதால் அதன் தொடர்ச்சியில் இருக்கும் கிறிஸ்துவர்கள் சிலர் இஸ்ரேலுக்கு ஆதரவு தருகிறார்கள்.

அனைத்து கிறிஸ்துவர்களும் இஸ்ரேலுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்றும் நம்பிட வேண்டாம். பாலஸ்தீனத்தின் கிறிஸ்துவ பாதிரியார் ஒருவரே ஜெருசேலத்தின் அல்–அக்ஸா பள்ளிவாசலை முஸ்லிம்களுடன் கிறிஸ்துவர்கள் இணைந்து பாதுகாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். இங்கே வெள்ளை கிறிஸ்துவத்தின் தலைமை பீடமாக இருக்கும் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் தலை குனிந்து வாழும் கிறிஸ்துவர்கள் தான் இஸ்ரேலுக்கு ஆதரவுக்கரம் நீட்டுகிறார்கள் வரலாறு தெரியாமல்.

சரி, இவ்வளவு கொடுமையிலிருந்து யூதர்கள் எப்படி மீண்டார்கள் தெரியுமா?.. 60 லட்சம் யூதர்களை ஹிட்லர் கொன்று குவித்த பிறகு ஆபத்து காப்பாற்றுங்கள் என்று முஸ்லிம்களிடம் கையேந்தினார்கள். முஸ்லிம்கள் மனித நேயத்தோடு இடம் கொடுத்தார்கள் தங்கள் பாலஸ்தீனம் என்ற பூமியில். இன்று நம்பிக்கை துரோகிகளாய் பாலஸ்தீன மக்களை சூரையாடுகிறார்கள் யூத ஜியோனிஸ்ட்கள்.


யூதர்கள் இடம் கேட்டு வந்த போது இருக்கும் படம் இது, " ஜெர்மனியர்கள்(கிறிஸ்துவர்கள்) எங்கள் நம்பிக்கையை நாசம் செய்து விட்டனர். தயவு செய்து நீங்கள் எங்கள் நம்பிக்கையை நாசம் செய்யாதீர்கள்" என்ற கோரிக்கையுடன் வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் பாலஸ்தீன முஸ்லிம்கள்.

யூத ஜியோனிஸ்ட்களுக்கு நன்றி காட்டியதன் விளைவு இன்று நாடற்றவர்களாக பாலஸ்தீனியர்கள்.

கடந்த காலங்களில் யூதர்கள் உயிர் பிழைக்க முஸ்லிம்கள் எவ்வளவு உதவினார்கள் என்ற வரலாற்று நிகழ்வுகளை அடுத்தடுத்த பதிவுகளில் காண்போம்.

– அபூ சித்திக்ஹ



# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்-7




## உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் சொன்னதென்ன..?

அன்பார்ந்த வாசகர்களே நமது நீதித்துறை அதன் விழுமியங்களை இழந்து அநீதிகளின் உறைவிடமாக ஆனபோது, அதனை தட்டிக்கேட்டார்.

உச்ச நீதிமன்றம் நாட்டை பாசிசத்தின் பிணக்கமாக ஆக்கிடு முன் அதனை தடுத்து நிறுத்திட வேண்டும் என நினைத்தார். அத்தனையும் இந்த நாட்டின் மீது கொண்ட பற்றால், பாசத்தால் இந்த நாட்டைக் காத்திட தலையெடுத்த தலைமகன்களில் ஒருவர் அவர்.

இன்றைய இம்சை அரசர்களின் ஆட்சி நிச்சயமாக ஒருநாளில் வீழும். அன்று இந்தியாவைக் காத்தவர்களின் பட்டியல் நிச்சயமாக இடத்தைப் பிடிப்பார் பிரசாந்த் பூஷன் அவர்கள் என்பது திண்ணம்.

இனிவரும் நாள்களில் இந்திய வரலாறு இவரைப் போன்றவருக்குத்தான் நமது உச்ச நீதிமன்றத்தின் நீதி விழுவிய நெறிமுறை இரண்டு டிவிட்டரில் சுட்டிக்காட்டினார் வீரமகன் பிரசாந்த் பூஷன்.

ஒன்று, 27-06-2020இல் பதிவிடப்பட்டது.

பிரிதொன்று 29-06-2020 அன்று பதிவிடப்பட்டது.

இவை இரண்டுமே சுற்றிவளைத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்காக ஆக்கியது நமது உச்ச நீதிமன்றம். அந்த வகையில் அவர் நீதிமன்றத்தை அவமதித்துவிட்டதாக அவருக்கு உச்சநீதிமன்றம் 22-07-2020இல் ஒர் தாக்கீதை மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்களுக்கு அனுப்பியது.

இந்த தாக்கீதுக்கு அவர் 02-08-2020 அன்று ஒரு பதிலை - உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அந்தப் பதில், நம் நாட்டில் பாசிஸ்ட்டுகள் என்னென்ன அநீதிகளைச் செய்தார்கள், அதற்கு உச்ச நீதிமன்றம் எப்படியெல்லாம் பக்கதாளம் போட்டது என்பதையெல்லாம் விரித்துறைக்கின்றது.


அத்தோடு நில்லாமல் நம் நாட்டில் நடந்த பயங்கரமான ஊழல்கள், அநீதிகள் ஆகியவற்றையும் பட்டியல் போடுகின்றது. இதனை இந்தியாவின் சமகால வரலாறு என்பதே சரி!

அதன் தமிழ் வடிவத்தை இங்கே சமர்ப்பிக்கின்றோம்...

அதற்கு முன் இந்த பிரசாந்த் பூஷனின் பின்னணியை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்...

## யார் இந்த பிரசாந்த் பூஷன்

பிரசாந்த் பூஷன் அவர்கள், உலகம் பிரசித்திப் பெற்ற வழக்கறிஞர் ஷாந்தி பூஷன் அவர்களின் மகன்.



ஷாந்தி பூஷன் அவர்களைப் பற்றி நிரம்ப எழுதலாம். விரிவஞ்சி மிகச் சுருக்கமாக சில வீர செயல்களை மட்டும் இங்கே பதிவு செய்கின்றோம்.

நம் நாட்டில் இருந்த பிரதமர்களில் ஜவஹர்லால் நேருவைப் போல் அவரது மகள் இந்திரா காந்தியும், நாட்டின் கொள்கைகளை வடிவமைப்பதில் பல சாகசங்களைச் செய்தவர்.

ஆனால், அவரும் ஒரு கட்டத்தில் சர்வாதி காரியாகிட தலைப்பட்டார். அது அவருக்கு ஏற்பட்ட தோல்வியின்போதுதான்.

1971–இல் அவர் நாடாளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டது 'செல்லாது' என 1975 ஜூன் 26 ஆம் தேதி அலஹாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

எல்லா அதிகாரத்தையும் ஒருங்கே பெற்ற, இந்திரா காந்தி நாடாளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டது செல்லாது என வழக்குத் தொடர்ந்தவர் ராஜ் நாராயணன் என்பவர். அந்த வழக்கில் வாதாடியவர் ஷாந்தி பூஷன்தான். இதில் இந்திரா காந்தியின் கெடுபிடிகளுக்குச் சற்றும் அஞ்சாமல், வழக்கில் நிலையாய் நின்று வாதாடி வென்றவர் இந்த ஷாந்தி பூஷன்.

தீர்ப்பு இந்திரா காந்தியை நாடாளுமன்ற த்திற்கு தேர்ந்தெடுத்தது செல்லாது என்று மட்டும் வரவில்லை. அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அவர் அரசியல் ஈடுபடக் கூடாது என்றும் வந்தது.

இதில் இந்திராகாந்திக்கு ஒரு பெரும் நெருக் கடிநிலை ஏற்பட்டது. அதை தேசிய நெருக்கடி யாக அறிவித்தார். ஷாந்தி பூஷன் போன்றவர் களெல்லாம்சிறைபிடிக்கப்பட்டார்கள். எதற்கும் அஞ்சாமல் நிலையாய் நின்றார் ஷாந்தி பூஷன். பின்னர் 1977 முதல் 1979 வரை இந்தியாவின் சட்ட அமைச்சராக இருந்தார்.

உச்ச நீதிமன்ற உச்சபட்ச ஊழல் 2009/2010 ஆண்டுகளில் உச்ச நீதிமன்றத்தின் ஊழல்கள். ஒரு பேட்டியில் விவாதமானபோது, (The Week 2010) உச்ச நீதிமன்ற 16 நீதிபதிகளில் 8 பேர் நிச்சயமாக ஊழல் பேர்வழிகள், 4 பேர் பெண்கள் விஷயத்தில் பல வீனமானவர்கள் 4 பேர் பற்றி தெரியாது என அழுத்தந்திருத்தமாக கூறியவர். அப்போது இவருடைய மகன் பிரசாந்த் பூஷனும் உடனிருந்தார்.

உச்சநீதிமன்றம்இந்தக்கூற்றுக்குநடவடிக்கை எடுப்பேன் எனக் கூறியபோது, துணிச்சலோடு அதை எதிர்கொண்டு தன்னுடைய கூற்றை ஓர் அறிக்கையாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவர். தான் சொன்னதை நிரூபிக்கவும் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

ஆனால், உச்சநீதிமன்ற விவகாரத்தை விவாத மாக்கிட முனைந்திடவில்லை. மாறாக, ஷாந்தி பூஷன் அவர்களிடம் தனது அறிக்கையை பின் வாங்கிட வேண்டும் அல்லது சிறை செல்ல வேண்டும் என அச்சுறுத்தினர். அதற்கு ஷாந்தி பூஷன் அவர்கள் "இந்த நாட்டின் நீதி நிர்வாகம் நீதி பக்கம் திரும்பிட நான் சிறை செல்லவும் தயாராக இருக்கின்றேன்" என்றார். அத்தோடு உச்சநீதிமன்றம் அந்த வழக்கை அப்படியே விட்டது.

## நாடாளுமன்றத் தாக்குதல் 13/12

அதேபோல் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் நமது இந்திய பெருநாட்டின் ஆட்சியைப் பிடித்து நாடெங்கும் தொடர்ந்து குண்டுவெடிப்புகளை நடத்தி வந்தார்கள். இந்தக் குண்டு வெடிப்பு களுக்கான பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள்.



முஸ்லிம்களைப் பேய்களாகவும், பிசாசு களாகவும் காட்டினார்கள். நாட்டு மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித் துக் காட்டினார்கள். ஆனால் நாட்டு மக்கள் முஸ்லிம்கள் மேல் போட்டபழியை அத்துணை எளிதாக நம்பிடவில்லை. அதனால் ஒரு பெரிய ஏற்பாட்டைச் செய்தார்கள். அதுதான் நாடாளு மன்றத் தாக்குதல் 13/12.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் நாள் இந்த நாடாளுமன்றத் தாக்குதல் நடத்தப் பெற்றது. இந்த தாக்குதலை கஷ்மீரில் உள்ள அரசு காவல்படையான "STF" Special Task Force - சிறப்பு அதிரடி காவல்துறையும் டெல்லியில் நமது சாத், சாத் அத்வானி அவர்களுக்கு வேண்டிய ராஜ்பீர் சிங் என்ற Delhi Speical Poliec – டெல்லி சிறப்புக் காவல் படையைச் சார்ந்தவரும் சேர்ந்து ஏற்பாடு செய்தார்கள்.

*வழக்கம்போல் பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள்.*

*டெல்லி பல்கலைக்கழகத்தில் அரபி மொழி பேராசிரியராக பணியாற்றி வந்த 'இஃதிகார் ஜீலானி என்ற கஷ்மீர் முஸ்லிம்தான், நாடாளு மன்ற தாக்குதலுக்கு மூளை எனக் கூறினார்கள். ஊடகங்கள் அதனை பெரிதாக விளம்பரப்படுத் தின. இன்னும் பல அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து, சித்திரவதைச் செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்கினார்கள். கீழ் நீதிமன்றத்தில் அதாவது சிறப்பு நீதிமன்றத்தில் மரண தண்டனையையும் பெற்றுத் தந்தார்கள்.*

*வழக்கு உயர் நீதிமன்றம் வந்தது. அங்கே ஷாந்திபூஷன் அவர்கள் சல்லிக்காசுகூட வாங்கி டாமல் வாதிட்டார் என்பது ஒருபெரும் செய்தி.*

*அவர்தான் நாடாளுமன்றத் தாக்குதலின் முக்கிய மூளை எனக் குற்றம் ஜோடிக்கப்பட்ட 'இஃதிகார் ஜீலானி' அவர்களுக்காக வாதிட்டார். அத்தோடு சவ்கத் ஹூசைன் என்பவருக்காகவும் வாதிட்டார். அங்கே – உயர்நீதிமன்றத்தில் பொட்டில் அறைந்தார்போல் இப்படிக் கூறினார்.*

*"வழக்கை விசாரித்த அதிகாரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **194, 195** ஆகியவற் றின் கீழ் ஆயுள் தண்டனையை பெறும் குற்றங் களைச் செய்திருக்கின்றார்கள். இத்துணை, பாரா தூரமான குற்றங்களை வழக்கை விசாரித்த அதிகாரிகள் செய்திருக்கும்போது, அவர்களைத் தண்டிக்க வேண்டும். அவர்களைத் தண்டிப்பதன் மூலமே இப்படிப்பட்ட இப்படி சாட்சியங் களைப் பொய்யாகத் தயாரிப்பதை போலி ஆவணங்களைத் தயாரித்து, அவற்றை உண்மை யென நீதிமன்றத்தில் வாக்குறுதி தந்து சமர்ப் பிப்பதையும் நீதிமன்றம் தடுத்திட இயலும்."*

*இப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள், அந்த அப்பாவி முஸ்லிம்களல்ல மாறாக வழக்கை விசாரித்தவர்களைத்தான் என வாதாடினார்.*

*அத்தோடு கீழ் நீதிமன்றம் சாட்சியங்களை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டு அப்பாவி முஸ்லிம்களைத் தண்டித்திருக்கின்றன. அந்த நீதிபதியை தண்டிக்காத வரை, இந்திய குற்றவியல் நீதித்துறையின் மேல் மக்களுக்கு நம்பிக்கை வராது என வாதாடினார்.*

*இதில் மூத்த வழக்கறிஞர் இராம்ஜெத் மாலினியும், இணிரா ஜெய்சிங் அவர்களும் பங்கெடுத்து வாதிட்டார்கள்.*

(*ஆதாரம் :* December-13, Terror Over Democracy ; Compited by Rider, Page. 47-50)

*(மேலும் நாடாளுமன்ற தாக்குதல் வெளிச் சத்திற்கு வந்த உண்மைகள், ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் "வேர்கள்" வெளியீடு பக்கங்கள் 24–27)*

*ஷாந்தி பூஷன் அவர்கள், நீதிபதிகள், நீதி மன்றங்கள் இவையெல்லாம் தங்களுடைய செயல்களுக்குப் பதில் சொல்லும் ஓர் ஆணையம் அல்லது ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றொரு முழக்கத்தை முன் வைத்து வருகின் றார்கள். இதற்காக* CJA - Committee on Judical Accountability *என்றொன்றை அதாவது, நீதித் துறைதன் செயல்களுக்குப் பதில் சொல்வதற்கான குழுமம் என்றொன்றை தொடங்கி நடத்தி வருகின்றார். இதில் அவருடைய மகன் பிரசாந்த் பூஷனும் இணைந்து செயல்படுகின்றார்.*

## பிரசாந்த் பூஷன்

*இவர் தன் தந்தை ஷாந்தி பூஷன் அவர்களைப் போலவே போர்க்குணம் கொண்டவர்.*

*பிரசாந்த் பூஷன் அவர்கள் தந்தை இந்திரா காந்திக்கு எதிராக வழக்காடி வென்றபோது பிரசாந்த் பூஷன் ஓர் மாணவன் மட்டுமே! அப்போதேய அந்த வழக்கைப் பற்றி ஒரு நூலை எழுதினார். அதன் பெயர்* "The Case that Shook india" *இந்தியாவை உலுக்கிய வழக்கு.*

***2009**இல் இவர் நடத்திய வழக்கொன்றில் நீதித்துறையும், நீதிபதிகளும்* (RIT) *என்ற தகவ லறியும் சட்டத்தின் கீழ் வந்திட வேண்டும் என வாதிட்டார். இவர் தொடர்ந்து எடுத்த முயற்சி களின் முடிவாக நீதிபதிகள் தங்கள் சொத்துக்கள் பற்றிய விபரங்களை நீதித்துறையின் இணைய தளத்தில் வெளியிட வேண்டும் என்ற நடைமுறை வழக்கில் வந்தது.*

*இனி அவர், தண்டிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அவர் தந்த பதில்– அதாவது நாட்டின் சமகால வரலாற்றை–ஐ பார்ப்போம் இன்ஷாஅல்லாஹ்.*

பதில் :

பிரசாந்த் பூஷன் ஆகிய நான், உச்ச நீதிமன்ற நீதிமன்ற நீதிபதி பாப்டே ஒரு பைக்கில் பயணம் செய்வதைக் குத்திக்காட்டி ஒரு பதிவை டிவிட் டரில் **29–6–2020** இல் போட்டிருந்தேன். இந்தப் பதிவு உச்ச நீதிமன்றம் ஒருவார காலமாக இயங்கிடவில்லை என்ற ஆதங்கத்தில் போடப் பட்டது. (உச்ச நீதிமன்றம் இயங்கவில்லை. ஆனால் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உல்லாசமாக


பவனிவந்தது என்னை ..... இதனால் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட மக்கள் நீண்ட நாட்களாக சிறையில் கிடக்கும் மக்கள், குடிமக்கள் பலர், மக்கள் இவர்களில் பலர் ஏழைகள். அதேபோல் பலருடைய உயிரை வாழ்க்கை முடிவு செய்யும் வழக்குகள் இவை யெல்லாம் விசாரணைக்கு வராமலேயே நிலுவை யில் கிடக்கின்றன. அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளும் அப்படியே நிற்கின்றன. இப்படி அவருடைய கடமைகளை அப்படியே போட்டுவிட்டு, அவர் பலருடைய குழுமத்தில் ஒரு முகக் கவசம் கூட அணியாமல் நின்று கொண்டிருந்தது பொறுப்பற்றச் செயல். அந்த நேரத்தில் உச்ச நீதிமன்றம் முடங்கிக் கிடந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாக விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வழக்குகளில் மேரவையில் (Online) திருப்தி இல்லாமல் அரைகுறையாகவே நடந்து கொண்டிருந்தன.

இந்நிலையில் அவர் ராஜ்பவனில் BJP பாரதீய ஜனதா கட்சிக்காரர் ஒருவருக்குச் சொந்தமான பைக்–இல் அமர்ந்திருந்தார் என்பது, சமூக வலைத்தளங்களில் தகுந்த ஆதாரங்களோடு உலா வந்து கொண்டிருந்தது. தொலைக்காட்சி ஊடகங்களும் இதனை ஆதாரத்தோடு வெளி யிட்டன.

உச்ச நீதிமன்ற நீதிபதியின் இந்த செயல்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்காமல் என் ஆதங்கத்தை பதிவு செய்தது நீதிமன்ற அவமதிப்பில் எப்படி வரும்? இதனை நீதிமன்ற அவமதிப்பு என எடுத்துக்கொண்டால், அது பேச்சுரிமையின் கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெறிப்பதாகும். அது நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 19(1)(a)இன் மீது தேவையற்ற ஓர் கட்டுப்பாட்டை விதித்ததாகவும் ஆகும்.

இன்ஷா அல்லாஹ்.

பிரசாந்த் பூஷனின் எதிர்வாதம் தொடரும்.








கொரோனா 2வது அலை

# பிணங்களாக குவியும் குடிமக்கள் யார் காரணம்?

உ.பி-யில் இடுகாடுகளைப் பெரிய டின் ஷீட்டுகளைக் கொண்டு மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் சாமியார் யோகி ஆதித்யநாத். 12-வது அவதாரமான பிரதமர் மோடியின் குஜராத்தில் ஓய்வின்றி இரவு பகலாக இடுகாடுகளில் பிணங்கள் எரிந்து கொண்டிருக்கிறது.

By ஃபேஸ்புக் பார்வை -April 27, 20210

டாக்டர் ஜலீல் பார்க்கர், இந்தியாவின் தலை சிறந்த நுரையீரல் நிபுணர்களில் ஒருவர், முகத்தில் கடுமையான சோர்வு தெரிகிறது. மும்பை மாநகரத்தின் லீலாவதி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளிகளைக் கவனித்தபடி தொலைக்காட்சிகளிலும் தோன்றிக் கோரமான கோவிட்-19 இரண்டாம் அலை எப்படி ஆயிரக்கணக்கில் இந்தியர்களை தினமும் விழுங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்.

கடந்த ஆண்டில் அவருக்கே கொரோனா தொற்று ஏற்பட்டு ஏறத்தாழ இறப்பின் விளிம்பு வரை சென்று வந்தார்; இப்போது அமைதியிழந்தவராக நாம் அறிந்திராத பல உண்மைகளை போட்டு உடைக்கிறார்.

“நம்முடைய சுகாதாரத்துறை முற்றிலுமாக செயல் இழந்து விட்டது; நாம் நமது சொந்த தேசத்தின் மக்களைக் கைகழுவி விட்டோம்; நம்முடைய மருத்துவ உள்கட்டுமான அமைப்பு மிக மோசமான நிலையில் இருக்கும் போது, மருத்துவர்களால்என்னசெய்யமுடியும்? படுக்கைகளும், ஆக்சிஜன் சிலிண்டர்களும் இல்லாத போது மருத்துவர்கள் என்ன செய்ய முடியும்?”

ஏப்ரல்-23 அன்று இந்தியாவில் ஒரே நாளில் 3,32,730 பேர் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் இதுவரை பதிவான மிகப்பெரிய ஒருநாள் தொற்று இதுதான். கொரனோ அளவை நாமே முறியடித்திருக்கிறோம் என்பதுதான் கொடுமை.

பெருந்தொற்றுக் காலம் துவங்கிய நாளில் இருந்து இதுவரை, 1 கோடியே 60 இலட்சம் பேர் நோய்த் தொற்றை அடைந்திருக்கிறார்கள். 1 இலட்சத்து 86 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்து இந்தியாதான் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளானநாடகஇருக்கிறது. அன்றாட தொற்றின் அளவும், மரணங்களின் அளவும் அமெரிக்காவை விஞ்சும் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் 2,000 இந்தியர்கள் கொரோனாவால் இறந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இது குறைத்து மதிப்பிடப்படுகிற ஒன்று என்றும், இந்தியாவின் ஒருநாள் மரணம் 10,000-த்தை தாண்டிக் கொண்டிருப்பதாகப்



பெயர் சொல்ல விரும்பாத சுகாதாரத்துறை அதிகாரிகள் சொல்கிறார்கள்.

எனது வாழ்க்கையில் நான்கு மிக நெருக்க மான மனிதர்களை நான் இழந்திருக்கிறேன்; ஒரு தூரத்து உறவினர், பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் மற்றும் எனது நெருங்கிய நண்பர்கள் இருவர். அவர்கள் இருவருமே 30 முப்பது வயதுகளில் மத்தியில் இருப்பவர்கள்.

இறப்பு மிக சாதாரணமாக நிகழ்கிறது. டெல்லியின் கங்காராம் மருத்துவமனை ஒரு அவசர செய்திக் குறிப்பை வெளியிட்டிருக்கிறது. அதில் இன்னும் இரண்டு மணி நேரத்துக்கான ஆக்சிஜன் மட்டுமே எங்களிடம் இருக்கிறது; ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் ஏற்கனவே 25 பேர் இறந்துவிட்டார்கள்என்று அச்சமூட்டும்அறிவிப் பாக அது இருக்கிறது. தங்கள் உறவினர்களுக்காக ஆக்சிஜன் சிலிண்டர்களைத் திருடும் காணொ ளிக் காட்சிகள் மேலும் அச்சமூட்டுவதாக இருக் கிறது.

BBC-யின் செய்தித் தொகுப்பொன்றில் வரும் காட்சியில் பெண்ணொருவர் இறந்து கொண்டி ருக்கும் தனது தம்பியை சுயநினைவுக்குக் கொண்டுவரமுயற்சிசெய்கிறார், “பாலாஜி, நீஏன் விழித்துக் கொள்ளக் கூடாது?” என்று தனது தம்பியைத் தட்டி எழுப்ப முயற்சி செய்தபடி அழுகிறார்.

மஹாராஷ்டிராவில் ஒரு மருத்துவமனையில் ஆக்சிஜன் கசிவால் குழாய்களில் தடை ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளில் 25 பேர் இறந்து விட்டார்கள். இவர்கள் அனைவரும் கொரோனா தொற்றால் தீவிர சிகிச்சைப் பெற்று வந்தவர்கள். பல்வேறு மருத்துவமனைகள் தங்கள் மாநில உயர்நீதிமன்றங்களில் எங்களுக்கு ஆக்சிஜன் வழங்க வேண்டும் என்று முறையீடு செய்திருக்கின்றன. கடவுளின் கரங்கள் எங்கே என்றால் அவை இந்தியாவின் மருத்துவமனை களில்தான் இப்போது இருக்கிறது.

இத்தகையஒருகொடியசூழல்நிலவும்போது, இந்தியாவின் மற்றொரு பக்கம் கொரோனா பெருந்தொற்று குறித்த எந்த அச்சமும் இல்லா மல், விழிப்புணர்வும் இல்லாமல் “மோடியின் தட்டு தட்டி, விளக்கேற்றி கோரானவை விரட் டும்” மூடத்தளைக்குள் சிக்குண்டு சீரழிகிறது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவாரில் கும்பமேளா என்கிற பெயரில் கங்கை ஆற்றில் மூழ்கித் திளைக்கிறார்கள்.

குறிப்பிட்ட சில நூறு இஸ்லாமிய மனிதர்கள் கடந்த ஆண்டில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு வந்தபோது மோடியின் தேசபக்த ஊடகங்களும், அவரைப் பின்பற்றும் மடையர் களும் அவர்களைக் குற்றவாளிகளாக்கி ஒட்டு மொத்த இஸ்லாமியர்களையும் மன உளைச் சலுக்கு ஆளாக்கினார்கள்.

மார்ச் 11–ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து குளியல் போட்டு வருகிற இந்த பக்தர்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகி இருக்கிறது. மெல்ல மெல்ல

இவர்கள் வீடுகளை நோக்கி நகர்ந்து கொண்டி ருக்கிறார்கள். இவர்கள் மூலமாகப் பரவ இருக்கும் இந்தப் பெருந்தொற்று மிகப்பெரிய சோகங்களை ஏற்படுத்தப் போகிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

மார்ச் மாதத்தில் ஏறத்தாழ கொரோனாவின் இரண்டாம் அலை துவங்கி இருந்தபோது, உத்தரகாண்ட் மாநிலத்தை ஆளும் பாரதீய ஜன தாக கட்சியின் தலைவர்கள் செய்தித்தாள்களில் முழுப்பக்க விளம்பரங்களைக் கொடுத்திருந்தார் கள்; கும்பமேளா குளியல் இடம் தூய்மையாக வும், பாதுகாப்பாகவும் இருப்பதாக அவர்கள் மக்களுக்கு அறிவித்தார்கள்.

இதைவிடக் கொடுமை மார்ச் 20–ஆம் நாள், உத்தரகாண்ட் மாநில முதல்வர் ஒருபடி மேலே சென்று "யாராலும் கோவிட்–19ன் பெயரால் எங்களைத் தடுத்து விட முடியாது. நாங்கள் நம்புகிற கடவுள் கிருமிகளிடம் இருந்து எங்க ளைக் காப்பாற்றுவார்" என்று கொக்கரித்தார். ஏப்ரல் மாதத்தின் மத்தியப் பகுதி வரையில் இந்து ராஜ்யத்தின் தலைவரான நரேந்திர மோடி ஒரு துரும்பையும் அசைக்காமல் தேர்தல் நாடகங்களில் மும்முரமாய் இருந்தார்.

பிறகு திடீரென விழித்து பன்னாட்டு சமூகத் துக்கு அஞ்சி ''மத விழாக்களில் கலந்துக் கொள்வதை நாம் ஒரு அடையாளமாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மால் பெருந்தொற்றை எதிர்க்க முடியும்" என்று திருவாய் மலர்ந்தார். இப்படி ஒரு பிரதமர் இருக்கும் நாட்டில் கும்பமேளாக்கள் அப்பாவி இந்தியர்களின் உயிரைக் குடிக்கும் ஒரு மரணக் குழியாக இருக்கும் என்பதில் என்ன பெரிய வியப்பு இருக்க முடியும்.

மார்ச் 2020 துவங்கி இந்தியாவின் கோவிட்–19 குறித்து நான் தொடர்ந்து கவனித் தும், பேசியும் வருகிறேன். ஆனால், இந்த இரண் டாம் அலையின் தீவிரம் என்பது மிகப்பெரிய அச்சத்தை உருவாக்குகிறது. சுகாதாரத்துறைப் பணியாளர்கள் மிகப்பெரிய மன அழுத்தத்தில் இருக்கிறார்கள். மும்பை மாநகராட்சி மருத்துவ மனைக்கு நான் சென்றபோது அங்கே மாடிப் படிகளில் அமர்ந்திருந்த ஒரு செவிலியரைப் பார்த்தேன்.

அவர் தனக்குக் குமட்டிக் கொண்டு வருவதாக என்னிடம் கூறினார். இங்கிருக்கும் கழிவறைகள் மிகுந்த அசுத்தமாக உள்ளது. ஒவ்வொரு 20 கோவிட் நோயாளிகளுக்கும் ஒரு கழிவறைதான் இருக்கிறது. நானே பெருந் தொற்றால் பாதிக்கப்பட்டு இப்போதுதான் குணமடைந்து வருகிறேன். மூன்றுமுறை நான் அளித்த விடுப்பு விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டுவிட்டது. இப்போது நான் ராஜினாமா செய்ய விரும்புகிறேன்.

ஆனால், என் குடும்பம் என்னை நம்பி இருக் கிறது. மருத்துவப் பணியாளர்களை நாங்கள் மலர் கொண்டு ஆராதிக்கிறோம் என்று விமானங்களை வைத்து மோடியின் அரசு வித்தை காட்டியது. ஆனால், மருத்துவப் பணி யாளர்களின் உண்மையான நிலை இதுதான், நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருக்கிறோம்.

இரண்டாம் அலையில் நோயாளிகள் ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் மிகுந்த துயரத்தை அடைந்து கொண்டிருக்கிறார்கள். scroll.in என்கிற ஒரு செய்தி நிறுவனம் அதிர்ச்சிதரக்கூடிய உண்மை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அக்டோபர் 2020 வரை, உலகைக் காக்கும் வல்லமை பொருந்திய இந்துக்களைக் காக்கும் மாமன்னர் மோடி அரசு கண்களை மூடிக் கொண்டு ஏகாந்தத்தில் இருந்தது.

பெருந்தொற்று துவங்கி 8 மாதங்கள் வரை ஆக்சிஜன் தட்டுப்பாடு குறித்த எந்த சுய உணர்வும் இல்லாமல் வாயால் வடை சுட்டுக் கொண்டே இருந்தார்கள் பாரதீய ஜனதாவின் மக்கள் விரோதத் தலைவர்கள். அக்டோபரில் தான், அதுவும் வெறும் 150 மாவட்ட மருத்துவ மனைகளுக்கு ஆக்சிஜன் வேண்டும் என்று 2.7 கோடி டெண்டர் கோரி இருந்தார்கள். ஹரியானா, மஹாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் மற்றும் குஜராத்தில்தான் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. மருத்துவமனைகளில் யாகம் செய்வது, பசு மூத்திரம் குடிப்பது என்று குரங்காட்டிகளின் தலைவராக யோகி ஆதித்ய நாத் போன்ற பாரதீய ஜனதாவின் தலைவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாநிலங்களுக்கு இடையே ஆக்சிஜன் சிலி

ண்டர்களுக்கான சண்டை துவங்கி இருக்கிறது; ஹரியானாவின் அமைச்சர் திரு. அனில் விஜ், டெல்லி அரசு ஆக்சிஜன் கொண்டு வருகிற வாகனங்களைக் கடத்துவதாகவும், ஆகவே ஆக்சிஜன் கொண்டு வரும் வாகனங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டிருப்பதாகவும் Economic Times செய்தித்தாளுக்குப் பேட்டி அளித்திருக்கிறார்.

உத்திரப் பிரதேசத்தில் இடுகாடுகளைப் பெரிய டின் ஷீட்டுகளைக் கொண்டு மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் சாமியார் யோகி ஆதித்யநாத். 12−வது அவதாரமான பிரதமர் மோடியின் குஜராத்தில் ஓய்வின்றி இரவு பகலாக இடுகாடுகளில் பிணங்கள் எரிந்து கொண்டிருக்கிறது. உண்மையான மரண எண்ணிக்கைகளை மறைக்கும் வேலைகளில் அமைச்சர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

குஜராத் உயர்நீதிமன்றம் உண்மையான கோவிட்−19 நோயாளிகள் மற்றும் இறப்பு எண்ணிக்கையைத் தருமாறு அரசைக் கேட்டிருக்கிறது. ஏனைய மாநிலங்களில் நடக்கும் போலியான எண்ணிக்கைக் கணக்குகளும் நெஞ்சைப் பதற வைப்பதாக இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் ஒருநாளில் எரியூட்டப்பட்ட பிணங்களின் எண்ணிக்கை 97−ஆக இருக்கிற போது, அரசு வெறும் 3 என்று கணக்குக் காட்டுகிறது என்று “டைம்ஸ் நௌ” செய்தித்தாள் குறிப்பிடுகிறது.

மிகப்பெரிய அவலம் நடந்து கொண்டிருக்கும் போது ஒன்றுமே நிகழாததைப் போல அரசுகள் நாடகமாடுகின்றன. பிரதமர் ஏதுமறியாதவரைப் போல “நாம் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவோம், இது புதிய இந்தியா” என்று தேர்தல் மேடைகளில் புளுகிக் கொண்டு திரிகிறார்.

இந்த வாரத்தில் உலகிலேயே மிக அதிகமான கொரானா தோற்று இந்தியாவில் நிகழ்ந்திருக்கும் சூழலில், ஆளும் இந்துத்துவ அரசானது ட்விட்டரில் ஒரு காணொளியை வெளியிட்டிருக்கிறது. அதில் உள்துறை அமைச்சரும், பிரதமரும் கூடிக்குலாவியபடி தேர்தல் ஊர்வலங்களில் கலந்து கொள்கிறார்கள். உள்துறை அமைச்சர் முறைப்படி அவசர காலமாகக் கருதி தலைநகரில் இருந்தபடி பல்வேறு மாநிலங்களின் தேவைகளைக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அவரோ பல லட்சக்கணக்கான தொண்டர்களை ஓரிடத்தில் கூட்டி தேர்தல் பிரச்சாரத்தில் மும்முரமாகி இருக்கிறார். இறுதியாக மீண்டும் பன்னாட்டு அழுத்தங்களுக்கு அஞ்சி நடுங்கி பிரதமர் கடைசி தேர்தல் கூட்டங்களை மட்டும் ரத்து செய்வதாக அறிவித்தார். அடிப்படையான அறிவும் இல்லாத, மக்களைப் பற்றிய எந்த சிந்தனைகளும் இல்லாத ஒரு மூடரின் கீழாக இந்த இக்கட்டான சூழலில் தவித்துக் கொண்டிருக்கிறது இந்தியா.

ஆனால், மூட பக்தர்களோ இன்னும் திருந்திய பாடில்லை, “பாகிஸ்தான் தான் கிருமியைப் பரப்பியது; சீனாதான் கிருமியைப் பரப்பியது” என்று கிளப்பியபடி மோடியை புகழ்ந்து நாடு முழுவதும் ராஜஸ்தானியர்களும், குஜராத்திகளும் பாட்டுப் பாடுகிறார்கள். ஆனால், பாகிஸ்தானும், அதன் மக்களும் இந்தியாவுக்கு ஆக்சிஜன் வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மருத்துவ நிபுணர்களும், உலக நாடுகளின் மருத்துவ அமைப்புகளும் பல்வேறு எச்சரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருந்த போது, இந்தியாவின் பிரதமர் சிகை அலங்காரத்தை மாற்றிக் கொள்வதில் மும்முரமாய் இருந்தார். மக்களின் மீது எந்த அக்கறையும் இல்லாத சென்நிலைக்கு அவர் மாறி இருந்தார்.

அவரது சகாக்களும் பக்தர்களும் கோவிட்−19க்கு எதிராக ஒரு சூப்பர் மேனைப் போல அவரை சித்தரித்தார்கள். இந்தியாவில் கொரோனா சோதனைகள் கூட நிறுத்தப்பட்டு விட்டது. உழைக்கும் மக்களின் பணத்தைச் சுரண்டிக் கொழுக்கும் பணக்கார அல்லது உயர் நடுத்தர வர்க்கத்தினர் கடந்தமுறை தட்டுகளை அடித்தும் உடைத்தும் மோடியின் வைரசுக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

விளக்கேற்றி கொரானாவை ஓட்டினார்கள்; “பாக் கொரோனா பாக்” (ஓடு கொரோனா ஓடு) என்று புத்தி பேதலித்தவர்களைப் போல அவர்கள் வீதிகளில் அலைந்தார்கள். ஆனால், ஏழை கூலித் தொழிலாளிகளோ தங்கள் வேலைகளை இழந்து




உணவுக்கும் வழியின்றி வாழ்ந்த நகரங்களில் இருந்து வெளியேறி நடந்தார்கள். அதனால் அவரை தங்களிடம் வேலை பார்த்த அந்த கூலித் தொழிலாளிகள் மீது இந்து ராஜ்யத்தின் நீதி மான்கள் யாருக்கும் கருணைப் பிறக்கவில்லை. 12–வது அவதாரமான கடவுள் மோடிக்கும் கூட இந்த ஏழைத் தொழிலாளிகள் மீது சிறிதளவும் கருணை தோன்றவில்லை.

இவர்கள்தான் கடவுள் மோடியை இந்த தேசத்தின் பிரதமராகத் தேர்தெடுக்க வாக்களித் தவர்கள். இப்போதும் அவர்கள் மோடி தங்களைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறார்கள். அவரது உண்மையான கோர முகத்தை அறியாத வர்களாக!

எல்லாவற்றையும் தாண்டி இந்த தேசத்தின் 130 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்களுக்கு நான் வேலைக்காரன் என்று சுயவிளம்பரம் செய்து கொண்ட மோடி, இந்த அவசர காலத்தை ஒரு தேர்ந்த குற்றவாளியைப் போல கைகழுவி விட்டார். அவருக்கு அம்பானியையும், அதானி யையும் உலகப் பணக்காரர்கள் வரிசையில் முன்னேற வைக்கக் கூடிய மிக முக்கியமானப் பணி இருக்கிறது.

இந்தியாவின் விற்பனையை துரிதப்படுத்தும் நிர்மலா சீதாராமன் கையில் மிக நீண்ட பட்டியலோடு பிரதமரின் கண்ணசைவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். மருந்து நிறுவனங் களைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகளும் இல்லை. "Make in India" என்று போலிக்குரல் எழுப்பியபடி அலைந்த இஸ்லாமியர்களைக் கொன்று குவித்த கோரமுகம் கொண்ட நரேந்திர மோடி, இந்திய அரசின் மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களை ஏன் ஊக்குவிக்கவில்லை?

இந்திய மருத்துவக் கவுன்சிலின் தற்காப்பு நடவடிக்கைகளை ஏன் துரிதப்படுத்தவில்லை என்கிற இந்தக் கேள்விக்கும் பிரதமரும் பதில் சொல்ல மாட்டார், பக்தர்களும் பதில் சொல்ல மாட்டார்கள். மேற்கு வங்கத்தில் பிரதமர் கலந்து கொண்ட பிரச்சாரக் கூட்டத்திலேயே மாநில பாரதீய ஜனதாக கட்சித் தலைவர் “கோவிட் வந்தால் நாம் பசு மூத்திரத்தை குடிக்க வேண்டும்” என்று வெட்கமே இல்லாமல் பேசினார். இதைக் கேட்டுக் கொண்டு மண்டையை மண்டையை ஆட்டினார் பிரதமர். இப்படி ஒரு முட்டாள் பிரத மரை இந்தியா இதுவரை சந்திக்கவே இல்லை.

உலகம் முழுவதும் பல நாடுகளின் தலைவர் கள் கொரோனா காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களை சந்திப்பதிலும், இறந்தவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் சொல் வதிலும், ஊடகங்களை சந்தித்து என்ன மாதிரி யான மருத்துவ நடவடிக்கைகள் எடுக்கப்படு கிறது, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று வெளிப்படையாகப் பேசும்போது, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் மோசடியான பிரதமர் இதுவரை ஒருமுறைக் கூட ஊடகங்களை சந்திக்கவில்லை.

உலகெங்கும் நாடுகள் தங்கள் குடிமக்களுக்கு நேரடியாகப் பணத்தை நிவாரணமாகக் கொடுத் துக் கொண்டிருக்கும் போது குரூர மனமும், மூடத்தனமும் கொண்ட ஒரு பிரதமர் இதுவரை இந்த தேசத்தின் ஏழை உழைக்கும் மக்களுக்கும் கூட நேரடியான எந்த உதவிகளையும் செய்ய வில்லை என்பதுதான் முகத்தில் அறைகிற உண்மை.

கட்டுரையாளர் : Rana Ayyub (Time.com)
தமிழில் : கை.அறிவழகன் (முகநூலில் இருந்து)

நன்றி : வினவுஹ



### உத்திரப் பிரதேசத்தில்

# தேர்தல் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மரணம்

## யோகி ஆதித்யநாத் செய்த கொலைகள்

கோவிட் 19 இரண்டாம் அலையில் நாடே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும்போது, எதைப்பற்றியும் கவலை இல்லாமல் பஞ்சாயத்து தேர்தல்களை நடத்திக் கொண்டிருந்தது உத்தர பிரதேஷ் யோகி ஆதித்யநாத் அரசும் மாநில தேர்தல் ஆணையமும். ஏப்ரல் **15, 19, 26, 29** என நான்கு கட்டங்களாக நடந்த தேர்தலில் பணி யாற்றிய ஆசிரியர்கள் **1621** பேர் கோவிட் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு இதுவரை மரண மடைந்துள்ளனர்.

உடல்நிலைசரியில்லாத ஆசிரியர்களும்பணி யாளர்களும் தேர்தல் பணிக்காக அழைக்கப்பட மாட்டார்கள் என ஓட்டு எண்ணுவதற்கு ஒரு நாள் முன்னதாக (மே 1 2021) மாநிலத்தின் தலைமைச் செயலாளர் உறுதியளித்த பின்ன ரும் வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற நாளிலும், வாக்குப்பதிவு நடந்த நாளிலும் வராதவர்களின் ஊதியத்தை தராமல் நிறுத்தியுள்ளனர். தற்காலிக பணியிடை நீக்கம் செய்துள்ளனர் என ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சங்கம் குற்றம் சாட்டி யுள்ளது.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங் களில் எந்தவித கோவிட்19 பாதுகாப்பு வழிமுறை களையும் மாவட்ட நிர்வாகம் பின்பற்றவில்லை. பல ஆசிரியர்களின் மரணத்திற்குப் பின்பும் கூட ஆசிரியர்களை அலைகழிப்பதை மாவட்ட நிர்வாகம் கைவிட வில்லை என்பதுதான் வேதனை அளிப்பதாக உள்ளது என்கிறார் சர்மா. இவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவர்.

எனவே தேர்தல் பணியாற்றியபோது மரணித்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தேர்தல் பணியில் பங்கேற்காத ஆசிரியர்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை கைவிட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளது சங்கம்.

நோய் தொற்று உள்ளதா என்பதை கண்டறி யும் சோதனை (தபட இத பஉநப) மேற்கொள் ளாமலே மாநில அரசும் தேர்தல் ஆணையமும் தேர்தல் பணிக்காக பணியாளர்களை வற்புறுத்தி யதால், தேர்தல் பணியில் ஈடுபட்டு இறந்தவர் களின் குடும்பங்களுக்கு குறைந்தது ஒரு கோடி யாவது இழப்பீடாக வழங்க வேண்டும் என அலஹா பாத் உயர்நீதிமன்றம் மே **11** அன்று கூறியது.

**30** லட்சம் வரை இழப்பீடாக கொடுக்கலாம் என மாநில அரசு கூறியுள்ளது. ஆனால் தேர்தல் பணியில் ஈடுபட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை வெறும் மூன்று தான் என மனசாட்சியே இல்லா மல் கூறியுள்ளார் உபி ஆரம்பப்பள்ளி கல்வித் துறையின் அமைச்சர் சதீஷ் சந்திர திவேதி.

பாரதிய ஜனதா கட்சியை ஆட்சியில் அமர்த் தியதற்கு தங்களுடைய உயிர்களை தந்தும், வேலைகளை இழந்தும் தேர்ந்தெடுத்ததற்கான விலையை கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் உத்தரப் பிரதேச மக்கள். தேர்தல் நடத்திடுவதில் காட்டும் பிடிவாதம் மக்களின் உயிர்களை காப்பதிலும் இருக்க வேண்டும். பஞ்சாயத்து தேர்தலுக்குப்பின் உ.பி கிராமப்புறங்களில் நோய் தொற்று கட்டுக்கடங்காமல் சென்று கொண்டி ருக்கிறது. Source : The Hindu, 17May 2021

**– அபூ ஹாசின்**



# கொரோனா மரணங்கள் ஆகஸ்ட்டில் 10 லட்சம் ஆகுமா?

## மோதியை வறுத்தெடுத்த மருத்துவ சஞ்சிகை லேன்செட்

கொரோனா வைரசின் இரண்டாவது அலை இந்தியாவை கதி கலங்கச் செய்துகொண்டிருக்கிறது. தினமும் 4 லட்சத்துக்கு மேற்பட்ட தொற்றுகள் கண்டறியப்படுவதாகவும், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறப்பதாகவும் அரசு தரவுகளே கூறுகின்றன.

இந்தப் பேரிடரை இந்திய அரசு மிக மோசமாக கையாள்வதாக உலகெங்கிலும் உள்ள முன்னணி வெகுஜனப் பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

இந்த வரிசையில் சர்வதேச அளவில் மரியாதையைப் பெற்ற மருத்துவ சஞ்சிகையான லேன்செட்டும் சேர்ந்துகொண்டுள்ளது.

நரேந்திர மோதி அரசு கொரோனா வைரசின் இரண்டாவது அலைக்கு எப்படி வழி வகுத்தது, எப்படி படுமோசமாக இதைக் கையாள்கிறது என்பது குறித்து லேன்செட் இதழ் தமது சமீபத்திய வெளியீட்டில் தலையங்கம் எழுதியுள்ளது.

அந்த தலையங்கத்தின் தமிழாக்கம்:

இந்தியாவில் நிலவும் துயரக் காட்சிகள் விவரிக்கமுடியாதவை. மே 4ம் தேதி நிலவரப்படி, இந்தியாவில் 2 கோடியே 20 லட்சம் பேருக்கு கோவிட்–19 தொற்று கண்டறியப்பட்டுள்ளது. சமீப நாள்களின் சுழற்சி சராசரி என்று பார்த்தால் தினமும் தோராயமாக 3.78 லட்சம் பேருக்கு தொற்று ஏற்படுகிறது. அந்த தேதிவரை 2.22 லட்சம் பேர் இந்த நோயால் இந்தியாவில் இறந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கையெல்லாம் மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டது என்கிறார்கள் வல்லுநர்கள். மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. சுகாதாரப் பணியாளர்கள் சோர்ந்துவிட்டனர். அவர்களும் தொற்றுக்கு இலக்காகிறார்கள். மருத்துவர்களும், மக்களும் ஆக்சிஜன், படுக்கை, உதவிகள் கேட்டு கையறு நிலையில் விடுக்கும் வேண்டுகோள்கள் சமூக ஊடகம் எங்கும் நிரம்பி வழிகின்றன.

ஆனால், இந்த இரண்டாவது அலை மார்ச் மாதம் தொடங்குவதற்கு முன்பு, இந்த பெருந்தொற்றை துரத்தியடிப்பதில் இந்தியா கடைசி கட்டத்தில் இருப்பதாகக் கூறினார் இந்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன்.

இரண்டாவது அலை வரும், புதிய திரிபுகள் வரும் என்று திரும்பத் திரும்ப தரப்பட்ட

எச்சரிக்கைகளை மீறி, கோவிட் –19 நோயை வென்றுவிட்டதாக ஒரு பிம்பத்தை அரசாங்கம் கட்டமைத்தது. பல மாதங்களாக தொற்று எண்ணிக்கை குறைவாக இருந்த நிலையில் இந்தக் கருத்தை உருவாக்கியது அரசு.

இந்தியா மந்தை நோயெதிர்ப்பு நிலையை எட்டிவிட்டதாக போலியாக ஒரு கருத்தை முன்வைத்த அறிவியல் மாதிரிகள் காரணமாக ஒரு அசட்டை நிலை ஏற்பட்டது; போதிய தயாரிப்புகள் செய்யப்படவில்லை.

(இந்த மந்தை நோயெதிர்ப்பு பற்றிய உண்மை நிலையை கண்டறிவதற்காக) ஜனவரி மாதம் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் நடத்திய சீரோ சர்வே கணக்கெடுப்பு, கோவிட் 19 நோய்க்கு எதிராக மக்கள் தொகையில் 21 சதவீதம் பேர் உடலில்தான் எதிர்ப்பான்கள் (ஆன்டி பாடிகள்) உற்பத்தியாகியிருப்பதாக கூறியது.



பல நேரங்களில் பிரதமர் நரேந்திர மோதி அரசாங்கம் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்து வதைவிட டிவிட்டரில் முன் வைக்கப்படும் விமர்சனங்களை அகற்றுவதிலேயே அதிக ஆர்வம் காட்டியதாகத் தோன்றுகிறது.

பெருமளவு தொற்று பரவ வாய்ப்புள்ள நிகழ்வுகள் குறித்து எச்சரிக்கைகள் விடுக்கப் பட்டிருந்தபோதும், பல பத்து லட்சம் மக்கள் பங்கேற்ற மத நிகழ்வுகளை அரசாங்கம் அனும தித்தது. அரசியல் கூட்டங்களும் அனுமதிக்கப் பட்டன. இந்த கூட்டங்களில் கோவிட்–19 பாது காப்பு நடவடிக்கைகள் சுத்தமாக காணப்பட வில்லை. கோவிட் 19 கிட்டத்தட்ட முடிந்து விட்டது என்பதாக புரிந்துகொள்ளப்பட்டதால் தடுப்பூசி நடவடிக்கை தொடங்குவதும் தாமத மானது. மக்கள் தொகையில் 2 சதவீதம் பேருக்கு குறைவாகத்தான் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்திய ஒன்றிய அளவில் இந்த தடுப்பூசி நடவ டிக்கை விரைவில் சிக்கலில் மாட்டிக்கொண்டது. மாநிலங்களிடம் விவாதிக்காமலே தடுப்பூசிக் கொள்கையை மாற்றி, பாதையை மாற்றியது இந்திய அரசு.

18 வயதுக்கு மேலே உள்ள அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதாக அறிவித்தது தடுப்பூசி சப்ளை முழுவதையும் உறிஞ்சியது. பெரிய அளவுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. தடுப்பூசி டோஸ்களைப் பெறுவதற்கு சந்தையைத் திறந்து விட்டு, மருத்துவமனை அமைப்புகளுக்கும், மாநிலங்களும் போட்டிபோடும் நிலையை உண்டாக்கியது இந்திய அரசு.

சிக்கல் எல்லாப் பகுதியிலும் ஒரே மாதிரியாக இல்லை. உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற சில மாநிலங்கள் திடீரென உயர்ந்த தொற்று எண்ணிக்கையை சமாளிக்கத் தயார் நிலையில்இல்லை; மருத்துவ ஆக்சிஜன்விரைவில் தீர்ந்து போனது; மருத்துவமனையில் இடங்கள் இல்லை; இறந்தவர் உடல்களை எரியூட்ட இடங் கள் இல்லை. ஆக்சிஜனோ, மருத்துவமனையில் ஒரு படுக்கையோ வேண்டும் என்று கேட்பவர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று சில மாநில அரசுகள் மிரட்டின. கேரளா, ஒடிஷா போன்ற வேறு சில மாநிலங்கள் நல்ல தயார் நிலையில் இருந்தன. இரண்டாவது அலைக்கு போதிய அளவுக்கு மருத்துவ ஆக்சிஜனை இந்த மாநிலங்கள் தயாரித்ததோடு அல்லாமல் பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதியும் செய்தன.

தற்போது அரசாங்கம் இரு முனை உத்தியைக் கையாளவேண்டும். மோசமாக செயல்படுத்தப் பட்ட தடுப்பூசித் திட்டத்தை முறைப்படுத்தி வேகப்படுத்தவேண்டும். உடனடியாக இரண்டு தடைகளைக் கடக்கவேண்டும். முதல் தடை தடுப்பூசி சப்ளை. இந்த சப்ளையை அதிகரிக்க வேண்டும். குறிப்பிட்ட அளவு தடுப்பூசி வெளி நாட்டில் இருந்து வரவேண்டும். அடுத்தபடி யாக ஒரு தடுப்பூசி விநியோகத் திட்டத்தை செயல்படுத்தவேண்டும். அந்த திட்டம், நகரங் களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பதாக இல்லாமல், மக்கள் தொகையில் 65 சதவீதம் பேராக (80 கோடி மக்கள்) இருக்கும் கிராமப்புற மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் சென்று சேர

உதவுவதாக இருக்கவேண்டும். ஏனெனில் இந்த மக்களுக்கு மோசமான பொது சுகாதார, ஆரம்ப சுகாதார வசதிப் பற்றாக்குறை நிலவுகிறது. சமூகங்களைப் பற்றி அறிந்த உள்ளூர் ஆரம்பர சுகாதார மையத்தோடு இணைந்து செயல்பட்டு, தடுப்பூசிக்கான சம வாய்ப்பு அளிக்கும் விநி யோக முறையை அரசு உருவாக்கவேண்டும்.

இரண்டாவதாக, தடுப்பூசி செலுத்தப்படும் போதே கோவிட்−19 பரவலை முடிந்தவரை அரசு கட்டுப்படுத்தவேண்டும். தொற்று தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில், துல்லியமான தரவுகளை உரிய நேரத்தில் அரசு வெளியிடவேண்டும். இதன்மூலம் தெளிவாக என்ன நடக்கிறது என்பதை மக்களிடம் கூறி, பெருந்தொற்று வரை கோட்டை வளைக்க என்ன செய்யவேண்டும் என்று மக்களிடம் விவரிக்கவேண்டும். இந்திய ஒன்றியம் தழுவிய முடக்க நிலை வருவதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கவேண்டும்.

## விமர்சனத்தை முடக்கும் செயல் மன்னிக்க முடியாதது

புதிதாக வருகிற, வேகமாக பரவ வாய்ப்புள்ள கொரோனா வைரஸ் திரிபுகளை கண்காணிக்க, புரிந்துகொள்ள, கட்டுப்படுத்த அவற்றின் 'ஜெனோம் சீக்வன்சிங்' எனப்படும் 'மரபணுத் தொகுப்பு வரிசைப்படுத்தல்' நடவடிக்கை விரிவாக்கப்படவேண்டும்.

நோய்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாநில அரசுகள் தொடங்கியுள்ளன. ஆனால், முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல், கூட்டம் கூடுவதை தவிர்த்தல், தாமே முன்வந்து தனிமைப்படுத்திக்கொள்ளுதல், பரிசோதனை ஆகியவை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முக்கியப் பணி இந்திய ஒன்றிய அரசுக்கு உள்ளது.

சிக்கலான நேரத்தில் விமர்சனம், வெளிப் படையான விவாதம் ஆகியவற்றை முடக்க முயலும் மோதியின் நடவடிக்கைகள் மன்னிக்க முடியாதவை.

## ஆகஸ்ட் வாக்கில் 10 லட்சம் மரணங்கள்

சுகாதார அளவைகள், மதிப்பீடுகள் கழகம் (The Institute for Health Metrics and Evaluation) தயாரித்துள்ள ஒரு மதிப்பீட்டின்படி ஆகஸ்ட் 1ம் தேதி வாக்கில் இந்தியாவில் 10 லட்சம் கொரோனா மரணங்கள் ஏற்பட்டிருக்கும். அப்படி நடந்துவிட்டால், தனக்குத் தானே தீங்கி ழைத்துக்கொள்ளும் ஒரு தேசியப் பேரழிவுக்கு தலைமை வகித்த பொறுப்பு மோதி அரசாங்கத் தையே சேரும். கோவிட் 19 நோயைக் கட்டுப் படுத்துவதில் இந்தியா ஆரம்பத்தில் அடைந்த வெற்றியை அந்நாடு நாசம் செய்துகொண்டது. அதன் விளைவு கண்முன்னே தெளிவாகத் தெரிகிறது.

## சிதம்பரம் ட்வீட்

சிக்கல் தீவிரமடையும் இந்நேரத்தில் தனது எதிர்வினையை இந்தியா சீரமைக்கவேண்டும். அரசாங்கம் தமது தவறுகளை ஏற்றுக்கொள்வது, பொறுப்பான தலைமையை அளிப்பது, வெளிப் படைத்தன்மை, அறிவியலை அடிப்படையாகக் கொண்ட பொதுசுகாதார எதிர்வினை செய்வது ஆகியவற்றைப் பொறுத்தே அந்த முயற்சி வெற்றி பெறுவது இருக்கும்.




## சிதம்பரம் எதிர்வினை

"லேன்செட்டில் வெளியான தலையங்கத்தை அடுத்து கொஞ்சமாவது வெட்கம் இருந்தால் அரசாங்கம் மக்களிடம் பொது மன்னிப்பு கோர வேண்டும். இந்திய சுகாதார அமைச்சர் உடனடி யாக பதவி விலகவேண்டும்," என்று ட்விட்டரில் கருத்துத் தெரிவித்துள்ளார் முன்னாள் இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்.ஹ





# கோவிட் மரணங்களை மறைக்கும் குஜராத் அரசு

கொரோனோ தொற்றின் இரண்டாவது அலையின் காரணமாக இறந்தவர்களின் சடலத்தை எரிப்பதற்கு கூட இடமில்லாமல் வரிசையில் காத்திருந்த அவலம் இந்தியாவின் பல மாநிலங்கள் எப்படி ஒரு நோய் தொற்றுக்கு ஆளாகி உள்ளன என்பதை உலகுக்கே வெளிச்சம் போட்டு காட்டியது.

கோவிட் நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கையை மாநில அரசுகள் மறைக்கின்றன என்ற குற்றச்சாட்டை ஊடகங்கள் முன் வைத்தன. அதிலும் வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக காட்டப்பட்ட பிரதமர் மோடி முதல்வராக மூன்று முறை பதவியிலிருந்த குஜராத் மாநிலம் போதிய மருத்துவ கட்டமைப்பு இல்லாமல் அல்லாடுவதை ஊடகங்கள் இப்பொழுதுதான் விமர்சிக்க தொடங்கியுள்ளன அல்லது உண்மையை எழுதத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில்தான் குஜராத் நாளிதழான திவ்யா பாஸ்கர் மே 14 அன்று ஒரு செய்தியை வெளியிட்டது. அதில் கோவிட் மரணங்களை குஜராத் அரசு மறைக்கின்றது என்று கூறி சில தரவுகளை முன்வைத்தது.

மார்ச் 1 முதல் மே 10 ஆம் தேதி வரை 1.23 லட்சம் இறப்பு சான்றிதழ்களை அரசு வழங்கியுள்ளது. கடந்த வருடத்தில் இதே நாட்களில்

| | வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ்கள் | கோவிட் மரணங்களாக பதிவு செய்யப்பட்டவை | |
|---|---|---|---|
| அஹமதாபாத் | 13,593 (கடந்த ஆண்டு: 7,786) | 2126 | 2021 March 1- May 10 |
| ராஜ்கோட் | 10, 878 | 288 | 2021 March 1- May 10 |
| சூரத் | 8,851 (கடந்த ஆண்டு: 2769) | 1074 | 2021 March 1- May 10 |
| வதோதரா | 7,722 (கடந்த ஆண்டு: 2373) | 189 | 2021 March 1- May 10 |

கோவிட்–19 மரணங்களை அரசு மறைக்கவில்லை என்று கடந்த ஏப்ரலில் கூறினார் குஜராத் முதல்வர் விஜய் ரூபானி. ICMR (Indian council of medical research) இன் வழிகாட்டுதலின் படியே கோவிட் மரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றார்.

வழங்கப்பட்ட சான்றிதழ்கள் 58,000. கடந்த வருடத்தை விடவும் 65 ஆயிரம் கூடுதல் மரணங்கள் இந்த ஆண்டு நிகழ்ந்துள்ளன. ஆனால் 4218 நோயாளிகளே கோவிட் நோய் தொற்றினால் மரணித்து உள்ளனர் என்கிறது அரசு அறிக்கை.

மாவட்ட ரீதியாக இறந்தவர்களின் எண்ணிக்கையும் அதில் எத்தனை பேரை அரசு கோவிட் மரணத்தில் சேர்த்துள்ளது என்பதையும் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

கோவிட் இறப்புகளின் உண்மையான தரவுகளைஅரசு வேண்டுமென்றே மறைக்கின்றது என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றன. ஏனெனில் பல நோயாளிகள் கோவிட் சோதனை செய்யப்படாமலேயோ அல்லது முறையான சிகிச்சை வழங்கப்படாமலேயோ இறந்துள்ளனர் என்கிறார்கள் உள்ளூர் அதிகாரிகள்.

உதாரணமாக ஏப்ரல் 13 அன்று ருபல் தக்கர் (48) என்ற பெண் கோவிட் நோய்தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டார். உடல்நிலை மோசமாகவே ஏப்ரல் 16 அன்று மருத்துவமனைக்கு விரைந்தார் அவர். மருத்துவமனையில் சேர்த்த சில மணி நேரங்களிலேயே அவர் உயிர் பிரிந்தது. ஆனால் அவரின் இறப்புக்கு திடீர் மாரடைப்பே காரணம் என இறப்பு சான்றிதழ் வழங்கியது மருத்துவமனை.


இதைப்போன்ற பல சம்பவங்கள் குஜராத்தில் நடந்துள்ளன. இணை நோய்கள் இருந்தால் அதாவது கோவிட் நோய் தொற்றும் இருந்து கூடவே வேறு ஏதேனும் நோய்கள் இருந்தால் மரணங்கள் கோவிட்டினால் ஏற்பட்டது என்று பதிவு செய்யப்படுவதில்லை.

கடந்த மார்ச் மாதத்தில் தான் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் இப்படிக் கூறினார். ‘உலகத்துக்கே கோவிட் தடுப்பூசிகளை வழங்கும் மருத்துவ கேந்திரமாக இந்தியா செயல்படுகிறது. கோவிட் 19 இற்கு முடிவுரை எழுதிக் கொண்டிருக்கிறோம்‘ என்றார். ஆனால் இன்று தடுப்பூசி பற்றாக்குறை, கோவிட் நோய் தொற்று அதிகரிப்பு இவற்றினால் இந்தியா படும் அவலங்களை வெளிநாட்டு பத்திரிக்கைகள் எல்லாம் எழுதுகின்றன. வெளிநாட்டில் இருந்து மருத்துவ உதவிகளும் வந்த வண்ணம் இருக்கின்றன.

நிலைமையை புரிந்து கொள்ளாமல், முந்திக் கொண்டு வசனங்களை விட்டுவிட்டனர். இல்லாவிட்டால், மொத்த பழியையும் நேரு குடும்பத்தின் மீது வீசியிருப்பார்கள்.

*ஆதாரம்:* The Hindu, 18April 2021 & Scroll.in.

*– அபூ ஹாசின்.*






# இஸ்லாமிய மார்க்க அறிஞர் அலீ மியான் அவர்களும் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் சந்தித்தபோது



டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மத மாற்றம் பற்றி மிகவும் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அம்பேத்கரின் இந்த முடிவு நாட்டையே உலுக்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் அலீமியான் என்ற அபுல்ஹஸன் அலீ நத்வீ அவர்கள் நதுவத்துல் உலமா என்ற "தாருல் நத்வா" அரபிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்கள். இந்த அலீமியான் அவர்கள்தாம, பிற்றை நாள்களில், அகில இந்திய முஸ்லீம் தனியார் சட்ட வாரியத்தின் தலைவராகவும் இருந்தார்.

டாக்டர்அம்பேத்கர்; அவர்களின்மதமாற்றம் பற்றி இஸ்லாமியப் பல்கலைக்கழகமாகிய தாருல் நத்வாவிலும் விவாதமானது. அந்த விவாதத்தில், டாக்டர் அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்திற்கு அழைப்பது என முடிவு செய்தார்கள். அந்த அழைப்பை உரிய மரியாதையுடனும் விளக்கங்களுடனும், அம்பேத்கரிடம் நேரில் விடுத்திடும் பொறுப்பை, அதில் ஹஸன் அலீ நத்வீ அவர்களிடம் அதாவது, அலீமியான் அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

அலீமியான் டாக்டர் அம்பேத்கர் அவர்களை பம்பாயில் (இப்போது மும்பை) அவருடைய இல்லத்திலேயே சந்திப்பது என முடிவு செய்து புறப்பட்டார்கள். அப்போது அவருடைய அரபிமொழி ஆசிரியர் அவரை வழிமறித்தார்.

## யார் இந்த அரபிமொழி ஆசிரியர்

அலீமியான் அவர்களின் அரபுமொழி ஆசிரியர், அரபு நாடான ஏமான் நாட்டைச் சார்ந்தவர். அவர் பெயர் ஷேஹ் ஹலீல் இப்னு முஹம்மமத். இவர் அரபு பெருநிலத்தின் மதீனா வாசிகளான அன்சாரிகள் ஒருவரின் கிளையில் வந்தவர். இந்த அன்சாரிகள் (உதவியாளர்கள்) தாம். இறைவனால் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்ட இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உற்றத் துணையாக இருந்தவர்கள். இஸ்லாத்தை உலகில் நிலை நாட்டுவதில் முக்கியப் பங்காற்றியவர்கள். மிகப்பெரும் தியாகங்களைச் செய்தவர்கள்.

இந்த அன்சாரிகளின் கிளையில் வந்த ஷேஹ் ஹலீல் இப்னு முஹம்மத் அவர்கள் லக்னோ பல்கலைக்கழகத்தில் அரபி மொழி பேராசிரியராக பணியாற்றி வந்தார். அதே நேரத்தில் அவராகவேஓர்அரபிமொழிப்பாடத்திட்டத்தை வகுத்து மாணவர்களுக்கு அரபிமொழியைக் கற்றுக்கொடுத்து வந்தார். இவரிடம் மிகவும் நீண்டகாலம் அலீமியான் அவர்கள் அரபிமொழி பாடம் கற்றார்கள்.

இந்த அரபி ஆசிரியர் ஷேஹ் ஹலீல் இப்னு முஹம்மத்அவர்கள்தாம். இப்போது, அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்திற்கு அழைத்திடப் புறப்பட்ட அலீமியான் அவர்களை வழி மறித்தார்கள்.

வழிமறித்தவர், டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம் பேசும் போது, அவர் சார்பில் ஒரு செய்தியைச் சொல்லச் சொன்னார். "அம்பேத்கர் முஸ்லிம்கள் பெண் தருவார்களாக? எனக் கேட்டால் (மதீனாவின்) அன்சாரிக் கிளையைச் சார்ந்த ஓர் அரபி தன் மகளை மணம் முடித்துத் தந்திடத் தயாராக இருப்பதாகக் கூறுங்கள்" எனக் கூறி அனுப்பினார்.

அலீமியான் அவர்கள், இந்தச் செய்தியைச் சுமந்துகொண்டு டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம் சென்றார்கள், சந்தித்தார்கள். அப்போது, டாக்டர் அம்பேத்கர் அவரின் மேஜையில் திருக்குர்ஆன் பிரதி ஒன்றை கண்டார்கள். அலீமியான் அவர்கள். அதிலிருந்தே தன்னுடைய அழைப்பை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் அழைப்பைத் தொடர்ந்தார்கள். சமுதாய தளத்தில் உங்கள் மக்கள், மனிதர்கள் என்ற மதிப்பைப் பெறவும், கண்ணியமிக்கதொரு வாழ்க்கையை வாழவும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதே சிறந்தது எனக் கூறினார்கள்.

**டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்பட்டார்கள் என்பதற்கு இஃதோர் ஆதாரப்பூர்வமான ஆவணம். சிலர் அம்பேத்கருக்கு இஸ்லாம் எடுத்துச் சொல்லப்படவில்லை என வாதிக்கின்றார்கள்.**

(*ஆதாரம் :* Young Muslim Digest. Editorial, March-2000)

# விடியல் வேதாந்தாவுக்கா?



## தி.லஜபதிராய்

சாதாரணக் காற்றைவிட ஸ்டெர்லைட் தொழிற்சாலையில் 100 மடங்கு அதிகமான மாசு இருப்பதாகவும் 5 கிலோ மீட்டர் தொலைவில் இருந்த பொதுமக்களுக்குக் கூட கண் எரிச்சல், கீ மூச்சு திணறல் ஏற்பட்டதாகவும் கந்தகவாய்வு வெளியேற்றம் மூச்சு தொடர்பான உடல்நல சிக்கல்களை ஏற்படுத்துவதையும் நீதிமன்றம் கண்டறிந்து தீர்ப்பின் 408–வது பத்தியில் பதிவு செய்தது.

By ஃபேஸ்புக் பார்வை - May 7, 20210

ஆகஸ்டு 18, 2020 அன்று நெடிய வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு தமிழகத்தின் மற்றும் தில்லியின் சிறந்த நட்சத்திர வழக்கறிஞர் பட்டாளங்களுடன் நடத்தப்பட்ட வேதாந்தா நிறுவனம் எதிர் தமிழக அரசு மற்றும் பலர் என்ற ஸ்டெர்லைட் வழக்கின் தீர்ப்பு நீதிபதிகள் திருமிகு டி.எஸ்.சிவஞானம் மற்றும் திருமிகு வி.பவானி சுப்பராயன் ஆகியோரால் வழங்கப் பட்டது.

815 பக்கங்கள் கொண்ட மிக ஆழமான சட்ட மற்றும் சமூகப் புரிதல்களுடன் விளக்கமாக நீதிபதி டி.எஸ்.சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட அத்தீர்ப்பு சுற்றுச்சூழல் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று ஆவணமாகவும், நீதிமன்றங்களது சமூகப் பங்களிப்பில் விதிவிலக்கான ஒரு முக்கிய தீர்ப்பாகவும் விளங்கும். முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.என். பகவதி அவர்கள் ஒருமுறைக் கூறியதைப் போல, இது போன்ற அரிதினும் அரிதான தீர்ப்புகளை ஜூடிசியல் லாட்டரி என்றேக் கொள்ளலாம்.

1990–களில் 102.50 ஹெக்டேர் நிலங்கள் சிப்காட் மூலம் செம்பு உற்பத்தி செய்யும் வேதாந்தா நிறுவனத்தின் தூத்துக்குடி ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது.

ஜனவரி 16, 1995–ஆம் ஆண்டு அன்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அத்தொழிற்சாலையை தொடங்க அனுமதி அளித்தது. பின்னர் மே 22, 1995–ஆம் நாள் அன்று தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நீர் மற்றும் காற்று சட்டங்கள் கீழ் தொழில் தொடங்க அனுமதி அளித்தது.

தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு 391 முதல் 900 டன் செம்பு உற்பத்தி திறன் கொண்டதாக அமைக்கப்பட்ட அத்தொழிற்சாலையானது பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய உற்பத்தி திறனைப் பெருக்கி 2006–ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1,200 டன்கள் உற்பத்தி திறன் கொண்டதாகவும்கீ 2009–ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 2,400 டன்கள் உற்பத்தி திறன் கொண்டதாகவும் மாறியது.

செம்பைத் தவிர செம்புக் குச்சிகள், செம்புக் கம்பிகள், கந்தக அமிலம், பாஸ்போரிக் அமிலம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக அது விளங்கியது.

ஒருசில நீதிமன்ற வழக்குகளுக்குப் பின்னர் ஜனவரி 14, 2016 அன்று தொழிற்சாலையை நடத்த வழங்கிய ஒப்புதல் 2023–ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்தது. அதை தொடர்ந்து அந்நிறுவனம் நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் அனுமதியைப் புதுப்பிக்க விண்ணப்பம் செய்தது.

மார்ச் 14, 2017–ஆம் நாளில் நீர்ச் சட்டத்தின் கீழ் ஏழு மீறல்களும் காற்றுச் சட்டத்தின் கீழ் ஆறு மீறல்களும் கண்டறியப்பட்டன.

பிப்ரவரி 05, 2018–ஆம் ஆண்டில் தூத்துக்குடி குமாரரெட்டிபாளையம் அருகில் பொதுமக்களின் எதிர்ப்பு தீவிரமாகத் தொடங்கியது. மார்ச் 15, 2018–ஆம் நாளில் போராட்டம் நடத்த அனுமதிகேட்டு மக்கள் விண்ணப்பம் செய்தனர். ஏபரல் 09, 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழான இசைவாணைகளைப் புதுப்பிக்காமல் நிராகரித்தது.

மே 18, 2018–ஆம் ஆண்டு வேதாந்தா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபர் வேதாந்தா நிறுவனத்தின் ஒரு கிலோ மீட்டர் எல்லைக்குள் எவ்வித ஆர்ப்பாட்டங்களை நடத்தக்கூடாது எனவும், மக்கள் அதிகாரம் என்ற அமைப்பு மே 22, 2018–ஆம் நாள் அன்று போராட்டம் ஒன்று நடத்தப்போவதாக எழுந்த சூழல் காரணமாக ஆலையைச் சுற்றி போராட்டங்களுக்கு தடையாணை வேண்டும் என தங்கள் நீதிப்பேராணை முறையீட்டில் கூறி இருந்தது. மே 18, 2018–ஆம் நாளன்று உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி ஒருவர் வேதாந்தா நிறுவனத்தின் வேண்டுகோளைப் பரிசீலனை செய்ய மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவிட்டார். அவ்வுத்தரவிலேயே தேவை ஏற்பட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 144–இன் கீழ் தடை உத்தரவு வழங்கவும் பரிந்துரை செய்திருந்தார்.

மே 22, 2018–ஆம் ஆண்டு அன்று மக்கள் போராட்டத்தின் போது பொதுமக்கள் மீது அரசால் திட்டமிட்டு நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் உழைக்கும் சமூகங்களிலிருந்து 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மறுநாளே மே 23, 2018–ஆம் தேதி அன்று மாசுக்கட்டுபாட்டு வாரியம் ஸ்டெர்லைட் தொழிற்சாலையின் அனுமதிகளை ரத்து செய்து மூட உத்தரவிட்டது.

மேற்சொன்ன உத்தரவுகளை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் நீதிப்பேராணைகளை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த வழக்குகளைத் தவிர தூத்துக்குடியைச் சேர்ந்த பாத்திமா என்பவர் தொழிற்சாலையை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் வழக்கு ஒன்றை தொடர்ந்து இருந்தார். வேதாந்தா நிறுவன வழக்குகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.எஸ். அர்ச்சுனன், மக்கள் அதிகாரத்தின் வழக்கறிஞர் திரு.ராஜூ, மறுமலர்ச்சி திராவிட கட்சியின் தலைவர் திரு. வைக்கோ ஆகியோர்களும் எதிர்தரப்பினர்களாக முன்னிலையானார்கள்.

ஸ்டெர்லைட் தொழிற்சாலையின் செம்பு உற்பத்தி தொழில், சிவப்புப் பட்டியலின் கீழ் வரும் தொழில்களில் ஒன்று. அத்தொழிற்சாலையானது சட்டப்படி சிறப்பு தொழிற்சாலை மற்றும் இடர்விளையும் பகுதியில் அமைய வேண்டுமே தவிர (Special Industrial and Hazardous Zone) பொது தொழிற்சாலைப் பகுதியில் அமையக் கூடாது. இது தொடர்பான உத்தரவு ஜூலை 24, 1974–ஆம் நாள் அரசாணை எண்.1730–இன்படி வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஸ்டெர்லைட் தொழிற்சாலை அமைந்துள்ள மீளவிட்டான் கிராமத்தில் பொது தொழிற்சாலை பகுதி மட்டுமே இடம் பெற்றுள்ளது.

இதுதவிர தூத்துக்குடி மாவட்டம் சுவாமி நத்தம் மற்றும் பழைய காயல் பகுதியில் மட்டுமே இடர் விளைய கூடிய தொழிற்சாலைகளை அமைக்க முடியும் என தூத்துக்குடி மாவட்ட பெருந்திட்ட வரைபடம் காட்டுகிறது. அத்திட்டத்தின் பகுதிகளை மாற்றுவது உள்ளூர் மக்களின் கருத்துகளைக் கேட்காமல் செய்யக் கூடியது அல்ல. எனவே, ஸ்டெர்லைட் தொழிற்சாலை அமைய கூடிய இடம் தகுதி இழப்பிற்கு உள்ளாகிறது.

எம்.சி.மேத்தா வழக்கில் 2004–ஆம் ஆண்டின் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி சட்ட மீறலை சட்டமியற்றும் அரசு நியாயப்படுத்த இயலாது என்ற கோட்பாட்டை நீதிபதி டி.எஸ். சிவஞானம் அவர்கள் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டினார்.

ஏப்ரல் 09, 2018–ஆம் நாளிட்ட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவின்படி ஒப்புதலை புதுப்பிக்க மறுத்தமைக்கு முதன்மைக் காரணங்களாக வெள்ள நீர் ஓடையான உப்பார் மற்றும் பட்டா நிலங்களில் செம்பு கழிவுகளை குமித்தமையும், நிலத்தடி நீர் ஆய்வறிக்கைகளை வழங்காமையும், இடர்தரும் கழிவுகளை குவித்து வைத்தமையும், ஜிப்சம் சேமிப்பு குட்டையை

அமைக்காமையையும் காரணங்களாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிட்டது.

காப்பர் ஸ்லாக் எனப்படும் செம்பு கழிவுகள் 3,50,000 டன்கள் தனியார் நிலத்தில் சேமிக்கப் பட்டன. இது தவிர பழைய கழிவுகள் 7,47,327 மெட்ரிக் டன்கள் அகற்றப்பட்டதாக வேதாந்தா நிறுவனம் குறிப்பிட்டது. தொழிற்சாலைக்கு வெளியே 10 இடங்களில் கொட்டப்பட்ட செம்பு கழிவுகளின் எடை மட்டும் 5,37,765 மெட்ரிக் டன்கள்.

மேற்சொன்ன கழிவுகள் கொட்டுவதற்கு தனியார் நில உரிமையாளருடன் ஸ்டெர்லைட் தொழிற்சாலை நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், அக்கழிவுகளை பொது நீர் ஓடைகளில் கலக்கவிடாமல்கீ நிலத்தை மாசுப் படுத்தாமல் வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத் தும் பொறுப்பு ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு உள்ளது.

ஸ்டெர்லைட் ஆலை செம்பு கழிவுகள் ஆலைக்கு வெளியே 10 கிலோ மீட்டர் தொலை வில் கொட்டப்பட்டு தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை மேம்பாலம் அருகில் குன்றைப் போல தோற்றம் அளிக்கும் அக்கழிவுகள் தூத்துக் குடியில் 2016–ஆம் ஆண்டில் நடந்த வெள்ள நிகழ்வுக்கு பெரும் காரணமாக அமைந்தது.

மழை நீர்ஓடைகளில் நீரோடுவதை மறிக்கும் விதத்தில்கழிவுகள்கொட்டப்பட்டதால்வெள்ள நீர் தூத்துக்குடி நகருக்குள் புகுந்து மக்களுக்கு பெரும் இடர் விளைவித்தது.

ஜூலை 14, 2016 அன்று தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் ஆறு வருடங்களுக்குப் பின்னர் திடீர் என விழித்துக் கொண்டு சாதார ணமாக யாரும் எளிதாகப் பார்க்க கூடிய கழிவு குவியலைக் கண்டு கொள்ளாமல் போனதும், மாசுக்கட்டுபாட்டு வாரியமும், மாவட்ட நிர்வா கமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வாள விருந்ததும், அரசியல் மற்றும் அதிகாரிகளின் தலையீட்டு காரணமாகவா? என்பதையும் ஆய்வு செய்து அத்தவறுக்கு காரணமானவர்கள் கண்டறி யப்பட வேண்டும் எனவும் தீர்ப்பில் உயர்நீதி மன்றம் குறிப்பிட்டது.

2011–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளர் உயர்நீதிமன்றத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுடன் இணைந்து அளித்த அறிக்கையில் மீளவிட்டான், தெற்கு வீரபாண்டியபுரம், சங்கரப்பேரி உள்ளிட்ட கிராமங்களையும் ஸ்டெர்லைட் தொழிற்சாலை யின் தெற்கு பக்க கால்வாயையும் ஆய்வு செய்த போது 2002–ஆம் ஆண்டிற்கு பிறகு அங்கு கிடைக்கும் நிலத்தடி நீர் குடித்தண்ணீருக்குப் பயன்படுத்த முடியாதபடியும், 2011–ஆம் ஆண்டின் களஆய்வின் போது அப்பகுதி மக்கள் தங்களுக்கு கண் எரிச்சல், மூச்சு திணறல் ஆகியன விடியற்காலை 4 மணி முதல் 6 மணி வரை நிகழ்வதாகவும் அந்நேரத்தில் மாசு ஏற்படுத்தும் வாய்வுகள் காற்று மண்டலத்தில் கலப்பதால் அவ்வாறு நிகழ்கிறது எனவும், கழிவுகள் நீரோடைகள் கலப்பதாலும் கால்நடைகள் அந்நீரை குடித்து இறந்துப் போவதாகவும் தெரிவித்ததை நீதிமன்றம் பதிவு செய்தது.

1998–ஆம் ஆண்டில் நீரி என்ற (NEERI) சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனம் ஸ்டெர்லைட் நிறுவன கழிவுகளை மறுசுழற்சி செய்யும் சுத்திகரிப்பு நிலையங்களை ஒழுங்காக நிறுவவில்லை எனத் தனது நவம்பர் 07, 1998–ஆம் நாள் அறிக்கையின்படி தெரிவித்தது.

இது தவிர மிக முக்கியமாக ஸ்டெர்லைட் நிறுவனம் அளித்த தகவலின்படி செம்பு உற்பத் தியின் போது பாதரசம் எனும் நச்சுத்தன்மை கொண்ட உலோகம் கழிவாக வெளியேறும் எனவும் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையின்படி பாதரசம் அகற்றும் கோபுரம் அமைக்கப்பட்டு இருக்க வேண்டுமெனவும் ஆனால், அங்கு கழிவாக உற்பத்தியாகும் பாதரசம் வளிமண்டலத்தில் காற்றோடு காற்றா கக் கலந்து ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் பயணிக்கும் எனவும் ஸ்டெர்லைட் நிறுவனத் தால் இதுவரையில் உற்பத்தி செய்யப்பட்ட அப்பாதரசத்தின் அளவானது குறைந்தது 25.91 மெட்ரிக் டன்கள் இருக்குமெனவும் கூறிய 9–வது எதிர்மனுதாரான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளரின் கூற்றை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், கொடைக்கானல் இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம் 7.95 கிலோ எடையுள்ளப் பாதரசத்தை விதிகளை மீறி வெளியேற்றி மாசுப் படுத்தியதற்காக மூடப்பட்டதை சுட்டிக்காட்டி யதையும் கருத்தில் கொண்டு இது தீவிர விசாரணை செய்ய வேண்டிய கூற்று எனவும்




மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அதை கருத்தில் கொண்டிருக்கவேண்டுமெனவும்குறிப்பிட்டார்.

நீதிபதி தனது தீர்ப்பில் 374 பத்தியில் மாசுக் கட்டுபாட்டு வாரியத்தின் நடைமுறைகளின்படி மாசு அளவீடு செய்யப்படவில்லையெனவும் ஸ்டெர்லைட் நிறுவனம் தொடர்ச்சியாக தாங்கள் சர்வதேச விதிமுறைகளை பின்பற்று கிறோம் எனவும் கூறுவதை நீதிபதி கண்டித்து ஒழுங்குபடுத்துவர்களான மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நடைமுறை விதிகளைத் தொடர்ச்சி யாக ஸ்டெர்லைட் நிறுவனம் கடைபிடிக்க வில்லையெனவும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

காற்றில் மாசின் அளவை கண்டறிய அமைக் கப்பட்ட நிலையங்களை மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஒழுங்காக கண்காணிக்கவில்லையென வும் அந்த அளவுகள் தவறாக இருப்பதையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, 2015 முதல் 2018−ஆம் ஆண்டு வரை காற்றின் தரம் முறையாக கண்காணிக்கப்படவில்லையெனவும் அங்குள்ள தொழிற்சாலை வளாகத்தில் அமைக் கப்பட்டுள்ள கண்காணிப்பு நிலையங்களுக்குள் எடுத்ததாகக் கூறப்பட்ட தர அளவுகள் நிலை யாக ஒரே அளவில் இருப்பதையும் அவ்வாறு இருக்க வாய்ப்பில்லையெனவும் அவ்வளவுகள் உண்மைக்கு மாறானவையாக இருக்கின்றன எனவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

2005−ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நீரி (NEERI) நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தணிக்கை அறிக்கையின் படி நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் காட்மியம், குரோமியம், செம்பு, ஈயம் போன்றவை அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக இருப்பதையும் நீதிபதிகள் கவனத்தில் கொண்டனர்.

ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்குள் அமைக் கப்பட்ட 40 ஏக்கர் ஜிப்சம் குட்டையில் ஒரு லட்சம் டன் ஜிப்சம் சேமிக்கப்பட்டு இருந்தது. இது தவிர நான்கு லட்சம் டன்கள் பழைய ஜிப்ச மும் அங்கு சேமித்து வைக்கப்பட்டு இருந்தது. ஜிப்சம் குட்டைக்கு வெளியில் இருந்தக் கண் காணிப்புகிணறுகளில்இருந்து எடுத்ததண்ணீரின் தரம் மிக குறைவாகவும் அதில் நச்சுத்தன்மை மிகுந்து இருந்ததையும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கண்டறிந்தது. மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அளித்த வண்ணப் புகைப்படங்களில் ஜிப்சம் குட்டைக் கிணற்றுப் பகுதி பனிப் பொழியும் இடத்தைப்போல் தோற்றமளித்ததை நீதிபதிகள் கண்டனர். நிலத்தடி நீர் மோசமாகப் பாதிக்கப்பட்டதையும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் போதிய உட்கட்டமைப்பின்றி இயங்கு வதையும் நீதிமன்றம் பதிவு செய்தது.

2013−ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் ஸ்டெர் லைட் தொழிற்சாலை இயங்க அனுமதித்து இருந் தாலும் கூட 2013−ஆம் ஆண்டுக்கு முன்பாக நிகழ்ந்தநிகழ்வுகளைகருத்தில்கொள்ளமுடியாது என்ற வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. தொழிற்சாலை இயங்க இசைவாணை வழங் கப்பட்டபோது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தொழிற்சாலை இயங்கும் வரை நடப்பில் இருக்கு மெனவும் நிபந்தனைகள் நிரந்தரமானவை என்ப தையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ரூ.100 கோடி அபராதம் எவ்வித தாக்கத்தையும்

ஏற்படுத்தாமல் ஸ்டெர்லைட் தொழிற்சாலை யானது நீர் மற்றும் காற்றை தொடர்ந்து மாசுப் படுத்தி வந்ததாகவும் சாதாரணக் காற்றைவிட தொழிற்சாலையில் 100 மடங்கு அதிகமான மாசு இருப்பதாகவும் 5 கிலோ மீட்டர் தொலைவில் இருந்த பொதுமக்களுக்குக் கூட கண் எரிச்சல், மூச்சு திணறல் ஏற்பட்டதாகவும் கந்தகவாய்வு வெளியேற்றம் மூச்சு தொடர்பான உடல்நல சிக்கல்களை ஏற்படுத்துவதையும் நீதிமன்றம் கண்டறிந்து தீர்ப்பின் 408–வது பத்தியில் பதிவு செய்தது.

நாளொன்றுக்கு 870 மெட்ரிக் டன்கள் மட்டுமே உற்பத்தி செய்ய இயலும் என்ற காலத்தில் விதியை மீறி அனுமதிக்கப்பட்ட உற்பத்தி திறனுக்கு மேலாகவே ஸ்டெர்லைட் நிறுவனம் உற்பத்தி செய்வதாக மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் தெரிவித்தது.

மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நீர் மற்றும் காற்று சட்டங்கள் மீறல்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பை மட்டும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய செயலாளர் அனுப்பிவிட்டு அவ்விதி மீறலுக்கான தண்டனையைப் பெற்றுத்தராததுக் குறித்து நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

செம்பு கழிவு அல்லது ஸ்லாக் ஒரு இடர் தரும் நச்சுப்பொருள் அல்ல என்ற மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் கருத்தானது ஸ்டெர் லைட் தொழிற்சாலையின் கழிவு குவியலுக்குப் பொருந்தாது எனவும் அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு எனும்போது மிகையான செம்பு கழிவுகள் கொட்டப்படும் போது கிணறு களிலும், நிலத்தடி நீரிலும், ஆர்சனிகழிவு மற்றும் காட்மியம் ஆகியன சேர்வதையும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

தொழிற்சாலை வளாகத்தை சுற்றி 250 மீட்டர் தூரம் பசுமை வளையம் ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக் காரணமின்றி குறைக்கப் பட்டதையும், 25 மீட்டர் பசுமை வளையமும் ஏக்கருக்கு 1000 மரங்கள் என்ற அளவில் நடப்பட வேண்டும் என்ற நிபந்தனையானது மீறப்பட்டதையும் தொழிற்சாலை வளாகத்தை சுற்றி காற்று மாசைத் தடுக்கும் பசுமை வளையத் திற்கு பதிலாக மரங்கள் தீவுகளாக பல ஹெக் டேர்கள் பரப்பளவில் குடியிருப்பு பகுதிகளிலும் பிற பகுதிகளிலும் நடப்படுவது காற்று மாசைத் தடுக்க பசுமை வளையம் அமைக்கப்படுவதின் நோக்கத்தை நிறைவேற்றாது எனவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

60,000 பணியாளர்கள் பணிபுரியும் ரஷ்யா வின் இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் 2 கிலோ மீட்டர் சுத்தமான பகுதித் தொழிற்சாலையை சுற்றி அமைப்பதன் காரணத்தையும் அதை நிறை வேற்ற வழக்கிட்டு வெற்றி பெற்ற பெண்ணின் வழக்கையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்காக 172.17 ஹெக்டேர் நிலங்கள் இருப்பதாகக் கூறிய வேதாந்தா நிறுவனம் உண்மையில் 102.31 ஹெக்டேர் நிலங்கள் மட்டுமே வைத்திருந்தது எனவும் அங்குள்ள 60 தொழிற்சாலைகளில் இயங்கக் கூடிய நிலையில் உள்ள 51 சிவப்புப் பட்டியல் தொழிற்சாலைகளில் ஸ்டெர்லைட் தொழிற்சாலை போல அதிக நச்சு வாய்வுகளை வெளியிடுவது இல்லையென்ற மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்தின் கூற்றையும் நீதிபதிகள் பதிவு செய்தனர்.

84 மீட்டர் உயரப் புகைக் கூண்டு அமைப்ப தற்குப் பதிலாக இரு கூண்டுகளைச் சேர்த்து 60.38 மீட்டர் கோபுர உயரம் அமைந்ததாக ஸ்டெர்லைட் தொழிற்சாலை கூறுவது சரியல்ல எனவும், புகைக் கூண்டின் உயரம் குறைவாக இருந்தால் கந்தக வாய்வு காற்றில் கலப்பது அதிக மாகும் எனவும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

இது தவிர காற்றில் வெளியேற்றப்படும் நச்சு வாய்வின் அளவு அதிகப்படுத்துவதும் அந்த நச்சு வாய்வை வெளியேற்றும் கோபுரத்தின் உயரம் ஒற்றை கோபுரமாக 80 மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும் என ஐ.ஐ.டி வல்லுநர் பரிந்துரை செய் ததையும், ஆனால் இரண்டு கோபுரங்கள் சராசரி 60 மீட்டர்களில் அமைந்திருப்பது போதாது எனவும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

முழுமையாக மூடப்பட்ட லாரிகளில் மூலப் பொருள்களை தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 18 கிலோ மீட்டர் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிபந்தனையை மீறி திறந்த தார்ப்பாயி னால் அல்லது பிளாஸ்டிக் தாள்களைக் கொண்டு மூடிய லாரிகளில் மூலப்பொருள் கனிமங்களைப் பாதுகாப்பின்றி எடுத்துச் செல்வதையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

செம்பு மூலப் பொருளில் ஆர்சனிக் நச்சு பொருள் இருப்பதால் அது உடல்நலக் குறைவை யும் புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை கொண்ட தாக இருப்பதையும் துறைமுகத் தொழிலாளர் களுக்கு உடல்நலக் குறைவுகள் ஏற்பட வாய்ப் புள்ளதையும் அதன் காரணமாகவே குறைந்த தரமுடைய செம்புக் கனிம மூலப்பொருள் "முட்டாள்களின் தங்கம்" என அழைக்கப்படு வதையும் நீதிமன்றம் பதிவு செய்தது.

வேதாந்தா நிறுவனம் இறக்குமதி செய்யும் செம்புக் கனிமத்தின் தரத்தை மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் சோதனையிடுவதில்லை யெனவும் நீதிமன்றம் கூறியது.

சுற்றுச்சூழல் உணர்வற்ற வேதாந்தா நிறுவனம் இன்று வரையில் பசுமை வளைய நிபந்தனை களை கடைப்பிடிக்கவில்லையெனவும் 1995–லி ருந்து 2018 வரை முறையான அனுமதியில்லாமல் ஸ்டெர்லைட் தொழிற்சாலை இயங்கியது அதிர்ச்சி தருகின்ற உண்மையெனவும் நீதிபதிகள் குறிப்பிடுகின்றனர். தீர்ப்பின் 516–ஆம் பத்தியில் பல்வேறு நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாய உத்தரவுகளின் அடிப்படையில் ஸ்டெர்லைட் தொழிற்சாலை இயங்கியதையும் இசைவாணை இல்லாமலேயே 01.04.2000 முதல் 18.04.2005 வரை தொழிற்சாலை இயங்கியதையும் 16 வருடங்கள் 92 நாட்கள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணை இல்லாமல் இயங்கிய ஸ்டெர்லைட் தொழிற்சாலை 10 வருடங்கள் 2 மாதங்கள் 15 நாட்கள் இடர்தரும் கழிவு மேலாண்மை அனுமதி இல்லாமல் இயங்கியதை யும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஸ்டெர்லைட் தொழிற்சாலையை கண் காணிக்க வேண்டிய, ஒழுங்குப்படுத்தக்கூடிய, சீர்செய்யக் கூடிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஒழுங்குப்படுத்துவதற்கு மாறாக கையறு நிலையில் இருந்ததையும், ஸ்டெர்லைட் தொழிற் சாலையின் முந்தைய நடத்தைகளை கருத்தில் கொண்டு அரசு அதை மூட உத்தரவிட்டதைத் தவிர வேறு வழி ஏதுமில்லை எனவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

2017–2018–ஆம் ஆண்டுகளில் செம்பு உற்பத் தியின் போது துணைப் பொருளாக உருவான 721.59 மெட்ரிக் டன் ஆர்சனிக் கனிமத்திற்குக் கணக்கு இல்லையென்றும் அந்த ஆர்சனிக்கானது சுற்றுச்சூழலில் கலந்திருக்கும் எனவும், வேதாந்தா நிறுவனம் செம்பு கனிமத்தை வேறு வேறு நாடுகளில் இருந்து பெறும் போது அதிலுள்ள ஆர்சனிக் வேதி பொருளின் அளவு மாறுபடும் எனவும் ஆர்சனிக் ஒரு இடர்தரும் கழிவுப் பொருள் எனவும் இடர்தரும் கழிவுப்பொருளின் மேலாண்மை அனுமதியில்லாதப் போதிலும் செம்பு உற்பத்தியின் துணைப் பொருளாக உருவான ஆர்சனிக் எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளியேற்றப்பட்டதையும் 2004–ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு ஸ்டெர்லைட் தொழிற்சாலை வளாகத்தி லேயே ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள ஆர்சனிக் அடங்கிய செம்பு கழிவுகள் குவித்து வைக்கப்பட்டதையும் தொழிற்சாலை விரிவாக் கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறமாலேயே ஆலை விரிவாக்கப்பட்டு இருந்ததால் நீர் மற்றும் காற்றுச் சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென நீதிபதிகள் சுட்டிக்காட்டினார்.

இடர்தரும் கழிவுகளை கையாளும் உட்கட் டமைப்புகள் ஸ்டெர்லைட் தொழிற்சாலையில் இல்லையென்பதையும் குவித்து வைக்கப்பட் டுள்ள செம்புக் கழிவுகளிலிருந்து கழிவு நீர் கசிவு ஏற்படுவதால் அவற்றிலிருந்து ஆர்சனிக் கசிந்து நிலத்தை அடைவதையும் மறுக்க முடியாது என வும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

இடர்தரும் கழிவுகளை மகராஷ்ட்டிராவில் உள்ள திருவாளர் சுகான்ஸ் கெமிக்கல் நிறுவனத் திற்கு கொடுத்தப் போதிலும், சுகான்ஸ் கெமிக்கல் நிறுவனம் பெருமளவிலான இடர்தரும் கழிவு களை கையாள அனுமதிப் பெறவில்லையென வும்கீ தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இடர்தரும் கழிவு மேலாண்மை விதிமுறைகளை பின்பற்றவில்லையெனவும், சுகான்ஸ் கெமிக்கல் நிறுவனத்தின் கழிவு கையாளும் திறன் நிக்கல் கழிவுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் ஸ்டெர்லைட் நிறுவனம் மேற்கொண்ட கழிவு மேலாண்மைநடைமுறைகள்திருப்தியளிப்பதாக இல்லையெனவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

மார்ச் 23, 2013 அன்று உருக்காலை கூரையில் குளிரூட்டி குழாயில் ஏற்பட்ட ஓட்டைக் காரணமாக உருக்காலை மூடப்பட்டதாகவும் அதிகாலை 4 மணியளவில் மாற்று வழியில்



செம்புக் கரைசல் செலுத்தப்பட்டதாகவும் அந்நேரத்தில் காற்றின் திசையால் கந்தக வாய்வு தூத்துக்குடி நகருக்குள் புகுந்து பொது மக்களுக்கு கண் எரிச்சல் ஏற்பட்டதாகவும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவிப்பு தெரிவிக் கிறது. அந்நேரத்தில் மாசுக் கட்டுப்பாட்டு வாரி யத்தின் காற்றுக் கவனிப்பு மையத்துடன் ஸ்டெர் லைட் ஆலையின் கந்தக வாய்வு வெளியேற்றக் கண்காணிப்பு கருவியுடன் இணைக்கப்பட வில்லை.

ஸ்டெர்லைட் ஆலையின் காற்று வாய்வு வெளியேற்ற அளவு குறித்த அறிக்கைகள் கையால் எழுதப்பட்டதாக இருப்பது மிகச்சிறந்த தொழில் நுட்பங்களைத் தங்களது தொழிற்சாலையில் புகுத்தியதாகக் கூறியப்போதும் வேதாந்தா நிறுவனத்தின் அறிக்கைகள் கையால் எழுதப் படுதப்பட்டதாகக் கூறுவது நம்பும்படியாக இல்லை எனவும் கந்தக வாயு வெளியேறிய நிகழ்வுக்காக 5 நாட்கள் 133 குற்றவியல் நடை முறைச் சட்டப்படி மாவட்ட நிர்வாகத்தால் ஸ்டெர்லைட் நிறுவனம் மூடப்பட்டு இருந்ததை யும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஸ்டெர்லைட் நிறுவனம் கந்தக வாய்வு கசிவின் போது தங்கள் நிறுவன மென்பொருள் சரிசெய்வதற்காக சில பராமரிப்பு வேலைகளை செய்ய வேண்டிய இருந்ததால் அவ்வாறு சரி செய்வது வரையில் தங்களது மென்பொருளை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மென்பொருள் அமைப்புடன் இணைக்க முடியவில்லை என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்பதும் காற்றின் தர பரிசோதனை கருவியானது கூடுதல் அளவு எதையும் பதிவு செய்யவில்லை என்று கூறுவது ஸ்டெர்லைட் நிறுவனத்தை பொறுப்பிலிருந்து விடுவிக்காது எனவும் 5 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பொது மக்களை கண் எரிச்சல் ஏற்பட்டு அவர்கள் மருத்துவர்களிடம் சென்றதும் பொது மக்களைப் பரிசீலித்த மருத்துவர்களும் வாக்குமூலங்கள் கொடுத்திருப்பது அந்நிகழ்வை உறுதி செய்கிறது எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

ஐந்து நாட்கள் தொழிற்சாலையை மூடி மறுபடியும் தொடங்கியதை மாவட்ட நிர்வாகம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குத் தெரிவிக்க வில்லை என்றும் 2008–ஆம் ஆண்டில் திருநெல் வேலி மருத்துவ கல்லூரியில் சமூக மருந்தியல்; துறையில் நடத்திய ஆய்வறிக்கை ஒன்றில் தொழிற்சாலையை சுற்றியுள்ள கிராமங்களில் 80,725 பேர்களைப் பரிசோதனை செய்ததில் மூளைக் கட்டிகள் ஏற்படும் விகிதம் ஆயிரக் கணக்கான மடங்கு தேசிய அளவைவிட அதிக மாகவும் 12.6 விழுக்காடு மரணங்களையும், நரம்பியல் நோய்களையும் பிற நோய்களையும் கண்டறிந்தனர்.

ஸ்டெர்லைட் நிறுவனம் சார்பில் தங்களது 4,000 தொழிலாளர்களுக்கு எவ்வித சுகாதார இடர்பாடுகளும் நேரவில்லை என்றக் கூற்றை நிராகரித்த நீதிமன்றம் திருநெல்வேலி மருத்துவ கல்லூரியின் அறிக்கையை ஏற்றுக் கொண்டது.

எம்.சி.மேத்தா, வேலூர் சிட்டிசன் வெல்பர் அசோசியேஷன் வழக்கு, இந்தியன் கவுன்சில் பார் லீகல் ஆக்சன் வழக்கு, திருப்பூர் டையிங் அசோசி யேஷன் வழக்கு போன்ற ஏராளமான வழக்கு களை அலசி ஆராய்ந்த உயர்நீதிமன்றம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பொருளாதார நலன்களை விட மேலானது என கூறியது. முன்னெச்சரிக்கைக் கோட்பாடு தங்கள் வழக்குக்குப் பொருந்தாது என்ற ஸ்டெர்லைட் நிறுவனத்தின் வாதத்தை

மறுத்த உயர்நீதிமன்றம் 2013–ஆம் ஆண்டு மாசுப்படுத்துபவர் காசுக் கொடுக்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி ரூ.100 கோடி ஸ்டெர் லைட் நிறுவனம் கொடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைச் சுட்டிக் காட்டிய நீதிபதிகள், ஆலையை மூடும் உத்தரவு பொது மக்கள் போராட்டத்தின் விளைவால் முழங் காலில் தட்டினால் காலை உதறும் நிலைபோல நிகழ்ந்தவை அல்ல என்றும், ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எதிராக சமூக வலைதளங்களில் உலா வந்த செய்திகளை வதந்திகள் எனக் கூறுவதை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

1997–லிருந்து 2018 வரையில் தொழிற்சாலை வளாகத்தில் நடந்த ஏராளமான விபத்து மரணங் களையும் நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டிய நீதி மன்றம் நாட்டின் செம்பு தேவையை இறக்கு மதியும் உள்நாட்டில் உள்ள வேறு தொழிற் சாலைகளும் நிறைவு செய்யும் என்ற மாநில அரசின் வாதத்தையும், மாநில அரசோ அல்லது மாசுக்கட்டுப்பாட்டு வாரியமோ கெட்ட நோக் கத்தினால் தொழிற்சாலை மூடி விட்டதாகக் கூறாதாதக் காரணத்தாலும், மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளை ஸ்டெர் லைட் நிறுவனங்கள் மீறியதாலும் தூத்துக்குடி யைத் தவிர மகாராஷ்டிராவிலும் இதே போல் மாசு ஏற்படுத்தியதால் மக்கள் கிளர்ச்சியால் தொழிற்சாலை அங்கிருந்து அகற்றப்பட்டதை யும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் பதிவு செய்தனர்.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரானப் போராட்டங்கள் ஒரு சிலரால் மட்டும் எடுக்கப் படுவதாகவும், தூத்துக்குடி சென்னையை விடப் பாதுகாப்பானது என்ற ஸ்டெர்லைட் நிறுவனத் தின் வாதத்தையும் நீதிமன்றம் நிராகரித்தது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பத்தாவது தொகுப்பில் இதுகாறும் ஸ்டெர்லைட் நிறுவனத் திற்கு எதிராக பொதுமக்கள், அரசியல் கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கொடுத்தப் புகார்களை கருத்தில் கொண்ட நீதிபதிகள் மத்திய அரசின் புள்ளி விவரங்களின் படியே தூத்துக்குடி நகர் இந்தியாவிலேயே மாசு பட்ட நகர்களில் தமிழ்நாட்டிலுள்ள ஒரே நகராக விளங்குவதையும், எனவே தூத்துக்குடி சென்னையை விடப் பாதுகாப்பானது என்ற வாதம் தவறானது எனவும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

திருமிகு. பாத்திமா என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு 21547 / 2019 ஆலையை முற்றிலுமாக அங்கிருந்து அகற்ற வேண்டும் என்ற வேண்டுகோளைக் கொண்டி ருந்தது. அந்த நீதிப்பேராணையானது மதுரை உயர்நீதிமன்றத்தில் சிப்காட் நிறுவனம் நில ஒப்படைப்பை ரத்து செய்த உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த நீதிப் பேராணையுடன் மதுரையில் விசாரிக்க வேண்டு மெனவும் உத்தரவிட்டனர்.

மேலும், காற்று மற்றும் தண்ணீர் சட்டங்களின் கீழ் இசைவாணைகளைப் புதுப்பிக்க மறுத்த உத்தரவை எதிர்த்து ஸ்டெர்லைட் நிறுவனம் தாக்கல் செய்த வழக்குகளை தள்ளுபடி செய்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவுகள் செல்லும் என உறுதி செய்தது. இது தவிர தொழில் பாதுகாப்பு இணை இயக்குநர், பாய்லர் இயக்குநர், தீயணைப்புத் துறை இயக்குநர் ஆகியோர் ஆலைக்குக் கொடுத்த அனுமதியை ரத்து செய்ததையும் நீதிபதிகள் உறுதி செய்தனர்.

இறுதியாக ஸ்டெர்லைட் ஆலையை மூடும் உத்தரவை எதிர்த்த நீதிப்பேராணையையும் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

இந்தியாவில் 60 விழுக்காடு மருத்துவ உயிர் வளி உற்பத்தி செய்யும் ஐனாக்ஸ் போன்ற தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கும் போது, உயிர்வளி உற்பத்திக்காக 22 வருடங்கள் அனுமதிப் பெறாமல் சுற்றுச்சூழலைப் பாழ் படுத்தி காற்றுச்சட்ட விதிமீறலுக்காக மூடப் பட்ட வேதாந்தா நிறுவனத்தின் ஸ்டெர்லைட் தொழிற்சாலை தற்காலிகமாகத் திறக்கப்பட விடியல் தரப்போகும் கட்சிகளும் ஆதரவளித்தது சரியான முடிவாகத் தெரியவில்லை. விடியல் வேதாந்தாவிற்கா என நான்கு மாதங்களுக்குப் பின்னரே தெரியும்.

ஆகஸ்டு 18, 2020 அன்று இந்தியா சுற்றுச் சூழல் சட்ட வரலாற்றில் நிலைத்து நிற்கும் தீர்ப்பு களில் ஒன்றாக உயர்நீதிமன்றம் வழங்கியது. அத்தீர்ப்பை உச்சநீதிமன்றம் மாற்றாது என்று நம்புவோமாக!

– தி.லஜபதி ராய்

மதுரை–20 30.04.2021

– நன்றி : Lajapathi Roy முகநூலில்ஹ



# ரபேல் ஒப்பந்தம்

## இடைத்தரகருக்கு ரூ. 8.6 கோடி

ரபேல் போர் விமானம் வாங்குவதற்கான ஒப்பந்தம் முடிவானதிற்கு பின், ஒரு மில்லியன் யூரோவை நடுத்தரகர் ஒருவருக்கு கொடுப்பதற்கு சம்மதித்துள்ளது பிரான்சின் டஸ்ஸால்ட் நிறுவனம். இந்த முறைகேட்டை பிரான்ஸின் புலனாய்வு இதழான மீடியா பார்ட் (Media part) வெளிக்கொண்டு வந்திருப்பது ரஃபேல் விவகாரத்தில் மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

2012 இல் மன்மோகன்சிங் அரசு ரூபாய் 41 ஆயிரத்து 212 கோடிக்கு 126 ரபேல் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்திருந்தது. இதன்படி ஒரு விமானத்திற்கான விலை 526 கோடி. இதில் 18 விமானங்கள் பறக்கும் நிலையிலும் ( அதாவது முழுமையாக தயாரிக்கப்பட்ட நிலையில்) மீதி விமானங்கள் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனத் துடன் இணைந்து இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ளதாகவும் ஒப்பந்தம் போடப்பட்டது.

மோடி பிரதமராக பதவி ஏற்ற பின் அரசு முறைபயணமாக 2015 இல் பிரான்ஸ் சென்றார். அவருடன் அனில் அம்பானியும் சென்றார். முந்தைய ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்றார். ரூபாய் 59000 கோடிக்கு 36 ரபேல் போர் விமானங்கள் பறக்கும் நிலையிலேயே வாங்குவதற்கான புதிய ஒப்பந்தம் போட்டார். 2016 இல் ஒப்பந்தம் முடிவானது. இந்தியா கொடுக்கும் தொகையில் 50% இந்தியாவி லேயே முதலீடு செய்யப்பட வேண்டும் என்றும் கையெழுத்து ஆனது.

விமான தயாரிப்பில் அனுபவம் கொண்ட ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் (HAL) நிறுவ னத்தை தவிர்த்துவிட்டு, முன் அனுபவமே இல்லாத வாராக்கடன் பிரச்சினையில் சிக்கி யிருக்கும் ரூ 1.21 லட்சம் கோடி கடன் கொண்ட அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவ னத்தை இந்திய பங்குதாரராக சேர்த்து ரூ 30,000 கோடிக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது ஏன் என்ற கேள்விகள் எழுந்தன.

ரிலையன்ஸ் நிறுவனத்தை பங்குதாரராக சேர்ப்பது டஸ்ஸால்ட்டின் விருப்பம். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என வெள் ளோந்தி தனமாக கேள்வி கேட்டது மோடி அரசு. ஆனால், ரிலையன்சை பங்குதாரராக

சேர்க்கச் சொல்லி அழுத்தம் கொடுத்தது இந்திய அரசே. எங்களுக்கு வேறு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என 2018 செப்டம்பரில் மீடியா பார்ட்டுக்கு அளித்த பேட்டியில் கூறினார் பிரான்ஸ் அப்போதைய அதிபர் ஹோலந்தே.



இதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச் சாட்டு எழுந்தது. விவகாரம் உச்ச நீதிமன்றம் சென்றது. இந்திய தலைமை தணிக்கை அதிகாரிகள் குழு இரண்டு அரசுகள் செய்த ஒப்பந்தத்தையும் ஒப்பிட்டு, மோடி அரசு செய்த ஒப்பந்தம் 2.8% மலிவானது என்று கூறியது. முறைகேடுகள் நடைபெறவில்லை எனவே விசாரணை செய்ய தேவையில்லை என்றது உச்ச நீதிமன்றம்.

ஆனால், 2017 ஆம் ஆண்டு டஸ்ஸால்ட் நிறுவனத்தின் வரவு செலவு கணக்கை ஆய்வு செய்திடும் போது, வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட பரிசு என்ற தலைப்பில் 508, 925 யூரோக்கள் டஸ்ஸால்ட கொடுத்துள்ளதை பிரான்சின் ஊழல் தடுப்பு முகமை (AFA) கண்டுபிடித்துள்ளது.

ஆனால் இதுகுறித்து விசாரித்திட சம்பந் தப்பட்ட சாரணை அதிகாரிகளுக்கு அவர்கள் தெரியப்படுத்தவில்லை. இதே தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்ற தொகையுடன் ஒப்பிடும்போது, மேற்குறிப்பிட்ட தொகை கணக்கில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருந் துள்ளது. ஒரு பரிசுக்காக மிகப்பெரிய தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸ் சட்டத்தில் எவ்வளவு தொகை பரிசாக கொடுக்கலாம் என்ற வரைமுறை இல்லாவிட்டாலும்கூட, அன்பளிப்பாக ஒரு கடிகாரத்தை வழங்குவது அல்லது பலநூறு யூரோக்களை செலவழித்து உணவு அருந்துவது கூட ஊழலுக்கு சமம் என்று கூறப்பட்டுள்ளதாக மீடியா பார்ட் ரிப்போர்ட் கூறுகிறது.

50 ரபேல் மாதிரிகளை தயாரிப்பதற்கு இந்திய நிறுவனமான Defsys solution-ஐ தேர்ந்தெடுத்துள்ளது டஸ்ஸால்ட் நிறுவனம். Defsys solution வழங்கிய, 2017, மார்ச் 30 தேதியிட்ட விலைவிபரப் பட்டியலை பிரான்ஸ் ஊழல் தடுப்பு முகமையிடம் சமர்ப்பித்து, பரிசு என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொகை, மாதிரிகளை தயாரிக்க Defsys இக்கு வழங்கப்பட்டது தான் என்று சமாளித்து உள்ளது டஸ்ஸால்ட். மொத்த மாதிரியில் 50% சதவிகித மாதிரிகளை (அதாவது 25 models) தயாரித்ததற்கான விலை விபரப் பட்டியலே அது. ஒரு மாதிரியை தயாரிக்க 20,000 யூரோ. எதற்காக இந்திய நிறுவனத்திடம் மாதிரிகளை தயாரிக்க கேட்டுக்கொண்டது டஸ்ஸால்ட்? உண்மையில் மாதிரிகள் தயாரிக்கப்பட்டனவா ? மாதிரிகள் கார் அளவு இருக்குமா? அப்படி என்றால் அவை எங்கே என விசாரித்துள்ளது பிரான்சின் ஊழல் தடுப்பு முகமை. அப்படி யொரு மாதிரி தயாரிக்கப்பட்ட தற்கான ஒரு போட்டோவை கூட டசால்ட் நிறுவனத்தால் காட்ட இயலவில்லை.

மறைமுகமான பணப் பரிவர்த்தனைகள் வெளியில் தெரிந்து விடாமல் இருப்பதற் காகவே மாதிரிகளை வாங்கியது போன்று கணக்கு காட்டி உள்ளதாக சந்தேகிக்கின்றனர் ஆய்வு மேற்கொண்டவர்கள்.

இந்திய விமானப் படைத் தளபதியின் வீட்டில் இருந்த மாதிரி உட்பட இந்தியாவின் மற்ற பகுதிகளில் வைக்கப்பட்ட மாதிரிகள் Defsys solution வழங்கியதாக இருக்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால் அவையெல்லாம் Defsys தயாரித்து வழங்கியது தான் என்பதை டஸ்ஸால்ட் உறுதி செய்ய மறுத்துவிட்டதாக கூறுகிறார் இந்த ஊழலை வெளிக்கொண்டு வந்த மீடியாபார்ட் செய்தியாளர் யான் பிலிப்பின்.

எந்தப் பிரச்சினையும் இதில் இல்லை என்றால் டசால்ட் எங்களிடம் அதை தெரிவித்து இருக்கலாம் ஆனால் அவர்கள் எந்த பதிலையும் கூறாததே விநோதமாக உள்ளது என்கிறார் யான் பிலிப்பின்.

Defsys solution நிறுவனம் குப்தா குடும்பத்துக்கு சொந்தமானது. VVIP ஹெலிகாப்டர் வாங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளன என்ற குற்றச்சாட்டில் சிபிஐயும் அமலாக்கத் துறையும் குப்தா குடும்பத்தின் உறுப்பினரான சுசன் குப்தாவை விசாரணை செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2019-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், கோப்ரா போஸ்ட் மற்றும் எக்கனாமிக் டைம்ஸ் ஆகிய இரண்டு செய்தி நிறுவனங்களும் சுசேன் குப்தா டஸ்ஸால்ட் நிறுவனத்துடனான ரஃபேல் ஒப்பந்தத்தில் இடைத்தரகராக செயல்பட்டதாகவும், ரபேல் ஒப்பந்தத்தை முடிப்பதற்கு இந்திய பாதுகாப்புத் துறையின் பல இரகசிய ஆவணங்களையும் இந்நிறுவனம் பெற்றதாகவும் செய்தி வெளியிட்டன.

ரபேல் போர் விமான ஊழல் சர்ச்சை முடிவுக்கு வந்துவிட்டது என்று நினைத்த பிஜேபிக்கு மீண்டும் தலைவலியை கொடுத்துள்ளது மீடியா பார்ட். குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. இதில் விசாரணை நடத்த தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே கூறிவிட்டது என்று மழுப்பி வருகிறது பிஜேபி.

126 போர் விமானங்களுக்கு பதிலாக ஏன் 36 போர் விமானங்கள் வாங்கப்பட்டன? எந்த அடிப்படையில் மோடி அரசு செய்த ஒப்பந்தம் மலிவானது என்று இந்திய தலைமை தணிக்கை குழு அறிக்கை அளித்தது?


அனுபவம் வாய்ந்த ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தை கழட்டிவிட்டுவிட்டு ரிலையன்ஸ் நிறுவனம் பங்குதாரராக ஏன் சேர்க்கப்பட்டது? மலிவான ஒப்பந்தம் என்று ஒரு பேச்சுக்கு எடுத்துக் கொண்டாலும் 126 போர் விமானங்களை வைத்திருப்பது இந்தியாவுக்கு வலிமையானதா அல்லது 36 போர் விமானங்களை வைத்திருப்பது வலிமையானதா?

- தகவல்கள்: டெக்கான் க்ரானிக்கிள், தி வயர்

- அபூ ஹாசின்









# நெல்லி படுகொலை

## பத்தாயிரம் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்

பிப்ரவரி–18, 1983ல் இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட கோரமான இனப்படுகொலை தான் நெல்லி படுகொலை.

இந்தியாவில் முஸ்லிம்கள் பெயரில் நிகழ்த்தப்படும் தீவிரவாத சம்பவங்கள் மூலை முடுக்கெங்கும் அதில் முஸ்லிம்களுக்கு தொடர்பில்லையென்றால் கூட முஸ்லிம்களால் நிகழ்த்தப்படும் கோரங்கள் என்று தீயாக பரப்பப்படும். ஆனால் முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் இந்தியாவில் கொல்லப்பட்ட சம்பவங்கள் முஸ்லிம்களுக்கே கூட தெரியாத ஒன்றாக இருக்கும். இதனை தான் மதச்சார்பற்ற இந்தியா என்பார்கள்.

1983ல் இந்தியாவின் மாநிலமான அஸ்ஸாமில் கிட்டத்தட்ட 10,000 முஸ்லிம்கள் ஆறு மணி நேரத்திற்குள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வரலாற்று நிகழ்வு நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்?

இன்று NRC என்று உருவாக்கப்படும் பிரச்சனைக்கு அன்றே ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பலிகொடுக்கப்பட்டார்கள். இந்த படுகொலை சம்பவங்களை தெரிந்து கொள்ளும்போது தான் பாசிஸ்ட்கள் எப்படி வெறுப்பின் மூலம் இனப் படுகொலையை நடத்துகிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியும்.

நெல்லி படுகொலையை பற்றி அறிவதற்கு முன் அஸ்ஸாம் முஸ்லிம்களை பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

### அஸ்ஸாம் முஸ்லிம்கள்

1971–ல் இந்தியாவின் உதவியுடன் போரில் வெற்றி பெற்று பங்களாதேஷ் என்ற புதிய நாடு பாகிஸ்தானிடம் இருந்து விலகி உருவாகிறது. இதில் பங்களாதேசுக்கு உதவுவதற்காக போரின் போது பங்களாதேசில் இருந்து வந்தவர்களை இந்தியா அரவணைத்து கொள்கிறது. அதில் பங்களாதேசை சேர்ந்த இந்துக்களும், முஸ்லிம்களும் இருந்தார்கள்.

போருக்கு பிறகு 1971ல் புதிய நாடு உருவாகி விட்டதால் பலர் பங்களாதேசிற்கு திரும்பி விட்டார்கள். ஆனால், அவர்கள் திரும்பவில்லை அஸ்ஸாமில் தங்கி விட்டார்கள் என்ற பிரச்சாரம் முடக்கி விடப்பட்டது. இதற்கு பலி கொடுக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள்.

அஸ்ஸாமில் இன்னொரு தனித்துவ இயல்பு என்னவென்றால் எல்லையோரம் இருக்கும் மக்கள் பங்காளி மொழி பேசுபவர்களாக இருந் தார்கள். அதனால் அஸ்ஸாமிய மொழி பேசுபவர் களுக்கும் பெங்காலி மொழி பேசுபவர்களுக்கும் சிக்கல் இருந்து வந்தது.

போரிற்கு பிறகு பங்களாதேசில் இருந்து அஸ்ஸாமிற்குள் வந்தவர்களால் தங்கள் வாழ்வா தாரம் பாதிக்கப்பட்டது என முடக்கி விடப் பட்ட பிரச்சாரத்திற்கு பெங்காலி பேசும் முஸ்லிம்கள் மட்டும் பலியானார்கள். இதில் பெங்காலி பேசும் இந்துக்கள் ஒதுங்கி விட்டனர்.

தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புரைகள் இந்துத்துவ அமைப்பினருடன் இணைந்து கொண்டு அஸ்ஸாம் மாணவர் சங்க அமைப்பினர் செய்து வந்தனர். அஸ்ஸாமில் முஸ்லிம்களைகண்டால்அவர்பங்களாதேசியாக தான் இருப்பார் என்று வன்முறை சம்பவங்கள் சிறிது சிறிதாக நடக்க தொடங்கியது,



முஸ்லிம்களால் தான் எங்கள் வருமானத்தை இழந்தோம், எங்கள் பகுதிக்குள் வந்து குடியேறி எங்களை அடிமையாக்க பார்க்கிறார்கள் இந்த பங்களாதேசிகள் என முஸ்லிம்கள் மீது தொடர் வெறுப்பு அஸ்ஸமில் கட்டமைக்கப்பட்டு அனைத்து பகுதியிலும் பரவி இருந்தது.

அஸ்ஸாம் மாணவர் அமைப்பு அதனை யொட்டி 1983ல் வந்த நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிக்க சொன்னது. ஆனால், பலர் அந்த கோரிக்கையை புறக்கணித்தார்கள். குறிப்பாக பங்களாதேசில் வந்த இந்துக்களும், முஸ்லிம் களும் தங்கள் குடியுரிமைக்காக இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனை இந்த அமைப்புகள் சரியாக பயன்படுத்திக்கொண்டு 18 பிப்ரவரி 1983ல் தங்களது வெறியாட்டத்தை தொடங் கின. இதில் கிட்டதட்ட 10,000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு பிறகு இந்த கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க அஸ்ஸாமிய முஸ்லிம்கள் ஒன்றிணைந்து எங்களுக்கு சதஇயை கொண்டு வாருங்கள் என்று கேட்டனர். இதை தொடர்ந்து 1985ல் அஸ்ஸாமிய ஒப்பந்தம் கொண்டு வரப் பட்டது. அதனடிப்படையில் NRC உருவாக்கப் பட்டது. இறுதியில் 2018ல் வெளிவந்த NRCல் மொத்தம் 20 லட்சம் பேர் பங்களாதேசிகள் என்று சொல்லப்பட்டது. அதிலும் வெறும் 5 லட்சத்துக்கும் குறைவானவர்களே முஸ்லிம்கள்.

பங்களாதேசிகள் என்று சொல்லப்பட்ட வர்களில் இந்துக்களே முஸ்லிம்களை விட நான்கு மடங்கு அதிகம் இருந்தனர். NRC பட்டியலில் இடம்பெறாத முஸ்லிம்களில் பெரும்பாலா னோரும் கூட அஸ்ஸாமில் இருக்கும் முஸ்லிம் வெறுப்பு நடவடிக்கையால் வெளியேற்றப் படவர்கள் தான் என்று மனித உரிமை அமைப்பு கள் கூறுகின்றன. (இந்த NRC தொடர்பாக தெளிவான கட்டுரை நம்து வைகறை பக்கத்தில் இருக்கிறது படித்து கொள்ளவும். http://vaigaraivelichamonline.com/?p=1527)

பாஜக அரசு எடுத்த நடவடிக்கையின் படியே அஸ்ஸாமில் பங்களாதேசை சேர்ந்த இந்துக்கள் தான் அதிகம் இருந்தனர் என்று தெரிய வந்தது. ஆனால் இதற்கு மாற்றமாக முஸ்லிம்கள் மேல் பழி போடப்பட்டு 1983ல் 10000 முஸ்லிம்கள்

கொல்லப்பட்டனர்.

## நெல்லி படுகொலை

38 வருடத்திற்கு முன்பு 18 பிப்ரவரி 1983ல் அஸ்ஸாமில் முஸ்லிம்களுக்கு எதிராக காலை 10 மணிக்கு தொடங்கியது கலவரம். மொத்தம் ஆறு மணி நேரம் இந்த படுகொலை நடத்தப்பட்டது. அரசாங்கப் பதிவுப்படி மொத்தம் 2191 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். ஆனால் 10,000க்கும் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக பல்வேறு பதிவுகள் கூறுகிறது.

மொத்தம் முஸ்லிம்கள் வாழும் 14 கிராமங்கள் முழுக்க தீக்கிரையாக்கப்பட்டது. அஸ்ஸாம் மாணவர் சங்கம் மற்றும் ஆர்.எஸ்.எஸ் உட்பட இந்துத்துவ கும்பல் இணைந்து இந்த கலவரத்தை நடத்தினார்கள்.

படுகொலையின் போது நேரடி சாட்சியமாக இருந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின் பத்திரிக்கையாளர் ஹேமந்திர நாராயணன் அந்த நிகழ்வை பிற்காலத்தில் பதிவு செய்தார். அதில்,



அது மிக கொடூரமான சம்பவம் விவரிக்க கூட முடியாது. தொடக்கத்தில் முஸ்லிம் பகுதிக்குள் புகுந்து அனைத்து வீடுகளுக்கும் தீ வைத்து எரித்தார்கள். நம் சொந்த நாட்டிலேயே நம்மை பிச்சைக்காரர்கள் ஆக்கி விட்டார்கள். இன்று இவர்களை முழுக்க கொல்ல வேண்டும். வந்து அனைவரும் சேர்ந்து கொள்ளுங்கள் என்ற கோசத்துடன் முஸ்லிம்களை கொல்வதற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டார்கள்.

வீடுகளுக்குள் இருந்த குழந்தைகள், பெண்கள் என அனைவரும் வீட்டுடன் சேர்த்து எரிக்கப்பட்டனர்.

தப்பித்து ஓடி வந்த முஸ்லிம்கள் ஓடுவதற்கு வழியில்லாமல் இருக்கும் போது முலாதாரி பாலத்தில் வைத்து கொத்து கொத்தாக கொல்லப்பட்டனர்.

முஸ்லிம்களுக்கு தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள ஓடுவதை தவிர வேறு வழியே இல்லை. ஆனாலும் அவர்களுக்கு ஓடுவதற்கு பாதை இல்லை. ஒரு புறம் தெமால் ஆறு மற்றொரு புறம் கோபில் ஆறு என மாட்டிக் கொண்டார்கள். பலர் ஆற்றுக்குள் குதித்து உயிரை மாய்த்து கொண்டார்கள். சிலர் உயிர் பிழைத்தார்கள்.

தப்பித்து ஓடுவதில் பெண்களும் குழந்தைகளும் முடியாமல் எளிதாக கொல்லப்பட்டார்கள். என் கண் முன்னால் மட்டும் 22 பெண்கள் பிணமாக ஒரே இடத்தில் இருந்ததை பார்த்தேன்.

நான் ஒரு பச்சை நிற சேலை உடுத்திய ஒரு பெண்ணை பார்த்தேன். அவர் தன் மூன்று குழந்தைகளை கூட்டிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தார். அவரது அழுகை கூட வித்தியாசமாக இருந்தது. அழுவதை கூட அவர்கள் மறந்து விட்டார்கள்.

இதுபோல் எண்ணற்ற சாட்சியங்கள் இருந்தும் கலவரத்தில் ஈடுபட்ட ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை.

## படுகொலைக்கு பிறகான நீதி

முஸ்லிம்களுக்கு என்று வந்து விட்டால் அதில் நீதி என்ற பேச்சுக்கே இங்கே இந்தியாவில் இடமில்லை. அதற்கு இன்னொரு உதாரணம் நெல்லி படுகொலை.

படுகொலை முடிந்து 688 வழக்குகள் கலவரக்காரர்கள் மீது பதியப்பட்டது. அதில் 310 வழக்குகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. 1500க்கும் மேற்பட்ட கலவரக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் அனைவரும் விடுதலையாகி ஒருவருக்கு கூட தண்டனை கிடைக்கவில்லை.

படுகொலைக்கு பிறகு கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திற்கு 5000 ரூபாயும், காயம் பட்டவர்களுக்கு 3000 ரூபாயும் இழப்பீடு தொகையாக தரப்பட்டது.

1983 முடிவில் கலரத்தை ஆய்வு செய்ய



திவாரி கமிசன் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்து 1984ல் 600 பக்க அறிக்கையாக அரசிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் அது பல ஆண்டுகள் பொதுமக்கள் பார்வைக்கு கொடுக்கப்படவில்லை. RTI மனு வழியாக பலர் முயற்சித்து அந்த அறிக்கையை வெளிக்கொண்டு வந்தார்கள்.

ஆனால், அதிலும் ஏகப்பட்ட குழப்பங்கள் இருந்தது. பாதிக்கப்பட்டவர்கள் மீது பழி போடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் முதல் கருத்துக்கும் முடிவுக்குமே பெரும் முரண்பாடு காணப்பட்டது.

38 ஆண்டுகள் கடந்து இவ்வளவு கோரமாக நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கு ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை. தற்போது ஒரு தலைவர்கள் கூட இதனை பற்றி பேசுவதில்லை.

முஸ்லிம்களுக்கு ஒரு சட்டம்

முஸ்லிம்கள் பெயர் கொண்ட ஒரு சிறு குழு செய்யும் தவறுக்கு ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தை கேள்வி கேட்கும் சமூகம் என்றைக்காவது இவ்வளவு பேரை படுகொலை செய்த இந்துக்களை அந்த நிலைக்கு பொருத்தி பார்க்குமா? இங்கே இந்துக்கள் இந்துத்துவ தீவிரவாதிகளால் மூளைச்சலவை செய்யப்பட்டு இந்துத்துவ தீவிரவாதியாக மாறுகிறார்கள். அதனால் தான் முஸ்லிம்கள் எப்போதும் இந்துக்களை குறை சொல்வதே இல்லை. பிரச்சனைக்கு காரணமான இந்துத்துவ தீவிரவாதிகளை அடையாளப்படுத்துகிறார்கள்.

இந்தியாவின் மிக மோசமான இனப்படுகொலைகளில் நெல்லி படுகொலை தான் முதன்மையானது. ஆனால் அது திட்டமிட்டு மறக்கடிக்கப்பட்டு விட்டது. இந்த வரலாற்று நிகழ்வுகள் அடுத்த தலைமுறைக்கும் எடுத்து செல்லப்பட்ட வேண்டியவை.

இந்துத்துவ பொய் பிரச்சாரத்திற்கு பலியாகி பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். இந்த பொய் பிரச்சாரத்தை தற்போது இந்தியா முழுக்க ஊடக பலத்துடன் முன்பை விட வீரியமாக பரப்புகிறார்கள். இதனை முறியடிக்க வேண்டியது அமைதியை விரும்பும் ஒவ்வொரு இந்தியரின் கடமை.

– அபூ சித்திக்.

ஆதாரங்கள்: https://feminisminindia.com/2020/02/18/revisiting-assams-bloody-history-the-nellie-massacre-37-years-on/

https://caravanmagazine.in/vantage/thirty-two-years-later-nellie-massacre-remains-all-forgotten

https://scroll.in/article/829682/why-was-assams-nellie-massacre-of-1983-not-prevented-despite-intimations-of-violencea

# பிஜேபி ஆட்சியில் விடுதலை செய்யப்பட்ட தீவிரவாதிகள்

**மத்திய அரசாக இந்த பிஜேபி ஆட்சியில் அமர்ந்த இந்த ஏழு வருடங்களில் கல்வியாளர்கள், மாணவர்கள் என பலர் ஹிகிறிகி சட்டத்தின் கீழும், தேசத்துரோக சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் தீவிரவாதம் போன்ற பல கடுமையான குற்றத்தை செய்த குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.**

**இந்தியாவில் நீதி எப்படி மாறுபடுகிறது என்பதனையும் இதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இந்துத்துவ வாதிகளுக்கு ஒரு சட்டமும் இந்தியாவின் குடிமக்களுக்கு வெவ்வேறு சட்ட வழிமுறையும் பின்பற்றப்படுகிறதை உணர்வீர்கள்.**

*பாஜக ஆட்சியில நடைமுறைப்படுத்திய மக்கள் விரோத சட்டங்களை எதிர்ப்பவர்கள் எல்லாம் திட்டமிட்டு சிறைப்படுத்தப்படு கிறார்கள். உமர் காலித் போன்ற கல்வியாளர்கள் சிறையில் இருக்கிறார்கள். ஆனால், நாட்டுக்கு விரோதமாக செயல்படுபவர்கள் விரைவில் சிறை யிலிருந்து வெளிவந்து வந்து சுற்றி திரிகிறார்கள்.*

*இது பிஜேபி என்ற கட்சியின் நிலையை மட்டுமல்ல நமது நீதிமன்றங்களின் நிலையையும் தெளிவாக எடுத்துரைக்கிறது.*

*அவர்களின் சிலர் பட்டியல்*

## கபில் பைசாலா

*2020 சாஹின்பாக் போராட்டம் நாடு முழுவதும் அமைதியாக பரவலாக நடந்து கொண்டிருந்தது. அப்போது டெல்லியில் உத்திரபிரதேசத்தை சேர்ந்த கபில் பைசாலா எனும் இந்துத்துவவாதி கையில் துப்பாக்கியுடன் நடந்து வந்து இங்கே இந்தியாவில் இந்துக்கள் மட்டும் தான் வாழ வேண்டும் என்று கூறி ஜெய் ஸ்ரீராம் கோஷத்துடன் இருமுறை வானத்தை நோக்கி சுட்டான். அதற்குள் காவலர்கள் அந்த நபரை கைது செய்தார்கள்.*



*அவன் கையில் துப்பாக்கியுடன் நிற்கும் போட்டோவும், காவலர்கள் அங்கே கைது செய் யும் போட்டோவும் உலகம் முழுக்க பரவியது.*

*ஆனால் அந்த நபருக்கு ஒரே மாதத்தில் நீதிமன்றம் பிணை வழங்கியது.*

*கைது செய்யப்பட்ட கபில் பைசாலாவின் குழந்தையும், மனைவியையும் கருத்தில் கொண்டும், சம்பவ இடத்தில் இருந்து எதுவும் கைப்பற்றாததாலும் அவனுக்கு பிணை வழங்குவதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.*

*அதுமட்டுமல்ல இந்த கபில் பைசாலா மீது வெறும் இந்திய தண்டனை பிரிவான பிரிவு 336( அடுத்தவர்களுக்கு ஆபத்தை உருவாக்குதல்) மற்றும் பிரிவு 506(மிரட்டல்) உள்ளிட்ட வழக்குகள் தான் பதிவு செய்யப்பட்டிருந்தது.*

## மனிஷ் ஷிரோஹி

*2020 பிப்ரவரியில் டெல்லியில் முஸ்லிம் களுக்கெதிராக கலவரம் நிகழ்த்தப்பட்டது. அதில் இந்துத்துவ கும்பலுக்கு ஆயுதங்கள் கொடுத்து உதவிய மனிஷ் ஷிரோஹி கைது செய்யப்பட்டான்.*

கைது செய்யப்படும் போது அவனிடமிருந்து சட்டவிரோதமாக வைத்திருந்த துப்பாக்கிகளும், குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

ஆனால் அவனுக்கு அடுத்த மாதத்திலேயே நீதிமன்றம் பிணை கொடுத்தது. அதற்கு சொல் லப்பட்ட காரணம், கொரோனா நோயின் அபாயம் என்றார்கள்.

இதே சூழலில் தான் சஃபூரா ஜர்கார், தேவ கானாகாலிதா, நடாஷா ஆகியோர் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக மட்டுமே UAPA பிரிவின் கீழ் கைது செய்யப் பட்டார்கள். அவர்களிடமிருந்து எந்த ஆயுதமும் பறிமுதல் செய்யப்படவில்லை. ஆனால் இத்தகைய கல்வியாளர்கள் சிறையில் இருக்க இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

## மிலிந்த் எக்போடே

மாஹாராஷ்டிராவில் ஒவ்வொரு வருடமும் பீமா கொரிகியான் என்ற தலித்கள் பங்கெடுத்த போரை நினைவுப்படுத்தி நிகழ்ச்சிகள் கொண் டாடப்படும். அதில் 2018ல் நடந்த நிகழ்ச்சியில் வன்முறை ஏற்பட்டது. இதில் ஒருவர் உயிரிழந் தார். இதற்கு மூலக்காரணமாக அமைந்தவர் இந்துத்துவ அமைப்பின் தலைவரான மிலிந்த் எக்பொடே. அதனால் அவர் உடனடியாக கைது செய்யப்பட்டார். ஆனால் அந்த வருடம் ஏப்ரல் மாதமே அவர் நீதிமன்றதால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் இந்த சம்பவத்தில் அவருடன் கூட்டாளியாக இருந்த சம்பாஜியை காவல்துறை கைது செய்யவே இல்லை.

அப்போதைய பாஜகவின் முதல்வராக இருந்த தேவேந்திர பட்னாவிஸ் மிலிந்த் எக்போடே மீதிருந்த 6 வழக்கையும் தள்ளுபடி செய்தார்,

இதன் பிறகு இந்த வன்முறைக்கு காரண மானவகள் என காவல்துறையினரால் ஐந்து சமூகசெயற்பாட்டாளர்களும், வழக்கறிஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

தேவேந்திர பட்னாவிஸ் அரசு கவிழ்ந்து உத்தவ் தாக்கரே தலைமையிலான அரசு மஹா ராஷ்டிராவில் அமைந்ததும் உண்மை கண்டறிய ஒரு தனிக்குழுவை நியமிக்க இருந்தது. ஆனால் அதற்கும் மாநிலத்தின் அனுமதியின்றி இந்த வழக்கில் மத்திய அரசுக்கு நேரடியாக கீழுள்ள ழிமிகிவுக்கு மாற்றியது பிஜேபி அரசு.

## மேஜர் லீத்துல் கோகாய்

காஷ்மீரின் இராணுவத்தின் ஒரு பிரிவுக்கு மேஜராக இருப்பவர் மேஜர் லீத்துல் கோகாய். இவர் 2017ல் காஷ்மீரில் ஒரு அப்பாவி இளை ஞனை தன் வாகனத்தின் முன்னால் கேடயமாக கட்டி வைத்து பிரபலமானவர்.



ஒரு அப்பாவி இந்திய இளைஞனை எப்படி இவ்வாறு மனித நேயமற்று கட்டி வைக்கலாம் என்று பல்வேறு சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பிய போது அதனை காதில் வாங்காமல் அவருக்கு செயலுக்கு தனியொரு விருது கொடுத்து கவுரவித்தது பிஜேபி அரசு.

தனது பணி நேரத்தில் காஷ்மீர் பெண்ணு டன் வெளியே சுற்றி திரிந்ததற்கும் இவர் மீது விசாரணை நடந்தது.

இவர் மீது துறை ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு முன்னாள் இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் கோரிக்கை வைத்தார்கள். ஆனால் மத்திய பிஜேபி அரசு கண்டுகொள்ளவில்லை.

ஒரு முஸ்லிம் தனது பணிக்காலத்தில் தாடி வைத்த குற்றத்திற்காகவே இங்கு பணியிலிருந்து நீக்கப்படுகிறார். ஆனால் இந்துத்துவ சிந்தனை கொண்டவர்களுக்கு எந்த தடையும் இல்லை.

## சாமியார் அசீமானந்தா

மார்ச் 20 2019ல் சாமியார் அசீமானந்தா மீது மத்திய அரசு குற்றச்சாட்டை நிரூபிக்க தவறியது என்று குறிப்பிட்டு சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பில் இருந்து அவரை விடுதலை செய்தது,



80 உயிர்கள் கொல்லப்பட்ட சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டுவெடிப்பு, மெக்கா மசூதி குண்டுவெடிப் புக்கு காரணமானவர் என்று கைது செய்யப் பட்டவர்.

2014க்கு முன், அதாவது பிஜேபி ஆட்சிக்கு முன் இவர் மீது தீவிர விசாரணை நடத்தப்பட்டது. ழிமிகி இவர் மீதான குற்றங்களை வரிசையாக வெளியிட்டது ழிமிகி. ஆனால் 2014ல் மத்தியில் பிஜேபி அமர்ந்தவுடன் வழக்கு விசாரணை கை விடப்பட்டது. அசீமானந்தா முதலில் பிணை யில் விடுவிக்கப்பட்டார். பிறகு விடுதலையும் செய்யப்பட்டார்.

குண்டுவெடிப்பில் தன்னுடைய தனது இந்துத்துவ சகாக்களின் பங்கையும் நீதிபதிக்கு முன்னால் சாட்சியமாகவே கொடுத்திருந்தார் அசீமானந்தா.

இவர் தொடர்புடைய குண்டுவெடிப்பில் மட்டும் மொத்தம் 88 மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு இன்று வரை எந்த நீதியும் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

## சாத்வி பிரக்யா தாகூர்

மத்திய பிரதேசத்தை சேர்ந்த RSS உறுப்பினரான சாத்வி பிரக்யா தாகூர் 2008ல் மஹாராஷ்டிராவில் நடந்த மாலேகான் குண்டு வெடிப்பிற்கான மூலக்காரணம் என்று கைது செய்யப்பட்டார். இவர் மீது UAPA உட்பட பல்வேறு பிரிவின் கீழ் வழக்கு நடந்து வருகிறது. இந்த வழக்கின் அரசு தரப்பு வழக்கறிஞராக இருக்கும் ரோஷினி மத்திய பிஜேபி அரசின் தலையீடு இதில் நேரடியாக இருந்தது என்பதை வெளிப்படையாக குறிப்பிட்டார். 2015ல் நீதி மன்றத்தால் உடல்நிலையை காரணம் வைத்து பிணையில் வெளிவந்தார்.



2019ல் பிஜேபியில் சேர்ந்து தேர்தலில் நின்று வெற்றி பெற்று இன்று அமைச்சராகவும் இருக்கிறார். தற்போதும் தனது வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஆஜராகிறார். இவருக்கும் விரை வில் குற்றமற்ற, அப்பழுக்கற்ற் தியாகி என்ற பட்டத்தை மத்திய பிஜேபி அரசின் தலையீடு டன் நீதிமன்றம் சொல்வதற்கு வெகு நாட்கள் இல்லை.

## மாயா கோட்னானி

2002ல் நடந்த குஜராத் கலவரத்தில் நரோடா பாட்டியா என்ற இடத்தில் 36 குழந்தைகள் உட்பட 97 முஸிம்கள் கொடூரமாக கொல்லப்பட்டனர். இதற்கு மூலக்காரணமாக இருந்தவர் அன்றைக்கு மோடியின் முதலமைச்சர் அவையில் அமைச்சராக இருந்த மாயா கோட்னானி என்று கைது செய்யப்பட்டார்.

இதனை விசாரித்த விசாரணை நீதிமன்றம் 28 வருடங்கள் சிறை தண்டனை வழங்கியது.




அதன் பிறகு மோடி ஆட்சியில் அமர்ந்த அடுத்த மாதமே ஜூலை 2017ல் இவரது உடல்நிலையை காரணம் காட்டி குஜராத் உயர்நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியது. ஏப்ரல் 2018ல் இவரை விடுதலையும் செய்தது.

மூன்று வருடங்கள் கடந்து விசாரணை அமைப்புகள் இந்த உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக எந்த மேல் முறையீடும் செய்யவில்லை.

## டி.ஜி.வன்சாரா

மோடி குஜராத் முதல்வராக இருந்த போது குஜராத் காவல்துறை துணை கண்காணிப்பாள ராக பணியாற்றியவர் டி.ஜி.வன்சாரா. இவரது பணிக்காலத்தில் மோடியை கொல்வதற்காக வந்தவர்கள் என்று கூறி இஸ்ரத் ஜகான், சொஹ்ராபுதின் செய்க் மற்று அவரது மனைவி சுட்டுக்கொல்லப்பட்டனர். பிற்காலத்தில் விசார ணைக்கு பின்னர் இவை போலி எண்கவுண்டர் என்று தெரிய வந்தது.



இதற்காக வன்சாரா கைது செய்யப்பட்டார். 2013ல் சிறையில் இருக்கும் போது, அப்போது உள்துறை அமைச்சராக இருந்த அமிஷா தான் தன்னை தவறாக வழிநடத்தியாக கடிதம் எழுதினார்.

அதன் பின் மோடி ஆட்சிக்கு வந்ததும் 2015ல் பிணை வழங்கப்பட்டது. மே 2019ல் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதே நேரத்தில் சஞ்சீவ் பட் எண்ற குஜராத் காவல்துறை அதிகாரி 2002 குஜராத் கலவரத்தில் மோடியின் நேரடி உத்தவின் பேரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்று தன்னை சாட்சியாக வைட்து நீதிமன்றத்தை நாடினார். ஆனால், 1990ல் சிறையில் நடந்த ஒரு கொலையுடன் அவருடன் தொடர்புபடுத்தி ஜூன் 2019ல் அவருக்கு ஆயுள் தண்டனை விசாரணை நீதிமன் றத்தால் வழங்கப்பட்டது.

**இதுபோல் இன்னும் பல்வேறு சம்பவங்கள் இருக்கிறது. இங்கே இந்தியாவில் இந்துத்துவ வாதிகள் தினந்தோறும் முஸ்லிம்களை சுட்டுக் கொல்வோ, நாட்டை விட்டு வெளியேற்றுவோம் என்று வெறுப்புக்கருத்துகளை கூறினாலும் எந்த பிரச்சனையும் இல்லாமல் வெளியே சுற்றி திரியலாம். ஆனால் மோடி அரசுக்கு எதிராக பேசுவோர் காணாமால் ஆக்கப்படுகிறார்கள்.**

**- அபூ சித்திக்**



# நேதாஜி


## மதமும் மனிதநேய பணிகளும்



ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்

நேதாஜி சுதந்திரம் பெற போர் முறையை கையாள நினைத்தார். காந்திஜி அகிம்சை வழியைப் பின்பற்றி விடுதலை பெற விரும்பினார்.

கல்லூரி பருவத்திலேயே வெள்ளை நிறப் பேராசிரியர்களின் நிற பேதத்தை மாணவர் களோடு எதிர்த்தவர். காலரா பெருந்தொற்று காலத்தில் நண்பர்களோடு நோயாளி களை பராமரிக்கவும் மரணம் அடைந்தோரை நண்பர்களோடு சேர்ந்து இறுதி சடங்கு செய்தவர். அதனால் இளம் வயதிலேயே கல்கத்தா மேயராக, காங்கிரஸின் தேசியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றைய அரசு வாலி பராக இருந்த சுபாசை கண்ணை காரணம் காட்டி இராணுவத்தில் சேர்க்கவில்லை. பிற்காலத்தில் சுபாஸ் இந்திய தேசிய படையின் தலைமையை நடத்தினார்.



காந்திஜியும் சுபாஸும் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் எவ்வாறு போராடுவது என்பதிலேயே மாறுபாடிருந்தது. இருவரும் சமய நல்லிணக்கத்தை பெரிதும் விரும்பியவர்கள். நேதாஜியின் சிறைக்கடிதங்கள் சமய நல்லி ணக்கத்தை வலியுறுத்துகிறது என்பதை சி.ஆர். தாஸுக்கு அவர் எழுதிய கடிதம் மூலம் அறிய முடிகிறது.


சித்தரஞ்சன் தாஸ் அவரின் அரசியல் ஆசான் அவருக்கு சுபாஸ் எழுதிய கடிதங்கள் அவரின் மதச் சார்பின்மையை பறைசாற்றுகிறது.

இந்தியாவிலுள்ள சமயங்கள் சம்பிரதாயம் வகுப்புயாவும்ஒற்றுமையை பேணிவாழ்வதோடு இதை காப்பாற்ற வேண்டுமென்பதை சபத மெடுத்து வாழ்ந்தவர் சித்தரஞ்சன்தாஸ்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது போனால் அரை நிமிடம் கூட நாம் இவ்வுலகில் வாழ முடியாதென வாதித்தார். மனித சமூகம் ஒற்றுமை இல்லாவிட்டால் அழிந்தே போய் விடும் என தேச பந்தேச மக்களுக்கு சொன்னார். உலகில் ஒரு மூலையிலிருந்து வாணிபம் நடத்தப் பட்டது கூட ஓர் உடன்படிக்கை பேரில்தான வங்கத்தை வெள்ளையன் கர்சன் பிரபு இரண்டாக பிரித்தபோது இந்து முஸ்லிம் ஒன்றிணைந்து போராடினர். ஜன 23 நேதாஜியின் 125–வது பிறந்தநாள்.

பர்மா முஸ்லிம் பெரும் வணிகர் சுபாசியின் போராட்டத்திற்கு பொருள் ரீதியாக பங்காற்று கிறார் என அறிந்து அவரின் வியாபாரம் அரசால் முடக்கப்பட்டது.

நேதாஜியின் சுதந்திரப்படைக்கு பர்மா முஸ்லிம்கள் பொருளாதாரத்தை அள்ளி கொடுத்ததோடு கரீம் கனி போன்றோர் அமைச் சர்களாகவும் பள்ளப்பட்டி கலிலுர் ரஹ்மான் மௌலவி போன்றோர் அவரின் மொழி பெயர்ப் பாளர்களாகவும் இருந்துள்ளனர். அவரின்



ஜெய்ஹிந்த் செம்பகராகம் பிள்ளை குளச்சல் வம்சாவழியைச் சார்ந்தவரென வரலாற்றில் காணப்படுகிறது. இவர் மூதாதயர் குளச்சலிலிருந்து செம்பக இராமன்புதூரில் வசித்தவர்களென அறிகிறோம்.


இன்று நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபடாத ஓர் கூட்டம் காங்கிரஸின் பலகீனத்தை கையிலெடுத்து மத, ஜாதிய அரசியலை அரங்கேற்றி வருகிறது. இது ஒருகாலம் வரை நடக்கும் பிறகு இயற்கையாகவே ஓர் மாற்றம் இறைவன் ஏற்படுத்துவான்.

அல்லாஹுமஅஸ்ஸாபிரீன் இறைவன் பொறுமையாளர்களோடே இருக்கிறான் என்றபடி பொறுமையை கைகொண்டு வாழ்ந்தால் நிச்சயம் வெற்றி வரும்.

– தி இந்து நாளிதழ் ஜன.22–2021 கட்டுரையிலிருந்து


# மோடியின் சைக்கோ அதிகாரிகளை இனியும் மக்கள் நம்ப வேண்டாம்

## சுப்பிரமணியசாமி



பிரதமர் நரேந்திர மோடியின் சைக்கோ அதிகாரிகளை நம்புவதற்குப் பதிலாக, பொதுமக்கள் தாங்களாகவே கொரோனா கட்டுப்பாடுகளுடன் நடந்து கொள்வது நல்லது என்று, பாஜக தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி கூறியுள்ளார்.இதுகுறித்து சுப்பிரமணியசாமி தனது டுவிட்டர் பக்கத்தில், கருத்து ஒன்றைப் பதிவிட்டுள் ளார்.

அதில், ‘‘கொரோனா மூன்றாவது அலை குழந்தைகளை கடுமையாக பாதிக்கும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தேன். இப்போது நிதி ஆயோக் உறுப்பினர் மூன்றாவது அலை பேராபத்துகள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். அதனை உறுதியும் செய்துள்ளார். கொரோனாவை கட்டுப் படுத்துவதில் தோல்வியடைந்த பிரதமரின் சைக்கோ அதிகாரிகளுக்குப் பதிலாக, தீவிரமான கொரோனா கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக் குழுவே நமக்கு தேவை’’ என்று சுப்பிரமணியசாமி கடுமையாக விமர்சித்துள்ளார்.




# 2 வது சிலுவைப்போருக்கு நாங்கள் கண்டுபிடித்த காரணங்கள்..?

இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை உண்டாக்கும். இந்த இரண் டாவது அலைக்கு நாங்கள், இஸ்லாமோ ஃபோபியோ யூனிவர்ஸ் "Islamophobia Universe" உலகம் தழுவிய இஸ்லாமோ ஃபோபியா எனப் பெயர் வைத்தோம்.

அதில் இந்த மொத்த உலகையும் இஸ்லாமைக் கைவசப்படுத்திடும் பேராபத்து ஒன்று காத்திருக்கின்றது. அதற்காக பல்வேறு இயக்கங்களும் அமைப்புகளும் உலகமெங்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அல்காயிதா, மட்டுந்தான் உலகை ஆட்கொள்ள, உலகை இஸ்லாமிய மயமாக்கிட அந்த இயக்கம் என்றில்லை ; எகிப்தைச் சார்ந்த அல்இஹ்வான் அல் முஸ்லிமீன் என்ற இயக்கமும், இதற்காகத் தொடங்கப் பெற்றதே. இந்த இயக்கம் உலகெங் கும் பல்வேறு பெயர்களில் தொடங்கப்பெற்று பணியாற்றி வருகின்றது. முஸ்லிம் சகோதரத் துவம் என்ற இந்த அல்இஹ்வான் அல்முஸ்லி மீன் இயக்கத்தின் இப்போதைய நோக்கம்.

மேலை நாட்டு சமுதாயக் கட்டமைப்பிற்குப் பின் ஊடுருவி இஸ்லாமியக் கலாச்சாரத்திற்குள் அவர்களைக் கொண்டு வருவதாகும்.

இவர்களின் (இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தின்) பணிகள் உலகில், அங்கிங் கொனாதபடி எங்கும் வியாபித்து நிற்கின்றது.

இத்தோடு சவூதி அரேபியா தன்னுடைய

## அன்பார்ந்த வாசகர்களே!

சென்ற இதழில், ஜான் பெஃபர் நாங்கள் அதாவது, அமெரிக்காவின் தலைமையின்கீழ் முஸ்லிம்கள் மேல் நடத்திவரும் இப்போதைய தாக்குதல்கள்தாம் சிலுவைப்போர் 2.0

முதல் சிலுவைப் போரை நடத்திட நாங்கள் பல்வேறு பொய்களைச் சொல்லித்தான் கிருஸ்தவ உலகை உசுப்பி விட்டோம். அந்தப் பொய்களின் வழி ஒவ்வொரு கிருஸ்தவரும் முஸ்லிம்கள் மேல் ஓர் இனம் புரியாத வெறுப்பை வளர்த்துக் கொண்டார்கள். ஒரு கொலை வெறியையும் வளர்த்துக் கொண்டார்கள்.

அதேபோல் சிலுவைப் போர் 2.0வுக்காகவும் நாங்கள் பல்வேறு பொய்களையும் புனைந்துரை களையும் உலக மக்களிடம் பரப்பினோம். இதற்காக இடைவிடாமல் முயற்சிகளை செய்து வந்தோம்.

இஸ்லாத்தின் மீது முஸ்லிம்கள் மீதும் நாம் செய்து வரும் இந்த வெறுப்புப் பிரச்சாரம் முதலில் ஒரு குடிசைத் தொழிலாகத்தான் தொடங்கியது. (அதாவது முதலில் குறுகிய வட்டத்திற்குள்தான் தொடங்கியது) பின்னர் அதுபல பெரிய தொழிற் சாலைகளாக வளர்ந்துள்ளது என்கின்றார் ஏம்ஸ் பரோழி

அதாவது பல பெரிய நிறுவனங்கள் பயங்கர பண பலத்தோடும், பிரச்சாரப் பலத்தோடும் இஸ் லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை சதா சர்வ காலமும் வளர்த்துக் கொண்டே இருக் கின்றனர்.

இதுபற்றிய தகவல்கள் பலவற்றை இதே தலைப் பில் முந்தைய தொடர்களில் நாம் தந்திருக்கின் றோம். - வாசர்கள் அதை நினைவு கூறவும், இன்னும் ஜான் பெஃபர் சொல்வதைக் கேட்போம்....

அதாவது புது சிலுவைப்போரை (2.0)த் தொடங்குவதற்கு சொன்ன பொய்களை, வெறுப்புப் பிரச்சாரத்தைச் சொல்கின்றார் கேட்போம்...

வகாபிஇசத்தைப் பரப்பிடுவதற்காக ஆயிரக் கணக்கான பெட்ரோல் டாலர்

செய்து கொண்டிருக்கின்றது. இந்த வகாபிக இசம்தான் 18ஆம் நூற்றாண்டுகளில் இதர மதத்தைச் சகித்துக்கொள்ளல் இஸ்லாம் என அறியப்பட்டது. அது செய்த அலம்பல்கள் ஆயிரமாயிரம். அது முற்றிலும் சகிப்புத் தன்மையற்ற ஓர் இஸ்லாமியப் பிரிவு.

ஆனால் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த "வகாபி இசம்" நமது மேலை நாட்டு கலாச்சாரத்தோடு மோதுவதைவிட, தன் சொந்த கலாச்சாரத்தோடுதான் (இஸ்லாமியக் கலாச்சாரத்தோடும் அதிகமாக மோதியது. இந்த மோதலை நாங்கள் (இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்கள்) ஒன்றிலேவளர்த்தோம். அல்லது போர் (முஸ்லிம்களுக்கிடையே நடக்கும் இந்தப் போர்) முஸ்லிம்களின் மனங்களை வென்றிட நடக்கும் போர் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மேல் நடக்கும். போரைவிட இந்தப் போர் வெற்றிகரமானது. அமெரிக்காவின் தலைமையின்கீழ் இஸ்லாத்தின் மேல் தொடுக் கும் போர் பல நேரங்களில் அல்லது பெரும் பாலான நேரங்களில் தோற்று விடுகின்றது.

இந்தப் போர் அதாவது, முஸ்லிம்களுக் கிடையே நடக்கும் போர் நிரந்தரமானது. தொடர்ந்து முஸ்லிம் சமுதாயத்தைக் கொந்த ளிப்புகளுக்குள் தள்ளிவிடும் போர். இதனை பைநாட்டு விவகாரங்களை விவாதிக்கும் வில்லியம் பிளாப் என்பவர் தனது ஆய்வுகளின் வழி முடிவு செய்கின்றார்.




ஒதுங்கி நின்று பார்ப்பவர்களாக இருந்தோம். இந்தக் கூற்றை டேனியல் பைப்ஸ் அவர்களும் ரிளா அஸ்லன் அவர்களும் ஒத்துக்கொள் கின்றார்கள். (ஆதாரம் : Daniel Pipes Rela Aslan - Page-68)

சுன்னத்துல் ஜமாஅத்—ஐ சேர்ந்த வாகாபிகள் இஸ்லாத்திற்கு வகாபிகள் தரும் விளக்கத்தை எதிர்க்கின்றார்கள். அதேபோல், அல்காயிதா இஸ்லாத்திற்கு தரும் விளக்கத்தையும் சுன்னி வகாபிகள் (சுன்னத்துல் ஜமாஅத்தைச் சார்ந்த வர்கள்) அதேபோல் இந்த சுன்னி வகாபிகள் ஷியாக்களையும் எதிர்க்கின்றார்கள். அதேபோல் அவர்கள் இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் எதிர்க்கின்றார்கள். இந்த

அவர் கூறுகின்றார் :

"இஸ்லாமிய இயக்கங்களின் நோக்கம் இஸ்லாத்தில் விரவி விட்ட இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் களைந்து இஸ்லாத் தைக் தூய்மைப்படுத்துவது. அத்தோடு முஸ்லிம் களிடம் படிந்துவிட்ட மேலை நாட்டுத் தாக்கங் களை அப்புறப்படுத்துவது அல்லாமல் மேலை நாடுகளை வெற்றிகொள்வது அல்ல" — 69.

ஆனால், நாம் இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்கள் இஸ்லாம் எந்த நிலையிலும் தலையெடுத்து விடக்கூடாது என்றே விரும்பு கின்றோம். அந்த இலக்கில் எண்ணிலடங்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

— தொடரும் இன்ஷா அல்லாஹ்.

தலையங்கம்

# போர்க் குற்றங்கள்

சர்வதேச அளவில் போர்க் குற்றங்கள் என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. பலம் பொருந்திய ஆதிக்க வெறி பிடித்து நாடு பலவீமடைய நாடுகளை அச்சுறுத்துவதற்கும் பிற நாடுகளுடைய வளங்களை கொள்ளை அடிப்பதற்கும் குறிப்பிட்ட இனங்களை தலைதூக்கி விடாமல் அடிமைப்படுத்து வதற்கு அந்தந்த நாடுகள் மீதும் மக்களின் மீதும் போர் தொடுக்கின்றார்கள். இதில் எந்த வரம்புகளையும் இவர்கள் பேணுவது இல்லை.

கையில் சிக்கும் பெண்களை கற்பழிப்பது, சிறு பிள்ளைகளை, வயதானவர்களை என்று கூடப்பார்க்காமல் ஈவு, இரக்கமின்றி கொலை செய்வதும், அந்த நாட்டின் வளங்களைக் கொள்ளை அழித்து பொருளாதார பின்ன டைவை ஏற்படுத்துவதும், கல்வி நிறுவனங் கள், மருத்துவமனைகளை குறிவைத்து தகர்ப்பது, இதற்கும் மேலாக நச்சு வாய்ந்த வெடிகுண்டுகளை போட்டு அந்த நாட்டின் சந்ததிகளை ஊனமாக்குவது, கருவில் உள்ள குழந்தையைக் கூட விட்டு வைக்காமல் பாதிப்படையச் செய்வது, இப்படிப்பட்ட கொடூரங்களை நிகழ்த்தி வருகின்றார்கள்.

ஒருபக்கம் முஸ்லிம்களை தீவிரவாதியாக வும், இஸ்லாத்தை தீவிரவாதம் போதிக்கும் மதமாக உலகம் முழுவதும் அவதூறான செய்தி களை பரப்பிவிட்டு, நாங்கள்தான் பெரிய யோக்கியவான்கள், ஜனநாயகத்தின் காவ லாளிகள், வன்முறையை வெறுக்கக்கூடிய வர்கள் என்று பேசுகின்ற புத்தயிசம், கிறிஸ் துவம், கம்யூனிஸம், ஸியோனிச நாடுகள். இன்னொரு பக்கம் இப்படிப்பட்ட அழிச் சாட்டியங்களை நடத்தி வருகின்றார்கள்.

இஸ்லாம் மனிதனுக்கு தேவையான எல்லா சட்டங்களையும் தெளிவாக தந்துள் ளது. அதிலும் போர் குறித்துப் பல நெறிமுறை களை வகுத்துத் தந்துள்ளது. யாருடன் போர் செய்ய வேண்டும். எதற்காக போர் செய்ய வேண்டும். போரின்போது செய்யக்கூடாத விஷயங்கள் என பல ஒழுக்கமான வழிமுறை களை இஸ்லாம் இந்த உலக மக்களுக்கு தந்துள்ளது.

''உங்களை எதிர்த்துப் போர் புரிபவர் களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை.'' (அல்பகரா : 190)

இன்னும் அல்லாஹ்வின் பாதையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோரில் பலவீனமானவர்களின் (பாதுகாப்பு) விஷயத் திலும் நீங்கள் போர் செய்யாதிருக்க உங்க ளுக்கு என்ன நேர்ந்தது? (அவர்களோ) ''எங்கள் இறைவா, அக்கிரமக்காரர்கள் இருக்கும் இவ்வூரை விட்டு எங்களை நீ வெளியேற்று வாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து (தக்க) ஒரு பாதுகாவலை ஆக்குவாயாக. இன்னும் எங்களுக்கு உன்னிடமிருந்து ஓர் உதவியாள ரையும் ஏற்படுத்துவாயாக'' என்று பிரார்த் தனை செய்கிறார்கள். (அன்னிஸா – 75)

''பெண்களையும், குழந்தைகளையும் கொல்வதற்கு அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.''(புகாரீ)

போர்க்களத்தில் போரிடுங்கள்! வரம்பு மீறாதீர்கள். சிறுவர்களையும் மத குருமார் களை யும் கொல்லாதீர்கள் என முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள். (முஸ்லிம்)

அப்துல்லாஹ் பின் யஸீத் (ரழி) அவர்கள் கூறியதாவது :

கொள்ளையடிப்பதை, பிறர் பொருளை அவரது அனுமதியின்றி பலவர் பகிரங்கமாக அபகரித்துக்கொள்வதையும்(போரின்போது அல்லது பகைமையில் காரணத்தால்) ஒருவரின் அங்கங்களைச் சிதைப்பதையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். (புகாரீ)

முதலாம் கலீஃபா அபூபக்கர் (ரழி) சிரியாவுக்கு படையை அனுப்பி வைத்தபோது பத்து அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கினார்கள்.

1) பெண்கள், குழந்தைகள், முதியோர்களை கொல்லக்கூடாது.

2) உறுப்புகளை சிதைக்கக் கூடாது.

3) துறவிகளை, வணக்கசாலிகளைத் துன்புறுத்தக் கூடாது. அவர்களுடைய வழிபாட்டு இடங்களை தாக்கக்கூடாது.

4) பழம் தரும் கனிமரங்களை வெட்டக்கூடாது. வயல் நிலங்களை எரிக்கக்கூடாது.

5) வசிப்பிடங்களை பாழடைந்ததாக ஆக்கிவிடக்கூடாது.

6) கால்நடைகளை அழித்து விடாதீர்கள்.


7) வாக்கு மோசடியை விட்டு எப்பொழுதும் விலகியே இருக்க வேண்டும்.


8) கீழ்ப்படிய ஒத்துக்கொண்டவர்களுடைய உயிரும், பொருளும் முஸ்லிம் களுடைய உயிரையும், பொருளையும் போன்றே மதிக்கப்படவேண்டும்.

9) போர்ப் பொருள்களில் மோசடி செய்து விடாதீர்கள்.

10) போரில் புறமுதுகு காட்டி விடாதீர்கள்.

இஸ்லாத்தில் மட்டுமே மனிதனுக்கு தேவையான அனைத்து வழிகாட்டுதலும் இருக்கிறது. இப்படிப்பட்ட உண்மையான மார்க்கத்தை ஏற்பதின் மூலம்தான் இந்த உலகில் அமைதி நிலவும்.






# சீனாவில் இஸ்லாம்

சீனாவுக்கும் அரேபியாவுக்கும் இடையிலான வர்த்தகப் போக்குவரத்து மிகவும் தொன்மை யானது. ஆறாம் நூற்றாண்டிலேயே அதாவது, இஸ்லாம் அரேபியாவில் அறிமுகம் ஆவதற்கு முன்பே அரேபியர்கள் சீனாவோடு வியாபாரம் செய்து வந்தார்கள்.

இந்த வியாபாரம் தரை வழியாகவும், கடல் மார்க்கமாவுகம் நடந்தது. சிரியாவுக்கும், பார சீகத்திற்கும் வியாபார பொருள்கள் அரேபியா வழியே சென்றது. ஆறாம் நூற்றாண்டின் அரே பியா சீனா இவற்றிற்கிடையேயான வியாபா ரங்கள் சிலகாலம் இலங்கை வழியாகவும் நடந்தன.

ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சைனா, பாரசீகம் (இன்றைய ஈரான், ஈராக்) இடையே யான வர்த்தகம் பல்கிப் பெருகிறது. பாரசீக வளைகுடாவில் உள்ள "சிராத்" என்ற பட்டிணம் தான் அரேபியா பாரசீகம். சீனா ஆகியவற்றின் வியாபார மையமாக விளங்கிற்று.

இந்தக் காலக்கட்டத்தில் சீனாவில் T'ANG - ற்றேங் வம்சத்தாரின் ஆட்சி நடந்து கொண்டி ருந்தது. இந்த வம்சாவழி ஆட்சி கி.பி. 618–இல் தொடங்கி கி.பி. 907 வரை தொடர்ந்தது. அதாவது இஸ்லாம் அரபு பெருநிலத்தில் பரவி தழைத்துக் கொண்டிருந்த காலம் அது.!

சீனாவின் அதிகாரப் பூர்வமான ஆவணங் களின்படி அரபுக்கள் இந்தக் காலக்கட்டத்தில் தான் சீனாவில் குடியேறத் தொடங்கினார்கள். இந்த ஆவணங்களில் தங்கள் நாட்டில் வந்து குடியேறும் அரபுகளுக்கு 'மதினா'வில் ஓர் வலுவான அரசு இருக்கின்றது. அந்த அரசு சில விசாலமான மத நம்பிக்கைகளைக் கொண்டது என்றெல்லாம் பதிவு செய்திருக்கின்றார்கள்.

ஆக முதலில் முஸ்லிம்கள் சீனாவின் T'ANG-ற்றேங் வம்சா வழி ஆட்சியின் ஆரம்பக் காலக்கட்டத்தில், சீனாவுக்கு வந்தார்கள். அவர்கள் கேன்டன் 'Canton' என்ற இடத்தில் பெருமளவில் தங்கினார்கள்.

இப்படி கேன்டனில், அன்னாம், கம்போடியா, மதீனா ஆகிய நாடுகளிலிருந்தும் மக்கள் வந்து தங்கினார்கள். இப்படி வந்து குடியேறியவர்களை சீனாவின் ஆவணங்களில் Strangers "அறிமுக மில்லாதவர்கள்' என எழுதி வைத்திருக்கின்றார்கள்.

சீனாவின் கேன்டன் பகுதியில் வந்து குடியேறிய முஸ்லிம் களைப் பற்றி இப்படிப் பதிவு செய்திருக்கின்றார்கள்.

"அவர்கள் உருவமில்லாத இறைவனை வணங்கினார்கள். சிலையோ, பிம்பங்களோ அவர்களின் வணக்க ஸ்தலங்களில் இல்லை. மதீனாவின் ஆட்சி இந்தியாவுக்கு அருகாமை யில் உள்ளது. இந்த மதீனாவிலிருந்துதான் இந்த "அறிமுகமில்லாத வர்களின்" மதம் வருகின்றது. இது பௌத்தத்தைப் போலல்லாமல் வேறு கொள்கைகளைக் கொண்டது. இவர்கள் பன்றிக் கறியை உண்பதில்லை. மது குடிப்பதில்லை. அவர்கள் அறுக்காத, மற்றவர்கள் அறுக்கும், எல்லா இறைச்சிகளையும் தூய்மை அற்றவை எனக் கருதுகின்றார்கள். இவர்கள் 'ஹூஹூ' என அழைப்படுகின்றார்கள். இவர்கள் மிகவும் வசதியானவர்கள்."

இவர்கள் சீனாவின் ஆட்சியாளர்களின் அனுமதியை பெற்று பிரம்மிக்கத்தக்க வதியு மிடங்களைக் கட்டுகின்றார்கள். அவை நமது கட்டடக்கலையைப் போலல்லாமல் வேறு விதமாக இருக்கின்றன. வசதிமிக்க இவர்கள்

தங்கள் தலைவருக்குக் கட்டுப்பட்டு வாழுகின் றார்கள்.

இந்நிலையில் இஸ்லாம் பாரசீகத்தை வெற்றி கொண்டது. பாரசீகத்தின் கடைசி மன்னன் யாஸ்தாகிர்டு 'YAZDAGIRD' அழிந்த பின், அவன் மகன் தலைமறைவாக இருந்துகொண்டு பாரசீகத்தை மீண்டும் கைப்பற்றிட முயற்சிகளை மேற்கொண்டான். அவன் அரபுகளுக்கு எதிராக தனக்கு உதவி செய்திட சீனாவின் ஆட்சியாளர்களிடம் உதவி கேட்டான். இதற்கு சீனாவின் ஆட்சியாளர்கள் அரேபியா சீனாவிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் படை அனுப்ப முடியாது. ஆனால் உங்களுக்காகப் பரிந்து பேசிட ஒரு தூதரை அனுப்பி வைக்கின்றேன் என்றார். அவ்வாறே ஒரு தூதரை அனுப்பி வைத்தார்.

இந்த தூதர் பாரசீக மன்னருக்குப் பரிந்து பேசுவதோடு மதீனாவிலிருந்து உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் அரபு ஆட்சியின் பலத்தைப் பற்றியும் அறிந்து வந்திட வேண்டும்.

சீனாவின் இந்தத் தூதர் கலீஃபா உதுமான் (ரழி) அவர்களைச் சந்தித்தார். அவர் சீனா திரும்பும்போது (கி.பி. 651) ஓர் அரபு தளபதியை உதுமான் (ரழி) அவர்கள், அவருடன் அனுப்பி வைத்தார்கள். அவரை சீனாவின் ஆட்சியாளர் மிகவும் கண்ணியமாக வரவேற்றார்.

கலீஃபா உதுமான் (ரழி) அவர்கள் அனுப்பிய தூதர் சீனாவின் ஆட்சியாளரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார். அவர் அதை மறுத்தார். ஆனால் நிரம்ப பரிசு பொருள்களைத் தந்து கலீஃபா உதுமான் (ரழி) அவர்களின் தூதரை (தளபதியை) திரும்ப அனுப்பி வைத்தார். இது அரேபியாவுக்கும் சீனாவுக்குமிடையே ஏற்பட்ட முதல் ராஜாங்க உறவு என சீனத்து ஆவணங்கள் கூறுகின்றன.

கி.பி. 705 ஆண்டு முதல் 715 ஆம் ஆண்டு வரை வலீத் அவர்கள், இஸ்லாமிய அரசின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்கள். அவர் குதைபா பின் முஸ்லிம் என்ற போர் வீரரை 'குராஸான்' பகுதியின் (கவர்னராக) ஆளுநராக நியமித்தார். இவர் ஆக்ஸஸ் ஆற்றைக் கடந்து சென்று இஸ்லாத்தைப் பரப்பினார். எதிர்ப்பட்ட போர்




களில் ஏராளமான வெற்றிகளைக் குவித்தார். புக்காரா – சாமர்கண்ட் போன்ற பல பகுதிகள் இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ் வந்தன. அப்படியே தொடர்ந்து சீனாவின் கிழக்கு எல்லைவரை இஸ்லாத்தைக் கொண்டு சென்றார்.

இந்நிலையில் இஸ்லாமிய உலகுக்கும் – சீனாவுக்கும் இருந்த அகண்ட இடைவெளி. கூப்பிடுதூரமாகக் குறைந்தது. கவர்னர் குதைபா பின் முஸ்லிம் அவர்கள் மீண்டும் சீனாவின் ஆட்சி யாளரை கி.பி. 723–இல் இஸ்லாத்திற்கு அழைத்திட ஓர் குழுவை அனுப்பினார். சீனாவின் ஆட்சியாளர் இப்பொழுதும் இஸ்லாத்தை ஏற்றிடவில்லை. ஆனால் ஏராளமான பரிசுப் பொருள்களைத் தந்து அனுப்பி வைத்தார்.

சீனாவின் ஆவணங்கள் கி.பி. 726இல் இஸ்லாமிய ஆட்சியின் தூதராக சீனாவில் இராஜாங்க உறவுக்காக நியமிக்கப்பட்ட 'சுலைமான்' என்பவரைப் பற்றி மிகவும் கிலாகித்துப் பேசுகின்றன. இவர் இஸ்லாமிய உலகின் ஆட்சித் தலைவர் 'ஹிஸாம்' (Hisam) அவர்களால் நியமிக்கப்பட்டவர். இந்தத் தூதர், சுலைமான் அவர்கள், இஸ்லாமிய உலகுக்கும் சீனாவுக்குமிடையில் ஒரு பெரும் நெருக்கத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்தினார்.

இந்நிலையில் சீனாவின் ஆட்சியாளருக்கு

ஒரு நெருக்கடி. அது சிலசீனத்துக் கிளர்ச்சி யாளர்கள் சீனாவின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந் துவிட்டார்கள். அப்போதைய சீனாவின் ஆட்சி யாளர் சுவான்துங் 'Hsuan Tsung'. இவர் கிளர்ச் சியாளர்களின் கிளர்ச்சியைத் தாக்குப்பிடிக்க இயலாமல் ஆட்சிப் பொறுப்பைத் தன் மகனின் கைகளில் ஒப்படைத்துவிட்டு ஓடிவிட்டார். அவரது மகன் ‘சுதுங்’ 'Sutung' கிளர்ச்சியாளர் களிடமிருந்து ஆட்சியைக்காப்பாற்றிட கடுமை யாகப் போராடினார். இதற்குள் கிளர்ச்சியாளர் இரண்டு முக்கிய நகரங்களைக் கைப்பற்றி விட்டார்கள்.

செய்வதறியாது திணறிய (சீனாவின்) ஆட்சி யாளர் (கி.பி.756இல்) (அப்பாசிய கலீஃபா) இஸ்லாமிய உலகின் ஆட்சித் தலைவர் அவர் களிடம் இராணுவ உதவிகளைக் கேட்டார்கள். உடனேயே உதவினார்கள் கலீஃபா மன்சூர் அவர்கள். ஒருபெரும் படையை அனுப்பினார் கள். இஸ்லாமியப் படைகளின் உதவியோடு கிளர்ச்சியாளர்களை அடக்கினார்கள். இழந்த இரண்டு நகரங்களையும் (SI-NGAN, HO-NAN-FU) மீட்டார். இந்த இஸ்லாமியப் படைகள் ஆட்சியாளருக்கு உதவியாக சீனாவிலேயே தங்கின. பின்னர் அங்கேயே திருமணங்களை முடித்து வாழ்ந்திடத் தொடங்கினார்கள். நிரந்தரமாகத் தங்கி விட்டார்கள். இதனால் சீனாவில் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்தது.

கி.பி.1200களில்மங்கோலியர்கள்(இவர்கள் சீனாவுக்குமிகவும்நெருக்கமாகவாழ்ந்தவர்கள்) முஸ்லிம் உலகின்மேல் கொடூரமான தாக்குதல் களை நடத்தினார்கள். முஸ்லிம் உலகம் முற்றாக அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம். இதனால் நிலை குலைந்தது முஸ்லிம் உலகம். முஸ்லிம்களில் பலர் தஞ்சம் தேடி சீனாவுக்குள் புகுந்தார்கள். மங்கோலியர்களின், முஸ்லிம் உலகின் மீதான கோரமான போர், “ஐய்யின் ஜாலூத்” என்னுடத்தில் வைத்து கி.பி. 1281−ல் (ரமழான் 25 கிஜ்ரத்திற்குப் பின் 658 ஆம் ஆண்டு) ஓர் முடிவுக்கு வந்தது. சுல்தான் பேய்பர்ஸ் (இவர் சுல்தான், அல் மாலிக் அல் முஸஃப்பர் செய்ஃபுதீன் அவர்களின் தளபதி) மங்கோலியர்களை முற்றாகத் தோற்கடித்தார். அதன்பின் போர்க்களத்தில் முஸ்லிம்கள் என்றால் மங்கோலியர்கள் போரைப் பற்றியே பேசுவதில்லை. ஒரு நூற்றாண்டுக்குள் மங்கோலியர்கள் அத்தனை பேரும் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

ஐய்ன்−ஜாலூத் வெற்றிக்குப் பின் மங்கோலி யர்கள் பற்றிய பயம் முஸ்லிம்களின் நெஞ்சங் களை விட்டகன்றது. பின்னர் மங்கோலியர்கள் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தை ஏற்றார்கள். ஆனாலும் தொடக்கக் காலத்தில் மங்கோலி யர்களின் தாக்கு தலுக்கு அஞ்சி சீன தேசத்தில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள், தங்கள் நாடுகளுக் குத் திரும்பிடவில்லை. சீனாவிலேயே தங்கி அங்கே திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்திடத் தொடங்கினார்கள்.

இதனிடையே முஸ்லிம்கள் சீனாவின் ஆட்சி யில்முக்கியபதவிகளில்அமர்த்தப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக1244இல் அப்துல் ரஹ்மான் என்பவர் சீனாவின் அரசவையில் நிதி அமைச் சராக நியமிக்கப்பட்டார். வரிகளை விதிப்பதும், வசூலிப்பதும் இவருடைய பொறுப்பு.

அதேபோல் 1259இல் சம்சுதீன் என்பவர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் (முஸ்லிம் நாடாகிய) புக்காராவைச் சார்ந்தவர். இவரை மக்கள் “செய்யித் அஜால்” என அழைத்தார்கள்.

சீனாவின் நிதி அமைச்சராக இருந்த அவர் பின்னாளில் சீனாவின் “யுனான்” பகுதியின் கவர்னராக (ஆளுநராக) நியமிக்கப் பட்டார். இவருடைய கிளைஞர்கள் சீனாவில் இஸ்லாத்தை நிலை நாட்டுவதில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்து காட்டினார்கள்.

எடுத்துக்காட்டாக இவருடைய பேரன், 1335இல் சீனாவின் ஆட்சியாளரிடமிருந்து “இஸ்லாம்தான் "True And Pure Religion" − உண்மையான, தூய்மையான மார்க்கம்” என்ற பிரகடனத்தைப் பெற்றார். இன்றைய நாள் வரைக்கும் இந்தப் பிரகடனம் அப்படியே இருக்கின்றது.

செய்யீத் அஜாலுடைய இன்பனொரு கிளைஞர் 1420 இல்சீனாவின் ஆட்சியாளர் களிடமிருந்த மஸ்ஜித்களை நிர்மானிக்கும்

அனுமதியைப் பெற்றார்.

அத்தோடு சீனாவின் முக்கிய நகரங்களில் மஸ்ஜித்களை நிறுவினார்.

தொடர்ந்து சீனாவின் ஆட்சியாளர் மஸ்ஜித்களை நிர்வகிக்க சீனாவைச் சார்ந்த ஒருவரை நியமிக்காமல், சீனாவில் வந்து குடியமர்ந்த ஒருவரின் வாரிசை நியமித்த்து. சில எதிர்ப்புகளைப் பெற்றது.

சீனாவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமானது. சீனாவின் மக்களிடம் கருத்து சிந்தனை இவற்றில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. சீனத்து மக்களும் இஸ்லாத்தை ஏற்றார்கள்.


ஆதாரம் : THe Preaching of Islam, J.W.Arnold : P.294-311

சீனாவில்இஸ்லாத்தின்தாக்கம்அதிகமாகவே இஸ்லாம் இனி சீனாவை ஆட்கொண்டு விடும் (ஜாக்கிரதை) என்ற ஓலமும், ஒப்பாறியும் (இஸ்லாமோபோஃபியா) வளர்ந்தது.

பிற்றை நாள்களில் சீனா கம்யூனிசத்தின் பொதுவுடமை தத்துவத்தில் வீழ்ந்தபோது சீனாவில் வாழ்ந்த முஸ்லிம்கள், அரசின் மிகப்பெரிய எதிரிகளாகப் பார்க்கப்பட்டார்கள். அந்த முஸ்லிம்களை கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் பாணியில் சித்திரவதைகளைச் செய்து இஸ்லாத்திலிருந்து தடம் பிறழச் செய்திடும் பணிகளை மேற்கொண்டார்கள்.

அண்மைக் காலங்களில் தடுப்புக்காவல் முகாம்களில் முஸ்லிம்களைப் பெரும் எண்ணிக்கையில் அடைத்து வைத்து சொல்லொண்ணா கொடுமைகளுக்கு ஆளாக்கி வருகின்றார்கள். அதே நேரத்தில் அந்தத் தகவல்கள் வெளியே சென்று விடாமல் தடுத்தும் வருகின்றார்கள். தடைகளைத் தாண்டி அந்தத் தகவல்களை திரட்டி நெஞ்சத்தை தொடும் ஒரு கட்டுரையாக "வைகறை வெளிச்சம்" ஆசிரியர் குழுவைச் சார்ந்த தம்பி அபூசித்திக் அவர்கள் தந்தார்கள்.

வளர்ந்துவரும் இந்த இளம் ஊடகவியலாளரின் கட்டுரை "மே – 2019" வைகறை இதழில் வெளிவந்தது. அன்று முதலே அதனை




நூலாகத் தந்திட வேண்டும் என வாசர்களும், சமுதாய ஆர்வலர்களும் கேட்டார்கள்.

கொரோனாவின் கொடுமைகளால் உடனேயே நூலாகத் தந்திட இயலவில்லை.

காலந்தாழ்தேனும் செய்வதைச் செய் என இப்போது நூலாக வெளி வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

வாசகர்கள் தங்கள் ஆதரவைத் தருவார்கள் என அவாவு கின்றோம். இன்ஷா அல்லாஹ்.

"வேர்கள் பதிப்பகத்தின்" இலக்கியப் பணியும், இஸ்லாமியப் பணிகளும் தொடருகின்றன. மாஷா அல்லாஹ்!

**யா அல்லாஹ் இதனை உன்னுடைய பாதையில் எடுத்து வைக்கும் எங்களுடைய பணிகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்வாயாக!**

*சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லீம்கள் என்ற நூலுக்கு "வைகறை வெளிச்சம்" ஆசிரியர் தந்த பதிப்புரை.*

# சீனாவின் பண்பாடும் பெண்களும்

சீனாவில் புழக்கத்திலிருக்கும் இலக்கியங்களில் பெண்களை "Waters of Woes" துன்பங்களின் தடாகம் என அழைக்கப்படுகின்றார்கள். பெண்கள் செல்வங்களை சீரழிக்கும் ஷைத் தான்கள் என்றே பார்க்கப்படுகின்றார்கள்.

சைனாவின் சமூக வாழ்க்கை ஓட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு சௌத்தவர்களாகவே கருதப்படுகின்றார்கள். அதனால் அவளுக்கு எந்த உரிமையும் வழங்கப்படுவதில்லை.

வாழ்நாள் முழுவதும் பெண்கள் 'மைனர்' ராகவே கருதப்படுகின்றாள். அதாவது முதிர்ச்சி யடையாதவளாகவே கருதப்படுகின்றாள்.

கணவன் நினைத்தால் எப்போது வேண்டு மானாலும் மனைவியை வேண்டாம் எனச் சொல்லலாம். இன்னொரு ஆணுக்கு வைப்பாட் டியாக அவன் தன் மனைவியை விற்றுவிடலாம்.

வாழ்க்கையில் எதிர்ப்படும் விபரீதங்களால் அவள் விதவையாகிவிட்டால், அவள் தன் கணவனின் குடும்பச் சொத்தாக ஆகிவிடுவாள். அவளுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை இல்லை.

இத்தனை அவலங்களோடும் சைனாவில் அடிமைத்தனமும் - அடிமை முறையிருந்தது. குழந்தைகள் இறந்தவுடன் கொலை செய்யும் பழக்கமுமிருந்தது. 1937-இல் 20 லட்சம் அடிமைப் பெண்கள் சைனாவில் வாழ்ந்ததாக ஆவணங்களிருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளாக - இன்னும் சொன்னால் இரண்டாம் உலக மகா யுத்தம் வரை சைனாவின் மக்கள் நிலங்களை மொத்தமாக, சொந்தமாக வைத்திருந்த ஜமீன்களின் பிடியில் தான் இருந்தார்கள்.

கான்பூசியல் தத்துவங்கள் அந்த மக்களை நிலக்கிழார்களுக்கு ஒட்டுமொத்தமாக அடிமையாக வைத்திருந்தது.

அது முற்போக்கு சிந்தனைகளுக்கு முட்டுக் கட்டைகளாக இருந்தன. அடுத்தவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு வக்காலாத்து வாங்கியது. சைனாவில் என்ன வழக்கிலிருந் ததோ, அதுவே நீடிக்க வேண்டும் என அந்தத் தத்துவம்.



கான்பூசியல் தத்துவம் வாதாடியது. இந்த சிந்தனை ஓட்டத்தைப் பெற்ற ஒரு சமுதாயத்தில் பெண்களில் உரிமைகள் என்ற பேச்சே இல்லை.

## இந்து இசம்

இந்து மதத்திலும் பெண்கள் ஏறத்தாழ இப்படியே நடத்தப்படுகிறார்கள்.

“நியோக் "Niyoq" என்ற தத்துவம் பெண்ணி னத்தின் இழிவு. ஒழுக்கக்கேட்டின் உச்சம்.

இந்த நியோக் – என்ற தத்துவத்தின் கீழ் ஒரு பெண்ணால், ஆண் குழந்தையைப் பெற்றிட இயலவில்லையென்றால், அவள் தன் கணவனை விடுத்து வோறொரு ஆணுடன் உறவு வைத்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றிட வேண்டும்.

நேர்மையாக ஒழுக்கப்படலத்துடன் சிந்திக் கும் இந்து ஆண்களே, இந்த ஒழுக்கக்கேட்டை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

நல்ல ஒழுக்கத்தை உயிராகக் கருதும் அனை வரும் இதனை எதிர்த்தாக வேண்டும் என்றொரு நிலையைத்தான் எடுக்க முடியும், எடுக்க வேண்டும்.


எந்தப் பெண்ணாலும் இப்படியொரு அவமா னத்தைத் தாங்கிட இயலாது.

இந்துக்களிடையே ‘அஷிறா’ என அழைக்கப் படும் மணமுறை தந்தை, மகளை ஒரு விலைக்கு விற்று விடுவதேயாகும். அவளை வாங்குபவன் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம். அவளுக்கு தந்தையின் சொத்துக்களிலோ, தன்னை வாங்குபவனின் சொத்திலோ எந்த பாத்யதையுமில்லை.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொட்டுக் கட்டும் முறை. அதாவது பெண்களை கடவுளுக்குத் திருமணம் செய்துகொள்ளும் முறை இன்றும் வழக்கத்திலிருக்கின்றது.

இந்தத் தொட்டுக்கட்டும் முறையின் மூலம் அவள் ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் மனைவி யாக் கப்படுகின்றாள். அதனால் யார் வேண்டு மானாலும் அவளைத் தன் மனைவியைப்போல் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உண்மையைச் சொன்னால் அவள் கோயில் அறங்காவலர்கள், பூசாரிகள், தர்மகர்த்தாக்கள் இவர்களின் போகப் பொருளாகப் பயன்



பட்டாள்.

கோயிலுக்கு வரும் உயர்ந்த மனிதர்கள் என அழைக்கப்படும் ஒழுக்கக்கேடர்களுக்கும் அவளே விருந்து.

வேதகாலங்கள், புராணகாலங்கள் இவற்றில் பெண்கள் போரில் கொடுக்கப்படும் வெற்றிப் பொருளாக கருதப்பட்டாள்.

வெற்றி பெற்றவர்கள் பெண்களைத் தங்களுக்குப் போரில் கிடைத்தப் பொருளாக அந்தப் பெண்களைக் கவர்ந்து சென்றார்கள்.

இந்தத் திருமணங்கள் உடைக்கவியலாத விபச்சாரம், கணவனுக்குத் துரோகம் இவை போன்றவை நிகழ்ந்தாலும் கணவனிடமிருந்து மனைவிகள் பிரிந்திட இயலாது.

அதேபோல்கணவன்இறந்துபோய்விட்டால் கூட மனைவி அவனிடமிருந்து விடுதலையைக் கோரிட இயலாது.

கணவன் இறந்துவிட்டால் மனைவியை அதே உடன் கட்டையில் வைத்து எரித்திடும் சாதி வழக்கம் கோரமானது. கொடுமையானது.

விதவைப் பெண்களை இன்றைக்கும் ஆலயங்களில் அடையாளமாகவும், அவமானச் சின்னமாகவும், அறுவறுகத்தக்கப் பொருளா கவும் பார்க்கப்படுகின்றார்கள். உடன் கட்டை ஏற்காத பெண்கள் காலமெல்லாம் சமுதாயத்தின் வைப்பப் பார்வையால் வெறுப்பான நடவடிக் கைகளால் எரிக்கப்படுகின்றாள். இந்த நித்திய வெப்பத்தைவிட ஒரே நாளில் உடன் கட்டையில் எரிந்துவிடுவதே மேல் எனக் கருதுகின்றாள். அந்த அளவுக்கு அவளது வாழ்க்கை அலைக்கழிக்கப்

படுகின்றது.

மகா பாரதத்தில் பெண்களின் நிலை என்ற நூலில் பேராசிரியை இந்திரா அவர்கள் இப்படி எழுதுகின்றார்கள்.

1) ''பெண்களைவிடப் பாவமான படைப்புகள் எதுவுமில்லை. பெண் எரியும் நெருப்பு கத்தியின் கூரிய முஷைன. அவளது உடல் இவை அனைத்தும் சேர்ந்ததுதான். ஆண்கள் அவளை நேசிக்கக்கூடாது. காரணம் அவள்தான் அழிவு.''

2) மனுவின் விதிப்படி ஒரு பெண் தன் விருப்பப்படி எதையும் செய்திடக்கூடாது. அவள் தன் விருப்பப்படி இயங்கும் உரிமை இல்லாதவள்.

3) அவள் தன் சொந்த வீட்டில்கூட எதையும் தன் விருப்பப்படி செய்திடக் கூடாது.

4) குழந்தைப் பருவத்தில் ஒரு பெண் தன் தந்தையைச் சார்ந்து இருந்திட வேண்டும். இளமையில் அவள் தன் கணவனைச் சார்ந்து இருந்திட வேண்டும். அதன்பின் – கணவனுக்குப் பின் தன் மகன்களைச் சார்ந்து இருந்திட வேண்டும். இப்படி அல்லாமல் அவள் ஒருபோதும் தன் இஷ்டப்படி அல்லது விருப்பப்படி செயல்காட்டிடக் கூடாது.

Sir, பண்டாரக்கர் என்பவர் "பாவம் செய்த ஆத்மாதான் பெண்ணாகப் பிறக்கும். இப்படியொரு எண்ணத்தைத்தான் பகவத்கீதை ஏற்படுத்துகின்றது."

## புத்த மதம்

5) புத்த மதத்தின் அடிப்படைப் பார்வையே தவறானது. பெண்களுடனிருந்தால் முக்தியடைய முடியாது என்பது புத்த மதத்தின் அடிப்படைகளுள் ஒன்றானது.

இதுவே புத்தமதம் பெண்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை பறைசாற்றிடப் போதுமானது.

திருமணமுறை என்பதும், அதோடு தொடர்புடைய மண வாழ்க்கை என்பதும் புத்த மதத்திற்கு அறுவெறுப்பானவை. உலக இன்பங்களை அழிக்க வேண்டும் என்பது அவர்களின் இலக்கு. அதற்காக உழைத்திட வேண்டும், அதற்கான அடிப்படைத் தகுதி திருமணம் செய்யாமருப்பதாகும்.

வரலாற்று ஆய்வாளர் : வெஸ்ட்டான் மார்க்,

ஆண்களைக் கெடுக்கும் அத்தனை கவர்ச்சியும் பெண்களிடம் உண்டு. உலகில் மிகவும் ஆபத்தானவர்கள். பெண்கள் ஆண்களின் மனதை எல்லா நிலைகளிலிருந்தும் திருப்பிடும் தனித் தன்மைக் கொண்டவர்கள்.

புத்தமதம் பெண்களைகப் பற்றி என்ன சொல்லுகின்றது என்பதை 'பெற்றானி' என்ற புத்தமத அறிஞர் 'World's Religion என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

அவள் அளவிட இயலாத ஆழம். நீரில் அலையும் மீனைப் போன்றவர்கள். எந்த இலக்கும் இல்லாதவர்கள். அவளிடம் உண்மை தான் பொய். பொய்தான் உண்மை.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.





# நோய் எதிர்ப்பாற்றல் ஏன் குறைகிறது?

மருத்துவர் கு.சிவராமன்

குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பாற்றல் பெருமளவில் குறைந்து வருகிறது. அடிப்படைக் காரணம் குழந்தைகளின் உணவுமுறை, அவர்கள் சாப்பிடக்கூடிய உணவை முதலில் இருந்து கவனித்துப் பார்க்க வேண்டும். குழந்தைகள் காலை உணவை பெரும்பாலும் சாப்பிடுவதில்லை. பள்ளி செல்லும் அவசரத்தில் பாலில் எதையேனும் கலந்துகொடுப்பது அல்லது வாங்கி வைத்திருக்கும் ஃப்ளேக்ஸை பாலில் போட்டு கொடுத்துவிடுவது வழக்கம். வெளிநாட்டுப் பொருள், அதில் வைட்டமின் உள்ளது, ஃபைபர் உள்ளது என அவற்றைக் கொடுத்து வளர்க்கிறோம். வயதானவர்களுக்கும் ஓட்ஸ் ஃப்ளேக்ஸை கொடுக்கிறோம். இதன்மூலம் எடை குறையும் என்று நம்புகிறோம்.

சோளம், ஓட்ஸ் எல்லாம் தானிய உணவுகள் தாம். ஆனால், நாம் அதை தானியமாக வாங்குவதில்லையே. ஃப்ளேக்ஸ் எனப்படும் அவலை எங்கு வாங்குகிறோம். ஃப்ளேக்ஸ் தயாரிக்க 100 டிகிரியில் வேக வைக்கப்பட்டு, அதில் உள்ள நீர்ச்சத்தெல்லாம் உறிஞ்சி எடுக்கப்பட்ட பின், அடித்து தட்டையாக்கி, அது கெடாமல் இருப்பதற்கு சோடியம் பென்சோஹைட், வெளிக் காற்றை உறிஞ்சிவிடக்கூடதென்பதற்கு நைட்ரஜன் பிளஸ் பேக்கிங், கலையைக் கூட்ட பொட்டாசியம் நைட்ரேட் அல்லது மோனோ சோடியம் க்ளூட்டமேட் போன்ற கெமிக்கல்ஸ் கலந்துதான் ஃப்ளேக்ஸ் வருகிறது.

இப்படியான அவர்களின் உணவு முறைகளினால்தான் இயல்பான நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து வருகிறது.

இதேபோல் சாண்ட்விச்சும் பழக்கப்பட்டு விட்டது. முன்பெல்லாம் உடல்நிலை சரியில்லாதவர்களுக்கும் காய்ச்சல் வந்தவர்களுக்கும் ரொட்டியை வாங்கித்தந்து பழக்கிவிட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் சென்னையிலுள்ள ராஜாஜி மருத்துவமனை, ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே ஒரே மருத்துவமனை இதுதான். இப்போது GH (Government General Hospital) என்றார்கள். ஆங்கிலேயர்களுக்கென்று கட்டப்பட்ட மருத்துவமனையாக அன்றிருந்தது. அதன்பின் எல்லோரும் அங்கு சிகிச்சை பெற ஆரம்பித்தனர். மருத்துவமும் ஆங்கிலேயர் என்பதால் அதோடு சேர்த்து ரொட்டியையும் கொடுத்து அனுப்பினார். இதைத் தவறாக புரிந்து கொண்ட நம் மக்கள் காய்ச்சலுக்கு ரொட்டி சாப்பிட்டால் குணமாகுமென நினைத்து அதையே தொடர்ந்தனர்.

காய்ச்சலுக்கு மிகச் சிறந்தது கஞ்சியும் இட்லியும்தாம்; ரொட்டி கிடையாது. மிக எளிதாக ஜீரணிக்கக்கூடிய, இயல்பிலேயே புரோபயாட்டிக் என்று சொல்லக்கூடிய, குடலுக்கு நல்லது செய்யக்கூடிய நுண்ணுயிரிகளை கொண்டிருக்கிற கஞ்சியும் இட்லியும்தாம் மிகச் சிறப்பான உணவு.

நம் குழந்தைகளுக்கு, சிறு வயது முதல் நம் ஊர் தானியங்களையே உணவாகக் கொடுத்துப் பழக்குங்கள். அதுவும் சமீபகாலமாக The Eat Lancet Commission அறிக்கையின்படி 80%

காய்கறிகள், பழங்களைத் தான் உணவாக கொடுக்க வேண்டும். மீதம் 20% மட்டுமே அரிசியோ, சோளமோ, கோதுமையோ, தானியமோ கொடுக்கப்பட வேண்டுமென்கிறார்கள்.



சிகப்பரிசி, பழுப்பு நிற அரிசி, கருப்பு நிறத்திலிருக்கக்கூடிய கவுனி அரிசியைப் பயன்படுத்துங்கள், கொல்கத்தா விவசாய ஆராய்ச்சி மையத்திலிருந்து ஒரு அறிக்கை வந்தபோது முதன் முதலாக கவுனி அரிசியைப் பற்றிப் படிக்க நேர்ந்தது. ''கருப்பு அரிசியானது நிறைய திபத்திய மன்னர்கள் பயன்படுத்தியது. அது புற்று நோய்க்குக்கூட பயன்படக்கூடிய அரிசி! அதை ஆங்கிலத்தில் Kaala Rice என்றும் கூறுவர். திபெத்திலும் பர்மாவிலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது.'' என்று எழுதப்பட்டிருந்தது. அந்த அரிசியை எடுத்துப் பார்த்து, நண்பர்கள் மூலம் அறிந்தபோதுதான் தெரிந்தது. அது காரைக்குடி கவுனி அரிசி என்பது!

அந்த அரிசியில் இருக்கக்கூடிய கருப்பு நிறத்திற்குக் காரணம் ஆந்தோசைனின்ஸ் எனப்படும் பொருள்கள். இது நேரடியாக புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான சத்து அதில் உள்ளது.

அதேபோல சிவப்பரிசியில் ஒரு வகையான 'மாப்பிள்ளைச் சம்பா'வில் உள்ள சிவப்பு நிறத்துக்குக் காரணம் லைகோபின். இதுவும் ஆண்களுக்கு ஏற்படும் ஒருவகைப் புற்றுநோய் வராமல் தடுக்கும்.

நம்முடைய உணவில் பெருமளவு கீரைகள், காய்கறிகள், பழங்கள் இருக்க வேண்டும். அதோடு, தானிய வகைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். அதுவும் நம் மரபு தானியங்களான சிவப்பரிசி, கவுனி, பிரௌன் அரிசி, வரகு, திணை ஆகியவற்றை சேர்த்துக்கொள்வதே உடலுக்கு நல்லது. இப்படியான நிறமுள்ள அரிசிகள் சர்க்கரைச் சத்தை வேகமாக ரத்தத்துக்குள் தள்ளாது. எந்தப் பொருள் சரக்கரைச் சத்தை ரத்தத்துக்குள் வேகமாகத் தள்ளுகிறதோ அது சர்க்கரை நோய்க்கும் புறந்று நோய்க்கும் வழிவகுக்கும்.



நல்ல நார்ச்சத்துள்ள காய்கறிகளும் நிறமிச் சத்துள்ள அரிசியுமே உடலுக்கு நல்லது!

– நன்றி :
முதுமை எனும்
பூங்காற்று.

*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் – ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்– டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது– ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் – முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் – செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்– பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை – டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.